

# SOGIESC
# பற்றிய அறிமுகம்

# தொகுதி 01

பாலீர்ப்பு, பாலின அடையாளங்கள் மற்றும்
வெளிப்பாடு மற்றும் பால் பண்புகள் பற்றிய அறிமுகம் (SOGIESC)

## கண்ணோட்டம்

இந்த பயிற்சி வழங்குநர் வழிகாட்டியை உருவாக்குகின்ற 4 தொகுதிகளில் இதுவே முதலாவதாகும். இந்தத் தொகுதி பல்வேறுபட்ட பாலீர்ப்பு, பாலின அடையாளங்கள் மற்றும் வெளிப்பாடுகள், அத்தோடு பால் பண்புகள் (SOGIESC) பற்றிய முக்கியமான கருத்துக்களை பங்கேற்பாளருக்கு அறிமுகப்படுத்துகிறது. அதே நேரத்தில், இந்தத் தொகுதி பல்வேறுபட்ட SOGIESC கொண்டுள்ள மக்கள் குறித்த பங்கேற்பாளர்களின் பெறுமானங்கள் மற்றும் மனப்பாங்குகளில் செல்வாக்கு செலுத்த முயல்கின்றது. இந்தத் தொகுதியானது குயர் இயக்கத்தின் நிகழ்வுகளை கலந்துரையாடுவதன் மூலம் இலங்கையிலுள்ள LGBTIQ மக்களின் உரிமைகளுக்கான ஊடகங்களின் மற்றும் பிற பங்குதாரர்களின் துலங்கலை ஆராய்கின்றது. நாள் முடிவடைவதற்கு முன்பாக பல்வேறுபட்ட SOGIESC சார்ந்த உரிமைகளைப் பற்றிய முக்கியமான சர்வதேசரீதியான அபிவிருத்திகளை ஆராய்வதன் மூலம் இத்தொகுதியானது LGBTIQ மக்கள் முகங்கொடுக்கின்ற பாகுபாடு மற்றும் வன்முறையை பற்றி கலந்துரையாடுகின்றது.

இந்தத் தொகுதி ஸ்லைடுகள், செயற்பாடுகள், மற்றும் கலந்துரையாடல்களை தொடர்பாடல் முறைகளாக பயன்படுத்துகின்றது. 30 பங்கேற்பாளர்களை கொண்ட ஒரு குழுவிற்கு பயிற்சியளிப்பதற்காக இந்த அமர்வுகளைப் பயன்படுத்த முடியும். இந்தத் தொகுதியை செயற்படுத்துவதற்கு 2 பயிற்சி வழங்குநர்கள் தேவைப்படுவர். அத்தோடு இவ் அமர்வுகளை அர்த்தமுள்ளதாக ஆக்குவதற்காக இந்த தொகுதியை செயற்படுத்துவதில் LGBTIQ சமூகங்களைச் சேர்ந்த நிபுணர்களை இணைத்துகொள்வது சிறந்தது எனப் பரிந்துரைக்கப்படுகின்றது.

இந்தத் தொகுதி முழுவதும், பல்வேறுபட்ட SOGIESC கொண்டுள்ள மக்கள் தொடர்பான இலங்கையின் சமூக அரசியல் மற்றும் சட்டச்சூழல் பற்றி கலந்துரையாடப்படுகின்றது. இது இலங்கையின் தண்டனைச்சட்டக் கோவையின், s.365 மற்றும் s.365A ஆகியவற்றின் அடிப்படையில் ஒரே பாலின கூட்டாளர்களுக்கு இடையிலான பாலியல் உறவு குற்றமாக்கப் படுவதன் தாக்கத்தை முன்னிலைப்படுத்துகின்றது. இத் தொகுதி சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறைகளில் ஈடுபடுவதற்காக இலங்கை சிவில் சமூக அமைப்புகளால் தொகுக்கப்பட்ட ஆவணங்கள் உட்பட இலங்கையிலுள்ள LGBTIQ மக்களின் வாழ்நாள் அனுபவத்திலான ஆதாரங்களை குறிப்பிடுவதோடு அவற்றில் குறிப்பிடத்தக்கவற்றை மேற்கோள் காட்டுகின்றது.



## இணைய குறிப்பு

தொகுதி 1 மற்றும் விளக்கக்காட்சியின் இணைய பதிப்பை அணுக,
கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்:

அல்லது உங்கள் உலாவியில் கீழே உள்ள URL இணைப்பை தட்டச்சு செய்யவும்.

**www.shorturl.at/dejH2**

## அமர்வுத் திட்டம்

நேரம்: மு.ப 09:00 – பி.ப 05:00 (6 மணித்தியாலங்கள்)

| ஆரம்பிக்கின்ற நேரம் | ஒதுக்கப்பட்ட நேரம் | அமர்வு |
|---|---|---|
| மு.ப 09:00 | 15 நிமிடங்கள் | வரவேற்பு & அறிமுகம் |
| மு.ப 09:30 | 40 நிமிடங்கள் | அமர்வு 01: பல்வேறுபட்ட பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடு பற்றிய அறிமுகம் *செயற்பாடு மற்றும் கலந்துரையாடல்* |
| மு.ப 10.15 | 40 நிமிடங்கள் | அமர்வு 02: பல்வேறுபட்ட பாலீர்ப்பு பற்றிய அறிமுகம் *செயற்பாடு மற்றும் கலந்துரையாடல்* |
| | 20 நிமிடங்கள் | அமர்வு 03: ஆசியாவின் ஒரே பாலின உறவை பற்றிய சட்டங்கள் *ஒரு வரைபடத்தின் உதவியுடனான கலந்துரையாடல்* |
| | 20 நிமிடங்கள் | அமர்வு 04: பொதுவான அச்சங்கள் மற்றும் பொதுவான கட்டுக்கதைகள் *கேள்விகளால் தூண்டப்படுகின்ற கலந்துரையாடல்* |
| மு.ப 11:15 | 15 நிமிடங்கள் | இடைவேளை |
| மு.ப 11:30 | 1 மணித்தியாலம் | அமர்வு 03: இலங்கையின் குயர் உரிமைகள் இயக்கம் – ஒரு காலவரிசை *செயற்பாடு மற்றும் கலந்துரையாடல்* |
| பி.ப 12:30 | 1 மணித்தியாலம் | மதியநேர இடைவேளை |
| பி.ப 01:30 | 1 மணித்தியாலம் | அமர்வு 04: சொற்களின் முக்கியத்துவம் *கலந்துரையாடல்* |
| பி.ப 02:00 | 30 நிமிடங்கள் | அமர்வு 05: SOGIESCஇன் பன்முகத்தன்மை அத்தோடு இலங்கை ஊடகங்கள் *கலந்துரையாடல்* |
| பி.ப 02:30 | 45 நிமிடங்கள் | அமர்வு 06: இலங்கையிலுள்ள பல்வேறுபட்ட SOGIESC கொண்டுள்ள மக்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் வன்முறை *முன்வைத்தல் மற்றும் கேள்வி பதில்* |
| பி.ப 03:45 | 15 நிமிடங்கள் | இடைவேளை |
| பி.ப 04.00 | 45 நிமிடங்கள் | அமர்வு 07: பலதரப்பட்ட SOGIESC கொண்டுள்ள மக்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச ரீதியான முன்னேற்றங்கள் *முன்வைத்தல் மற்றும் கேள்வி பதில்* |
| பி.ப 04:45 | 15 நிமிடங்கள் | நிறைவு மற்றும் இறுதியான எண்ணங்கள் |

# அமர்வு 01: பல்வேறுபட்ட பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடு பற்றிய அறிமுகம்

*இரண்டு செயற்பாடுகள்: தனிநாடகம் அத்தோடு தனிப்பட்ட பிரதிபலிப்பு மற்றும் பகிர்வு, ஸ்லைடுகளின் உதவியுடன் ஒரு கலந்துரையாடல்.*

## நேரம்

40 நிமிடங்கள்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- பிறப்பால் ஒதுக்கப்பட்ட பால் மற்றும் பாலினத்தை வேறுபடுத்த முடியும்.
- பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாட்டின் பன்முகத்தன்மையை தெளிவாக கூற முடியும்.
- பால் பண்புகள் மற்றும் இடையிலிங்கத்தவ நபர் என்பதன் பொருளை வரையறுக்க முடியும்.

## தேவையான கருவிகள்

- குறிப்பு அட்டைகள் (notepads) மற்றும் பேனாக்கள்

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்:

- இந்த அமர்வில் பாலினம் மற்றும் பாலுணர்வின் பன்முகத்தன்மையை பற்றி நாம் கற்றுக்கொள்வோமென விளக்கவும். முதலில் பாலினத்தை பற்றி புரிந்துகொள்ள முயற்சிப்போம் என்பதை விளக்கவும்.

- **செயற்பாடு (10 நிமிடங்கள்):** அனைத்து குழுக்களிலும் பாலின சமநிலையை உறுதிசெய்து, பங்கேற்பாளர்களை நான்கு குழுக்களாக பிரிக்கவும். பங்கேற்பாளர்களை ஓர் அரை வட்டத்தில் நிற்குமாறு அழைக்கவும்.

- முதலாவது குழுவின் பங்கேற்பாளர்களை 'ஒரு ஆணைப் போல நடித்துக்காட்டுமாறு' அழைக்கவும். இரண்டாவது குழுவின் பங்கேற்பாளர்களை 'ஒரு பெண்ணைப் போல நடித்துக்காட்டுமாறு'

அழைக்கவும். மூன்றாவது குழுவை ‘ஒரு ஆண் சொல்லக்கூடிய ஏதேனும் ஒன்றை சொல்லுமாறு’ அழைக்கவும் அத்தோடு நான்காவது குழுவை ‘ஒரு பெண் சொல்லக்கூடிய ஏதேனும் ஒன்றை சொல்லுமாறு’ அழைக்கவும். குழுவின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் நடுவில் வந்து 'ஒரு ஆணைப் போல' அல்லது 'ஒரு பெண்ணைப் போல' ஏதாவது ஒன்றை சொல்வதற்கோ/ ஏதாவது ஒன்றை செய்வதற்கோ ஒரு வாய்ப்பு வழங்கவும்.

- அனைவருக்கும் ஒரு கரகோஷம் வழங்கவும் அத்தோடு பங்கேற்பாளர்கள் என்ன செய்தார்கள்/ சொன்னார்கள் என்பதை நினைவில் கொள்ளவும்.

- ஆண்கள் மற்றும் பெண்களை பற்றி ஏதேனும் ஒரே மாதிரியான கருத்துகள் இருந்தால் நினைவில் கொள்ளவும். சொற்களின் உள்ளடக்கம் மற்றும் செயல்களின் பொருளைப் பொருட்படுத்தாமல், நாங்கள் ஆண்கள் மற்றும் பெண்களுடன் சில நடத்தைகளை தொடர்புபடுத்துகின்றோம் என்பதை விளக்கவும்.

- எமது நடத்தைகள், பாணி, நாம் நடக்கின்ற மற்றும் பேசுகின்ற விதம் ஆகியவற்றின் மூலம் நாம் ஆடை அணிந்து கொள்கின்ற விதம் மற்றும் எங்களை நாங்களே முன்வைக்கின்ற விதம் போன்றவை பாலின வெளிப்பாட்டை பற்றியது என்பதை விளக்கவும். எம்மை நாம் உணரும் பால்நிலையின் அடிப்படையில் பெண்மையான வழியில் அல்லது ஆண்மையான வழியில் எம்மை நாம் முன்வைக்கிறோம்.

- சில நேரங்களில் ஒரு நபர் தன்னை இருபால் கூறுகளையும் ஒருங்கே பெற்றிருக்கின்ற வழியில் (androgynous) முன்வைக்கக்கூடும். அதாவது, அவர்கள் ஆண்பால் மற்றும் பெண்பால் வெளிப்பாடுகளின் ஒரு கலவையை கொண்டிருப்பார்கள் என்பதாகும். சில நேரங்களில் அவர்களிடம் பெண்பால் அல்லது ஆண்பால் என வகைப்படுத்தப்படமுடியாத நடத்தைகள் இருக்கலாம். அதாவது, அவர்களிடம் ஒரு தெளிவற்ற பாலின வெளிப்பாடு உள்ளது என்பதாகும்.

- பெண்பால், ஆண்பால், இருபால் கூறுகளையும் ஒருங்கே பெற்றிருக்கின்ற, மற்றும் தெளிவற்ற போன்றவை அனைத்தும் பாலின வெளிப்பாடுகளாகும்.

- பின்பு பாலின அடையாளத்தை பற்றி கலந்துரையாடவும். எமது பாலின உணர்வின் அடிப்படையில் நாம் எம்மை முன்வைக்கின்றோம், அதன்பின் இந்த உணர்வை நாம் எவ்வாறு பெறுகின்றோம்? என நீங்கள் வினவலாம்.

- செயற்பாடு (10 நிமிடங்கள்): பங்கேற்பாளர்களை சில நிமிடங்களை எடுக்கச்சொல்லி, அவர்கள் ஒரு பெண் அல்லது ஒரு ஆண் என்பதை

எப்போது, எவ்வாறு புரிந்துகொண்டார்கள் என்பதை எழுதச்சொல்லவும். ஒரு சில பங்கேற்பாளர்களிடம் அவர்களுடைய அனுபவத்தை பகிர்ந்து கொள்ளுமாறு கேட்கவும்.

- ஸ்லைடுகளின் உதவியுடன், ஒரு குழந்தை பிறக்கின்ற பொழுது, பிறப்புறுப்புக்களின் அடிப்படையில் பாலானது ஆண் அல்லது பெண் என ஒதுக்கப்படுகின்றது என்பதை விளக்கவும். பின்னர் குழந்தையானது ஒரு குறிப்பிட்ட வழியில்தான் நடந்துகொள்ள வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கின்றது/ சொல்கின்றது. உதாரணமாக, ஒரு பெண்ணுக்கு இளஞ்சிவப்பு நிற ஆடைகள், பொம்மைகள், சமையல் பாத்திரங்கள், ஒப்பனை உபகரணங்கள், மற்றும் இளவரசிகளை பற்றிய புத்தகங்கள் போன்றவை கொடுக்கப்படுகின்றன. ஒரு ஆணுக்கு ஒரு நீல நிற சட்டை, கிரிக்கெட் பந்தும் மட்டையும், ஒரு விளையாட்டுக் கார், ஒரு விளையாட்டுத் துப்பாக்கி, மீநாயகர்கள் (superheroes) பற்றிய புத்தகங்கள் போன்றவை கொடுக்கப்படுகின்றன. இந்த வகையில் சமூகமானது குழந்தைகளுக்கு பாலினத்தை அவர்கள் சமூகத்தில் நடந்துகொள்ள வேண்டிய ஒரு முறையாகவே கற்பிக்கின்றது. பாலின வகிபாகங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டவை, அல்லது 'சமூகரீதியாகக் கட்டமைக்கப்பட்டவை' ஆகும்.

- அதே நேரத்தில் வளரும் குழந்தையானது ஒரு பாலினத்துடன் தன்னைத்தானே அடையாளம் காணத் தொடங்குகின்றது. இது ஒரு சுயமான ஆழமான உள்ளுணர்வாகும். இதை நாம் **பாலின அடையாளம்** என அழைக்கின்றோம். சில நேரங்களில் மக்கள் பிறப்பிலேயே நியமிக்கப்பட்ட பாலினத்துடன் இயல்பாக தொடர்புபட்ட பாலினமாகவே தங்களை தாங்களே அடையாளம் காணுகின்றார்கள் - அதாவது பிறப்பிலேயே ஆணென நியமிக்கப்பட்ட ஒரு குழந்தையானது தான் ஒரு ஆண், என்கின்ற ஒரு ஆழமான உணர்வை கொண்டிருப்பதை அடையாளம் காணும். அல்லது பிறப்பிலேயே பெண்ணென நியமிக்கப்பட்ட ஒரு குழந்தையானது தான் ஒரு பெண், என்கின்ற ஒரு ஆழமான உணர்வை கொண்டிருப்பதை அடையாளம் காணும். அத்தகைய நபர்களை நாங்கள் சிஸ் (CIS) பாலின மக்கள் என்று அழைக்கின்றோம்.

- சிலவேளைகளில், பிறப்பிலேயே ஆணென நியமிக்கப்பட்ட மற்றும் அவர்கள் ஒரு ஆணென்று சொல்லப்பட்டு அத்தோடு அவர்கள் ஒரு ஆணைப் போல நடந்துகொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு குழந்தைக்கு, அவர்கள் ஒரு பெண் என்கின்ற ஒரு ஆழமான உள்ளுணர்வு இருக்கலாம். அவர்கள் ஆடைகளை அணிவதற்கும், மற்ற பெண்களுடன் விளையாடுவதற்கும், மற்றும் சமூகத்தில் ஒரு பெண்ணை போல நடந்து கொள்வதற்கும் விரும்புவார்கள். அதேபோல, பிறப்பிலேயே ஒரு பெண்ணென நியமிக்கப்பட்ட மற்றும் சமூகத்தில் நடந்துகொள்ள

வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற ஒரு பெண், அவர்கள் உண்மையிலேயே ஒரு ஆண் என்று உணரலாம். இது ஒரு மனநோயோ அல்லது ஒரு ஒழுங்கின்மையோ அல்ல. இது இயற்கையானது. அத்தகைய நபர் தங்களுடைய பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு, மற்றும் பாலியல் உறுப்புக்களை கூட மாற்றுவதற்கு 'மாற்றம்' என்கின்ற ஒரு செயன்முறையினூடாக செல்ல முடியும். அத்தகைய ஒரு மாற்றத்தினூடாக செல்ல விரும்புகின்ற ஒரு நபர் ஒரு **மாற்றுப்பாலினத்தவராக** அடையாளம் காணப்படுவார். .



- பிறப்பிலேயே ஆணாக நியமிக்கப்பட்ட, ஒரு பெண்ணாக அடையாளம் காணப்படுகின்ற அத்தோடு ஒரு பெண்ணாக மாற விரும்புகின்ற நபரே ஒரு மாற்றுப்பாலின பெண் அல்லது திருநங்கை என்று அழைக்கப்படுகின்றார். பிறப்பிலேயே பெண்ணாக நியமிக்கப்பட்ட, ஒரு ஆணாக அடையாளம் காணப்படுகின்ற அத்தோடு ஒரு ஆணாக மாற விரும்புகின்ற நபரே ஒரு மாற்றுப்பாலின ஆண் அல்லது திருநம்பி என்று அழைக்கப்படுகின்றார். இந்த நபர்கள் ஒரு பாலினத்திலிருந்து இன்னொரு பாலினத்திற்கு மாறுவதற்கு அறுவை சிகிச்சை அல்லது ஹோர்மோன் சிகிச்சையில் செயற்பட வேண்டிய அல்லது உண்மையில் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

- பாலின அடையாளம் என்பது ஆழமான உள்ளுணர்வு தொடர்பானது ஆகும். அவர்களுடைய தோற்றம் மற்றும் அவர்களுடைய பிறப்புறுப்புக்கள் போன்றவை இதனை சரியாக பிரதிநிதித்துவப் படுத்தாதிருக்கக்கூடும்.

- எமது முதலாவது செயற்பாட்டில், நாம் ஒரு ஆணைப் போல செயற்பட்டிருந்தாலும், ஒரு பெண்ணை போல செயற்பட்டிருந்தாலும், இவை மட்டுமே பாலினங்கள் கிடையாது. 'ஆண்' மற்றும் 'பெண்' என வரையறுக்கப்படுகின்ற பாலினத்தை புரிந்துகொள்வது என்பது ஒரு துவித விளக்கம் (binary interpretation) என அழைக்கப்படுகின்றது. இது தவறானது. ஒரு நபர் ஒரு பெண்ணாக, ஒரு ஆணாக, ஒரு திருநங்கையாக, ஒரு திருநம்பியாக, ஒரு நிலையற்ற பாலினத்தவராக (Gender Fluid), ஒரு துவிதமல்லாத (non-binary) பாலினத்தவராக, ஒரு பாலின இணக்கமற்ற நபராக அல்லது ஒரு பாலின குயர் நபராக அடையாளம் காணப்பட முடியும். பிந்திய 4 அடையாளங்கள் அனைத்தும் துவிதமல்லாத (non-binary) அடையாளங்கள் என்ற பொருளில் ஒத்தவையாக இருக்கின்றன, அத்தோடு ஒரு நபர் தன்னுடைய பாலினத்தை விளக்குகின்ற விதத்தின் அடிப்படையில் அவை வேறுபடுகின்றன. ஒரு நிலையற்ற பாலினத்தவரானவர் திடமான பால்நிலை இல்லாதவராக இருக்கின்றார். அவர் வெவ்வேறு காலகட்டங்களின் பொழுது வெவ்வேறான பாலினத்தை அடையாளம்

கண்டு வெளிப்படுத்தக் கூடும். ஒரு பாலின துவிதமல்லாத நபர் ஒரு ஆணென அல்லது ஒரு பெண்ணென அடையாளம் காணப்படாத ஒருவராக இருக்கின்றார். ஒரு பாலின இணக்கமற்ற நபர் பாலின வகிபாகங்கள் மற்றும் வெளிப்பாடுகளுக்கு இணங்காத ஒருவராக இருக்கின்றார். ஒரு பாலின குயர் நபரானவர் ஆண்மை மற்றும் பெண்மையின் கலவையான ஒரு அடையாளத்தை கொண்ட ஆண்மை, பெண்மை உடைய ஒருவராக, அல்லது ஆண்மை அல்லது பெண்மை இரண்டுமே அல்லாதவராக இருக்கலாம். துவிதத்தன்மைக்கு வெளியே உள்ள பாலின அடையாளங்களை குறிப்பதற்கு 'பாலின குயர்' மற்றும் 'துவிதமல்லாத பாலினங்கள்' போன்றவை பொதுச்சொற்களாக பயன்படுத்தப்படுகின்றன.

- பெண்மைப் பண்புகளும் ஆண்மைப் பண்புகளும் ஒரு தொடர்பத்தின் இரு பக்கங்களாக புரிந்துகொள்ளப்படக்கூடியவை. ஒரு நபர் இந்த தொடர்பத்தில் எங்கேயாகிலும் அதேபோல அதற்கு வெளியிலும் நிற்க முடியும்.

## குறிப்பு

- வரலாற்று ரீதியாக மாற்றுப்பாலினத்தவ மக்கள் தெற்காசிய கலாசாரத்தின் பகுதியாக இருந்திருக்கின்றனர் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

- இருக்குவேதம், மகாபாரதம் மற்றும் இராமாயணம் போன்ற 2000-3000 ஆண்டுகளுக்கு முந்திய இந்திய சமஸ்கிருத நூல்கள் ஒரு மூன்றாம் பாலினத்தை ஆவணப்படுத்துகின்றன: மகாபாரதம் ஒரு திருநம்பியான, ஷிகண்டியை பற்றி கூறுகின்றது. இராமாயணத்தில், "ஆண்கள் மற்றும் பெண்கள்" தன்னை பின்பற்ற வேண்டாம் என்று இராமன் கேட்கின்ற பொழுது, ஹிஜ்ராக்கள் பின்தொடர்கின்றனர் அத்தோடு அவர் அவர்களை ஆசீர்வதிக்கின்றார். ஹிஜ்ரா என்பது தெற்காசியாவிலுள்ள சில திருநங்கைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கலாச்சார அடையாளமாகும்.

- தாய்லாந்து மற்றும் இலங்கையில் பின்பற்றப்படுகின்ற பௌத்த மதத்தின் வடிவமாக இருக்கின்ற பாளி திரிபீடகமானது, "பல்வேறு வகையான மாற்றுப்பாலினத்தவர்கள் மற்றும் தனிநபர்களை பற்றி குறிப்பிடுகின்றது - பெண்ணை-போன்ற ஆண் (வேபுரிசிகா), பாலியல் தெளிவின்மை (சம்பின்னா), இரு பாலினங்களின் பண்புகளையும் கொண்டவர்கள் (உபதோவ்யஞ்ஜனக), போன்றவை."

- பங்கேற்பாளர்களிடம் மாற்றுப்பாலினத்தவராக இருப்பது பற்றி ஏதேனும் கேள்விகள் இருந்தால், அவர்களிடம் கேட்கவும். சாத்தியமான சில கேள்விகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

- இலங்கையில் மாற்றுப்பாலினத்தவராக இருப்பது சட்டபூர்வமானதா?

- ஆம், 2016 ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் பாலினத்தை மாற்றுவதற்கான ஒரு செயன்முறையை நிறுவுகின்ற ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது. இப்பொழுது, இலங்கையில் ஒரு மாற்றுப்பாலினத்தவர் தன்னுடைய உண்மையான பாலினத்தை குறிப்பிடுவதற்காக அவருடைய பிறப்பு சான்றிதழ் மற்றும் அடையாள ஆவணங்களை மாற்றிக்கொள்ள முடியும்.

- இலங்கையில் ஒரு மாற்றுப்பாலினத்தவர் திருமணம் செய்துகொள்ள முடியுமா?

- ஒரு மாற்றுப்பாலினத்தவர் தன்னுடைய சரியான பாலினத்தை காட்டுகின்ற ஒரு அடையாள அட்டையை வைத்திருந்தால், அவர் எதிர் பாலினத்தவரை திருமணம் செய்துகொள்ள முடியும்.

- ஒரு நபர் ஒரு மாற்றுப்பாலினத்தவராக இருப்பதற்கு என்ன காரணம்?

- ஒரு நபர் ஒரு மாற்றுப்பாலினத்தவராக இருப்பதற்கு என்ன காரணமென்று அறியப்படவில்லை.

- ஒரு நபருடைய பாலினம் உங்களுக்கு எப்படி தெரியும்?

- ஒரு நபருடைய பாலினம் என்னவென்பதை கண்டுபிடிப்பதற்கான சிறந்த வழி அவர்களிடமே கேட்பதாகும். அவர்களுடைய விருப்பமான பிரதிப்பெயர் என்னவென்றும் நீங்கள் கேட்கலாம். அவள் (she/her), அவன் (he/him), மற்றும் அவர்கள் (they/them) போன்றவை ஒரு நபருடைய விருப்பமான பிரதிப்பெயராக இருக்கலாம். வழமையாக பாலின துவிதமல்லாத மக்கள் தமது விருப்பமான பிரதிப்பெயராக அவர்கள் (they/them) என்பதைப் பயன்படுத்துகின்றார்கள்.

சிலநேரங்களில், மாற்றுப்பாலினத்தவரை இடையிலிங்கத்தவராக குழப்பிக்கொள்ளும் நிலை உண்டு. ஆகவே, ஸ்லைடுகளை பயன்படுத்துவதன் மூலம் மாற்றுப்பாலினத்தவருக்கும் இடையிலிங்கத்தவருக்கும் இடையிலான வித்தியாசத்தை விளக்கலாம்.

- சிலநேரங்களில் மாற்றுப்பாலினத்தவரை இடையிலிங்கத்தவராக குழப்பிக்கொள்ளும் நிலை உண்டு என்பதை விளக்கவும். இந்த குழப்பமானது சிலநேரங்களில் எமது சட்டக் கட்டமைப்புக்களிலும்கூட பரவிச்செல்கின்றது. உதாரணமாக, 2018 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் மாற்றுப்பாலினத்தவர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டமானது

இடையிலிங்கத்தவர்களையும் உள்ளடக்கி 'மாற்றுப்பாலினத்தவர்களை' வரையறுக்கின்றது. இது தவறானது.

- வெளிப்புற உடற்கூறியலை ஆய்வுசெய்வதன் மூலம் பிறப்பிலேயே பாலினம் நியமிக்கப்படுகின்றது என்பதை நாம் அறிகின்றோம். மனிதர்கள் புணர்வுடன் தொடர்புடைய உடற்கூறியல் மற்றும் உடலியல் அம்சங்களை கொண்டுள்ளனர். இவை 'பால் பண்புகள்' என்று அழைக்கப்படுகின்றன. வெளிப்புற பிறப்புறுப்புக்கள், இனப்பெருக்க உறுப்புக்கள், ஹோர்மோன்கள் மற்றும் குரோமோசோம்கள் ஆகியவை பால் பண்புகளுக்கான உதாரணங்களாக இருக்கின்றன. பால் பண்புகளின் படி நாம் ஆண் மற்றும் பெண் உடல்களை அடையாளம் காணமுடியும்.

- ஒரு ஆணுடலை கொண்ட நபர் ஒரு ஆணுறுப்பையும் ஒரு விதைப்பையையும் கொண்டிருப்பார்; புரோஸ்டேட் சுரப்பி, கவ்பரின் சுரப்பி, விந்து நாளம், விந்து வெளியேறும் குழாய் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கின்ற ஒரு உள் இனப்பெருக்க அமைப்பு; XY குரோமோசோம்கள்; அத்துடன் தெஸ்தஸ்திரோன் ஹோர்மோனை முதன்மையாக உற்பத்தி செய்கின்றது. ஒரு பெண்ணுடலை கொண்ட நபர் ஒரு பெண்ணுறுப்பு மற்றும் மார்பகங்கள், கருப்பைகள், பலோப்பியன் குழாய்கள், ஒரு கருப்பை போன்றவற்றை உள்ளடக்கியிருக்கின்ற ஒரு உள் இனப்பெருக்க அமைப்பு; XX குரோமோசோம்கள் மற்றும் முதன்மையாக ஈஸ்திரஜன் ஹோர்மோனை உற்பத்தி செய்கின்றது. ஆண் அல்லது பெண்ணுடலுடன் ஒத்துப்போகின்ற பால் பண்புகளை கொண்ட நபர்களை நாங்கள் எண்டோசெக்ஸ் நபர்கள் என்று அழைக்கின்றோம்.

- ஆனால் ஆணுடல் மற்றும் பெண்ணுடலின் வரையறைகளுக்கு சரியாக பொருந்தாத பால் பண்புகள் உள்ளவர்களும் இருக்கின்றார்கள். அத்தகைய மாறுபாடுள்ள ஒரு நபர் ஒரு இடையிலிங்கத்தவர் என்று அழைக்கப்படுகின்றார்.

- இடையிலிங்க உடலின் வகைகள் ஒன்றல்ல. இடையிலிங்கம் என்பது பால் பண்புகளிலுள்ள ஒரு பரந்த அளவிலான மாறுபாடுகளுக்கு பொருந்துகின்ற ஒரு பொதுச்சொல்லாகும்.

## பொழிப்பு

பிறப்பிலேயே நியமிக்கப்பட்ட பால்நிலையின் அடிப்படையில் சமூகமானது நீங்கள் ஒரு குறிப்பிட்ட முறையில்தான் நடந்து கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கின்றது என்பதை சுருக்கிக்கூறவும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், பாலின வகிபாகங்களுக்கு இணங்க சமூகம் உங்களுக்கு கற்பிக்கின்றது என்றும் நாங்கள் கூறலாம். அதேநேரத்தில் ஒரு நபர் தன்னுடைய பாலின அடையாளத்தை பற்றிய ஒரு விழிப்புணர்வை - தனது சொந்த பாலினத்தை பற்றிய ஒரு ஆழமான உள்ளுணர்வை வளர்த்துக்கொள்கின்றார். சிலநேரங்களில் ஒருவருடைய பாலினம் ஓர் ஒழுங்குமுறையான வழியில் பால்நிலையுடன் ஒத்துப்போவதில்லை. அப்பொழுது அந்த நபர் அவருடைய உடலை மாற்றுவதன் மூலம் அவருடைய உண்மையான பாலினத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு ஒரு மாற்ற செயன்முறையினூடாக செல்ல முடியும்.

நாம் நம்மை முன்வைக்கின்ற விதத்தில்- அதாவது நாம் ஆடை அணிகின்ற விதத்தில் மற்றும் நமது நடத்தையில், நாம் நம்முடைய பாலினத்தை வெளிப்படுத்துகின்றோம். இது பாலின வெளிப்பாடு என்று அழைக்கப்படுகின்றது.

இரண்டு பாலினங்கள் மட்டுமல்ல, பல பாலினங்கள் இருக்கின்றன. ஒருவருடைய பாலின அடையாளம் அவருடைய சொந்த பாலினத்தை அவர் எவ்வாறு விளக்குகின்றார் என்பதை அடிப்படையாக கொண்டது.

இடையிலிங்கத்தவர்களை மாற்றுப்பாலினத்தவர்களுடன் குழப்பிக்கொள்ளக்கூடாது. இடையிலிங்கத்தவராக இருப்பது பால் பண்புகளை பற்றியது அத்தோடு மாற்றுப்பாலினத்தவராக இருப்பது பாலின அடையாளத்தை பற்றியது.

ஒரு நபருடைய பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடு என்பனவற்றைத்தாண்டி அனைத்து மக்களும் சமமானவர்கள் மற்றும் சமமான மரியாதை மற்றும் கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும்.

# அமர்வு 02: பல்வேறுபட்ட பாலீர்ப்பு பற்றிய அறிமுகம்

## நேரம் பொழிப்பு
1 மணித்தியாலம்

## இலக்கு குழு
அனைத்து குழுக்களும்
ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்
இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- பாலீர்ப்பு வெறும் பாலியல் ஈர்ப்பை விட அதிகமானவற்றை உள்ளடக்கியிருக்கின்றது என்பதை புரிந்துகொள்ள முடியும்
- பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட சில பாலீர்ப்புகளை பட்டியலிட முடியும்

## தேவையான கருவிகள்
- Post-it குறிப்புக்கள் மற்றும் பேனாக்கள்

## தயாரிப்பு
- ஸ்லைடுகள்
- 'உணர்வுபூர்வமான ஈர்ப்பு', 'காதல் ஈர்ப்பு', 'பாலியல் ரீதியான ஈர்ப்பு' (இந்த வரிசையில்) என்று பெயரிடப்பட்டு மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்ட சுவர்.

## படிமுறைகள்:

- இந்த செயற்பாட்டில் நாங்கள் ஈர்ப்பை பற்றி பேசுவோம் என்பதை விளக்கவும்.

- செயற்பாடு (15 நிமிடங்கள்): பதிலளிக்கும் ஒவ்வொருவருக்கும் 3 post-it குறிப்புக்களை வழங்கவும். ஒரு கூட்டாளரின் மீதான ஈர்ப்பானது பொதுவாக உணர்வுபூர்வமான, காதல், மற்றும் பாலியல் ரீதியான ஈர்ப்பாகவே விவரிக்கப்படுகின்றது என்பதை விளக்கவும். சில விளக்கங்களில் ஆன்மீகரீதியான ஈர்ப்பை பற்றிய ஒரு அம்சமும் அடங்குகின்றது என்பதை நினைவில் கொள்ளவும். சிலநேரங்களில் ஒரு நபரின் மீதான ஈர்ப்பு காதலாக மாறிவிடுகின்றது. ஈர்ப்பின் இந்த வெவ்வேறான அம்சங்களை பற்றி சிந்திப்பதற்கு பங்கேற்பாளர்களை அழைக்கவும். அத்தோடு பின்வரும் ஒவ்வொரு கேள்விகளுக்குமான பதில்களை ஒவ்வொரு post-it குறிப்பிலும் எழுதுமாறு சொல்லவும். அவர்கள் பதில்களை எழுதியவுடன், சுவரில் மிகவும் பொருத்தமானதாக இருக்கின்றதென அவர்கள்

நினைக்கின்ற வகையின் கீழே குறிப்பை அவர்களால் ஒட்ட முடியும். சில பதில்கள் இரண்டு வகைகளுக்கு இடையில்கூட வரலாம்.

- பங்கேற்பாளர்கள் யாரேனும் ஒருவரால் ஈர்க்கப்பட்ட அல்லது அவர்கள் 'காதலில்' இருந்த ஒரு நேரத்தை நினைவுகூருவதற்காக அவர்களை அழைத்து, இந்த 3 கேள்விகளுக்கு பதிலளிக்க முயலுமாறு சொல்லவும்:
  1. நீங்கள் ஒருவரால் ஈர்க்கப்பட்டதை அறிந்துகொண்டபொழுது நீங்கள் எவ்வாறு உணர்ந்தீர்கள்?
  2. நீங்கள் ஒருவரால் ஈர்க்கப்படுவதை உணர்ந்த பொழுது, அவர்களுடன் நீங்கள் என்ன செயற்பாடுகளை செய்வதற்கு விரும்பினீர்கள்?
  3. நீங்கள் ஈர்க்கப்பட்ட நபரது எவ்விடயத்துக்காக அவர்களால் நீங்கள் ஈர்க்கப்படுகின்றாக உணர்ந்தீர்கள்?

- ஒவ்வொருவரும் அவர்களுடைய பதில்களை ஒட்டியதன் பின், பதில்களை ஒரு கூட்டான பார்வையில் பார்க்கவும். ஒத்த பதில்களை மற்றும் தனித்துவமான பதில்களை நினைவில் கொள்ளவும்.
- பதில்கள் சரியான வகையில்தான் இருக்கின்றனவா என்பது தொடர்பில் கலந்துரையாடவும். ஒரு சரியான பதில் என்ன என்பதற்கு மிகவும் இறுக்கமான விதிகள் கிடையாது, அத்தோடு பல பதில்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட வகையான ஈர்ப்புகளின் ஒரு சேர்க்கை இருக்கலாம். புரிதலுக்கு எளிதாக, கீழேயுள்ள அட்டவணை ஈர்ப்பை விளக்க முயல்வதுடன் சில உதாரணங்களையும் வழங்குகின்றது

| | உணர்வுபூர்வமான ஈர்ப்பு | காதல் ஈர்ப்பு | பாலியல் ரீதியான ஈர்ப்பு |
|---|---|---|---|
| | **விளக்கம்:** ஒரு உணர்வுபூர்வமான பிணைப்பு இருக்கின்றது. நீங்கள் இணைந்திருப்பதாக உணர்கின்றீர்கள். நீங்கள் உங்களுடைய எண்ணங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளுமளவுக்கு பாதுகாப்பாக உணர்கின்றீர்கள். நீங்கள் | **விளக்கம்:** உணர்வுபூர்வமான இணைப்பிற்கு அப்பாற்பட்ட அன்பின் ஆழமான ஒரு உணர்வு இருக்கின்றது. இது பெரும்பாலும், சிலநேரங்களில் வாழ்நாள் முழுவதுமே நேரத்தை கூடசேர்ந்து செலவழிக்கின்ற விருப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. | **விளக்கம்:** நீங்கள் ஒரு நபருடன் ஒரு பாலியல் ரீதியான ஆசையை உணர்கின்றீர்கள். |

| | | | |
|---|---|---|---|
| | ஒருவரையொருவர் புரிந்துகொள்வதை நீங்கள் உணர்கின்றீர்கள். | | |
| நீங்கள் ஒருவரில் ஈர்க்கப்பட்டதை உணர்ந்தபொழுது- நீங்கள் எப்படி உணர்ந்தீர்கள்? | **உதாரணங்கள்:**<br>மகிழ்ச்சியாக<br>பாதுகாப்பாக<br>நம்பகமாக | **உதாரணங்கள்:**<br>அவர்களுடன் நேரம் செலவிட வேண்டுதல்<br>காதலை உணர்தல்<br>அவர்களை மகிழ்ச்சியடைய செய்தல் | **உதாரணங்கள்:**<br>அவர்களை தொடுகின்ற, முத்தமிடுகின்ற ஆசை.<br>அவர்கள் 'கவர்ச்சியாக/ ஈர்ப்பாக' இருப்பதை காணுதல். |
| நீங்கள் ஒருவரில் ஈர்க்கப்பட்ட பொழுது, அவர்களுடன் என்ன செயற்பாடுகளை செய்வதற்கு விரும்புகின்றீர்கள்? | **உதாரணங்கள்:**<br>அவர்களுடன் பேசுதல்<br>அவர்களுக்கு செவிசாய்த்தல்<br>உங்களுடைய நாளை பற்றி அவர்களிடம் சொல்லுதல் | **உதாரணங்கள்:**<br>கைகளை கோர்த்துக்கொள்ளுதல்<br>திரைப்படங்களுக்கு/ கோப்பி அருந்த செல்லுதல்<br>அவர்களை சந்தித்தல் | **உதாரணங்கள்:**<br>முத்தம் கொடுத்தல்<br>புணர்தல் |
| நீங்கள் ஈர்க்கப்பட்ட நபரது எவ்விடயத்துக்காக அவர்களால் நீங்கள் ஈர்க்கப்படுகின்றாக உணர்ந்தீர்கள்? | **உதாரணங்கள்:**<br>இரக்கமுள்ளவர்<br>நல்ல செவிமடுப்பாளர்<br>அக்கறை கொண்டவர் | **உதாரணங்கள்:**<br>நெகிழ்திறன்/ விடாமுயற்சி<br>ஸ்திரத்தன்மை<br>குணநலனின் பலம் | **உதாரணங்கள்:**<br>அவர்களுடைய உடல்<br>அவர்களுடைய வெளிப்பாடுகள்/ பழக்கவழக்கங்கள் |

- ஒரு வகையான ஈர்ப்பானது மற்றொன்று இல்லாமல் நிலவலாம் என்பதையும் அது ஒரு தனிப்பட்ட அனுபவமாக இருக்கின்றது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக, ஒருவர் ஒரு நபரில் பாலியல் ரீதியாக மட்டுமே ஈர்க்கப்படலாம், ஆனால் உணர்ச்சி ரீதியாக மற்றும் காதல் ரீதியாக அவர்களில் ஈர்க்கப்படாமல் இருக்கலாம். இன்னும் சிலரோ பாலியல் ஈர்ப்பை அனுபவித்திருப்பதில்லை. எந்தவொரு நபரிலும் பாலியல் ஈர்ப்பை அனுபவிக்காதவர்கள் ஒரு பாலீர்ப்பற்றவராக அடையாளம் காணப்படலாம். எவ்வாறாயினும், சில பாலுணர்வற்ற நபர்கள் உணர்வுபூர்வமான/ காதல் ஈர்ப்பை அனுபவிக்கின்றனர்.

- உணர்ச்சி, காதல் மற்றும் பாலியல் ஈர்ப்பு என்றால் என்னவென்பதை இப்பொழுது நாங்கள் புரிந்துகொண்டுள்ளோம் என்பதையும், இந்த ஈர்ப்புக்குட்பட்ட நபர் மற்றும் அவர்களின் பாலினத்தை கவனிக்க வேண்டிய நேரம் இதுதான் என்பதையும் விளக்கவும்.

- Slide showஐப் பயன்படுத்தி, பாலீர்ப்பு உணர்ச்சி, காதல் மற்றும் பாலியல் ஈர்ப்புடன் தொடர்புடையதாக இருக்கின்றது என்பதை விளக்கவும். ஈர்ப்புக்குட்பட்ட நபரின் பாலினத்தின் அடிப்படையில், பாலீர்ப்பு அடையாளம் காணப்பட முடியும்.

**பாலீர்ப்பு பற்றிய எமது புரிதல் இன்னும் பரிணாம வளர்ச்சியடைந்துகொண்டிருக்கிறது**. **எமது தற்போதைய புரிதலின்படி**, 5 **வகை பாலீர்ப்புக்களை அடையாளம் காணலாம்**: **எதிர்பாலீர்ப்பு**, தன்**பாலீர்ப்பு**, **இருபாலீர்ப்பு**, **அனைத்துப்பாலீர்ப்பு மற்றும் பாலீர்ப்பற்ற தன்மை**.

### குறிப்பு

எதிர்பாலீர்ப்பு: ஒரு வேறுபட்ட பாலின மக்களின் மீது முதன்மையாக அல்லது பிரத்தியேகமாக இருக்கின்ற ஒரு நீடித்த உணர்ச்சி, காதல் அல்லது பாலியல் ஈர்ப்பு. உதாரணமாக, பெண்களில் ஈர்ப்பு உள்ள ஆண்கள். இந்த பாலீர்ப்பு பொதுவாக "நேர்/ எதிர்பாலீர்ப்பு" என்று குறிப்பிடப்படுகின்றது.

ஒருபாலீர்ப்பு: முதன்மையாக அல்லது பிரத்தியேகமாக ஒரே பாலின மக்களின் மீது இருக்கின்ற ஒரு நீடித்த உணர்ச்சி, காதல் அல்லது பாலியல் ஈர்ப்பு. ஒருபாலீர்ப்பை அனுபவிக்கின்ற நபர்கள் தங்களை தாங்களே "gay", "lesbian", "queer" அல்லது "ஒரே பாலினத்தை ஈர்க்கின்ற நபர்கள்" ஆக அடையாளம் காணலாம்.


இருபாலீர்ப்பு: இருபாலின மக்களின் மீது இருக்கின்ற ஒரு நீடித்த உணர்ச்சி, காதல் அல்லது ஈர்ப்பு. உதாரணமாக, ஆண்களில் மற்றும் பெண்களில் ஈர்க்கப்படுகின்ற ஆண்கள்.

அனைத்துப்பாலீர்ப்பு: அவர்களுடைய பாலினத்தை பெருட்படுத்தாத மக்களின் மீதான உணர்ச்சி, காதல் அல்லது பாலியல் ஈர்ப்பு. ஒரு அனைத்துப்பாலீர்ப்பு நபரானவர் ஒரு ஆணில், பெண்ணில், திருநங்கையில், திருநம்பியில் அல்லது பாலின துவிதத்துவம் அல்லாத நபரில் ஈர்ப்புள்ளவராக இருக்கலாம்.

பாலீர்ப்பின்மை: ஒரு நீடித்த பாலியல் ஈர்ப்பின்மை. இத்தகைய பாலியல் ஈர்ப்பை அனுபவிக்காதவர்கள் "பாலீர்ப்பற்ற" அல்லது “Ace” ஆக அடையாளம் காணப்படலாம். பாலியல் ஈர்ப்பின்மை என்பது உணர்ச்சி மற்றும்/ அல்லது காதல் ஈர்ப்பு போன்ற பிற வகையான ஈர்ப்பின்மையை குறிக்காது. இது பாலீர்ப்பற்ற மக்கள் ஒருபொழுதும் புணர்வு கொள்ளமாட்டார்கள் என்றோ அதை மகிழ்ந்தனுபவிக்க மாட்டார்கள் என்றோ அர்த்தப்படாது.

- இதுவரை கலந்துரையாடப்பட்டவை பற்றி ஏதேனும் கேள்விகள் உள்ளதா என பங்கேற்பாளர்களிடம் கேட்கவும் அத்தோடு அவர்களுடைய கவலைகளை நிவர்த்தி செய்யவும். கேட்கப்படக்கூடிய சில சாத்தியமான கேள்விகள், மற்றும் அதற்கான பதில்களை பொதுவான அச்சங்கள் மற்றும் பொதுவான கட்டுக்கதைகள் என்ற தலைப்பில் அமர்வு 04ல் காணலாம்.

## பொழிப்பு




*பாலின நபரின் படத்தை பயன்படுத்தி, முந்திய அமர்வில் கலந்துரையாடியவாறு, பாலின வெளிப்பாடு என்பது நீங்கள் உங்களை எப்படி முன்வைக்கின்றீர்கள் என்பதை பற்றியதாகும் என்பதை சுருக்கமாக கூறவும். அது நீங்கள் வெளிப்புறத்தில் எப்படி காணப்படுகின்றீர்கள், எப்படி உடை அணிகின்றீர்கள், எப்படி நடந்துகொள்கின்றீர்கள், உங்களுடைய நடத்தைகள் போன்றவற்றை பற்றியதாகும். உங்களுடைய பாலின அடையாளம் என்பது உங்களுடைய பாலினத்தை நீங்கள் எவ்வாறு ஆழமாகவும் மற்றும் உட்புறத்திலும் புரிந்துகொள்கின்றீர்கள் என்பதை பற்றியது. இது பாலினத்தை பற்றிய ஒருவரின் சொந்த புரிதலாக இருக்கின்றது. இது உங்களுடைய வெளிப்புற பிறப்புறுப்புக்களின் அடிப்படையில் பிறப்பிலேயே நியமிக்கப்படுகின்ற பாலினத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கலாம் - ஒரு பால் பண்பு. பாலீர்ப்பு என்பது நீங்கள் உணர்ச்சி ரீதியாக, காதல் ரீதியாக, அத்தோடு பாலியல் ரீதியாக யாரில் ஈர்க்கப்படுகின்றீர்கள் என்பதை பற்றியது. அவர்களுடைய பாலினம்தான் உங்களுடைய பாலீர்ப்பைதீர்மானிப்பதாக இருக்கின்றது.*

| சொற்பதம் | விரைவான வரைவிலக்கணம் | உதாரணங்கள் அல்லது வகைப்படுத்தல் |
|---|---|---|
| பால் | பிறப்பிலேயே நியமிக்கப்பட்டது | ஆண், பெண் |
| பால் பண்புகள் | உடற்கூறியல் மற்றும் உடலியல் அமைப்பு | இடையிலிங்கத்தவர், எண்டோசெக்ஸ் |
| பாலின அடையாளம் | பாலினம் பற்றிய ஆழமான உள்ளுணர்வு | ஆண், பெண், திருநம்பி, திருநங்கை, பால்புதுமை, நிலையற்ற பாலினம், துவிதமல்லாத பால்நிலை, பால்நிலையை உறுதிசெய்யாமை |
| பாலியல் வெளிப்பாடு | ஒரு நபர் தன்னை எவ்வாறு முன்வைக்கின்றார் | பெண்பால், ஆண்பால், இருபால், அறுதியிட முடியாத பால்நிலை |
| பாலீர்ப்பு | உணர்ச்சி, காதல் மற்றும் பாலியல் ஈர்ப்பு | தன்பாலீர்ப்பு, இருபாலீர்ப்பு, எதிர்பாலீர்ப்பு, அனைத்துப்பாலீர்ப்பு மற்றும் பாலீர்ப்பற்ற தன்மை. |

மனித பாலினத்தின் மற்றும் பாலியலின் அனைத்து கூறுகளும் ஒரு நிறமாலையில் நிகழ்கின்றன. SOGIESC என்பவை வெறுமனே துவிதமானவை அல்ல. இந்த பன்முகத்தன்மைக்கு என்ன காரணம் என்று அறியப்படவில்லை. இது உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல்/ சுற்றாடல் காரணிகளின் ஒரு விளைவாக இருக்கின்றது. இதுதான் மனித இனத்தின் பன்முகத்தன்மையாகும்.

பாலின அடையாளம் மற்றும் **பாலீர்ப்பு** ஆகியவை உறுதியானவை அல்ல. மேலும் அவை அதிக நிலையற்றதன்மை கொண்டதாகவும் காலப்போக்கில் மாறக்கூடியதாகவும் இருக்கும். எவ்வாறாயினும், உங்களுடைய பாலீர்ப்பு ஒரு தனிப்பட்ட விடயமாக இருக்கின்றது; அதை பலவந்தமாக அல்லது வெளிப்புற அழுத்தத்தால் மாற்ற முடியாது.

மனிதர்கள் அவர்களுடைய அனைத்து பன்முகத்தன்மையிலும் சமமானவர்களாகவும் சமமான கண்ணியத்திற்கும் மரியாதைக்கும் தகுதியானவர்களாகவும் இருக்கின்றார்கள்.

## அமர்வு 03: ஆசியாவின் ஒரே பாலின புணர்வு பற்றிய சட்டங்கள்

*ஓரினச்சேர்க்கையை/ ஒருபாலீர்ப்பை பற்றிய நாடுகளின் சட்ட நிலைமையை சித்தரிக்கின்ற ஒரு வரைபடத்தின் மூலமான உதவியுடன் ஒரு கலந்துரையாடல்.*

### நேரம்

20 நிமிடங்கள்

### இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

### குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

• ஒரே பாலின செயற்பாட்டை குற்றமாக்கலின் குடியேற்றவாத மூலங்களைப் புரிந்துகொள்ள முடியும்
• ஒரே பாலின கூட்டாளர்களுக்கு இடையிலான பாலுறவு தொடர்பான தாராளசட்டங்கள் இருக்கின்ற நாடுகளை அடையாளம் காணமுடியும்
• நாடுகளின் சட்டக் கட்டமைப்புகள் தொடர்ந்தும் பரிணாம வளர்ச்சியடைந்து வருவதையும் சட்ட அலோசனைகள் ஊடாக சட்டங்களை மாற்றுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதையும் புரிந்துகொள்ள முடியும்

### தயாரிப்பு

- ஸ்லைடுகள்
- இந்த இணைப்பில் கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தின் ஒரு உயர் தெளிவுத்திறனுள்ள படத்தை பதிவிறக்கவும் https://ilga.org/maps-sexual-orientation-laws

### பயிற்சி வழங்குநருக்கான குறிப்பு

*அமர்வு 04 இன் முதலாவது படிமுறையை தொடங்குவதை கருத்திற்கொள்ளவும்: இந்த அமர்வை தொடங்குவதற்கு முன்பு பொதுவான அச்சங்களை மற்றும் பொதுவான கட்டுக்கதைகளை பார்ப்பதற்கு சக-பயிற்சி வழங்குநருக்கு நேரத்தை அனுமதிப்பதன் மூலம் பங்கேற்பாளர்களிடமிருந்து கேட்கப்படுகின்ற கேள்விகளை வரிசைப்படுத்தி சுருக்கமாக தயார் செய்யவும்.*

### படிமுறைகள்:

- உலகின் இந்தப் பகுதியில் பாலியல் சிறுபான்மையினரை குற்றமயமாக்குதல் என்பது உண்மையில் குடியேற்றவாத மரபின் ஒரு பகுதியாக இருக்கின்றது என்பதை விளக்கவும். பிரிட்டிஷ் ஆட்சியின்

பொழுது, விக்டோரியன் சித்தாந்தமானது பல்வேறு வழிகளில், 'இயற்கைக்கு மாறான உடலுறவை' குற்றமாக்குகின்ற ஒரு வழியில் உள்ளூர் சட்டக் கட்டமைப்புகளுக்குள் சேர்க்கப்பட்டது. இதன் ஒரு விளைவாக, தண்டனைச்சட்டக் கோவையின் (1883 ஆம் ஆண்டு) s.365 மற்றும் s.365A ஆகியவற்றின் மூலம் ஒரே பாலின பாலுறவு செயற்பாடானது இலங்கையில் குற்றமாகவே இருக்கின்றது. இந்த சட்டமானது தொகுதி 03 இல் விரிவாக கலந்துரையாடப்படும்.

- குடியேற்றத்திற்கு முன்பாக ஒரே பாலின பாலுறவு குற்றமாக்கப்பட்ட வரலாறு எதுவும் கிடையாது. அது யூத-கிறிஸ்தவ விழுமியங்களை அடிப்படையாக கொண்ட, பிரிட்டிஷ் செல்வாக்கின் ஒரு விளைவாக இருக்கின்றது. அனைத்து குடியேற்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்ட அந்த எண்ணக்கரு அந்நாடுகளின் சட்ட சூழலை மாற்றியது. நகைமுரணாக, அந்த சட்டங்களை தெற்காசிய பிராந்தியத்தின் மத விழுமியங்களுடன் கலந்துவிட்டதனால் 1967ல் பிரிட்டிஷாரே ஒரே பாலின பாலுறவை குற்றமற்றதாக்கியதன் பின்னரும்கூட தெற்காசியாவில் அந்த குற்றமாக்கல் உள்ளூர் கலாசார விழுமியங்களின் பெயரால் நியாயப்படுத்தப்பட்டு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது.

- பல பின்காலனித்துவ நாடுகளில் - குறிப்பாக பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்டிருந்தனவற்றில் - ஒருபாலீர்ப்பானது ஒரு மேற்கத்தேய கருத்தாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றது. அதே நேரம், உள்ளூர் மரபுகள் மற்றும் கலாசாரம் என்பன பாலியல் சிறுபான்மையினரின் உரிமைகள் உட்பட மனித உரிமைகள் போன்றனவற்றின் மீது திணிக்கப்படுகின்றன.

- ஆசியாவிலுள்ள குயர் மக்களுக்கான சமத்துவத்தை உணர்ந்து கொள்வதற்கு ஒரு தடையாக இருக்கின்ற, தெற்காசியாவிலுள்ள சில கலாசார நடைமுறைகள் மற்றும் விழுமியங்கள் யாவை என்பதை பங்கேற்பாளர்களிடம் கேட்கவும். கலந்துரையாடலுக்கான சில விடயங்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன.

    - சமூக அடையாளம் வலுவாக இருக்கின்றது. மக்கள் தனிநபர்களாக அல்லாமல் சமூகத்தின் ஓர் அங்கமாகவே பார்க்கப்படுகின்றார்கள். மக்கள் அவர்களுடைய உறவினர்களுடைய அல்லது சமூகத்துடைய கருத்தை பற்றி உணர்ந்துதான்/ தெரிந்துதான் இருக்கின்றார்கள்.
    - திருமணம் மற்றும் குழந்தைகளை பெற்றுக்கொள்வது சமூக அந்தஸ்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றது. பெண்பால் மற்றும் ஆண்பால் இலட்சியங்கள் இரண்டுமே தாய்மை மற்றும் தந்தைமையை சுற்றியே இருக்கின்றன.

- திருமணம் என்பது ஒரு தெரிவு என்பதை காட்டிலும் பெற்றோருக்கான ஒரு கடமையாக பார்க்கப்படுகின்றது.

- புணர்வு ஒரு இரகசியமாக அல்லது ஒரு தீட்டாக பார்க்கப்படுகின்றது. பாடசாலைகளில் பயனுள்ள பாலியல் கல்வி கிடையாது. இனப்பெருக்கத்திற்கு அல்லாமல் புணர்வு கொள்பவர்கள் (ஒரே பாலின தம்பதிகள் போன்றவர்கள்) காமம் கொண்டவர்களாக, ஒழுங்கற்றவர்களாக அல்லது மோசமானவர்களாக பார்க்கப்படுகின்றார்கள்.

- தெற்காசிய அரசியல் நிலவரம் தேசியவாத அரசியலால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றது. தேசியவாத அரசியல் பெரும்பாலும் தனது சித்தாந்தங்களை வலுப்படுத்துவதற்கு பாரம்பரிய மற்றும் இணக்கமான விழுமியங்களை பயன்படுத்துகின்றது. தாராளவாத மற்றும் இணக்கமற்ற கருத்துக்கள் நிராகரிக்கப்படுகின்றன.

- மனித உரிமைகளை மதிக்காமை ஒரு காரணியாகும். மனித உரிமைகள் ஒரு மேற்கத்தேய கருத்தாகவே பார்க்கப்படுகின்றன. மனித உரிமைகளை பாதுகாக்கின்ற மற்றும் மேம்படுத்துகின்ற வலுவான பிராந்திய ஒத்துழைப்பு (ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை) கிடையாது.

- ஆசியாவில் தோன்றிய முக்கியமான மதங்கள் அத்தோடு மத விழுமியங்கள் மக்களால் வலுவாக கடைபிடிக்கப்படுகின்றன. சில வேளைகளில் மத விழுமியங்கள் குயர் மக்களின் சமத்துவத்திற்கான உரிமையை குறைப்பதற்கு ஒரு சாக்காக பயன்படுத்தப்படுகின்றன.


- பொதுநலவாய அமைப்பில் உள்ள 53 நாடுகளில் - 36 நாடுகளில் ஓரினச்சேர்க்கையை/ ஒருபாலீர்ப்பை குற்றமாக்குகின்ற சட்டங்கள் இருக்கின்றன. எவ்வாறாயினும், உலகம் முழுவதும் சமத்துவத்தின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதுவரையில், உலகில் 28 நாடுகள் ஒரே பாலின திருமணங்களை அங்கீகரிக்கின்றன, அத்தோடு 34 நாடுகள் ஒரே பாலின தம்பதிகளுக்கு சில கூட்டாண்மை அங்கீகாரத்தை வழங்குகின்றன. டிசம்பர் 2020 ஆம் ஆண்டு நிலவரப்படி, 81 நாடுகளில் பாலீர்ப்பு அடிப்படையில் பணியிடத்தில் பாகுபாடு காட்டுவதற்கு எதிரான சட்டங்கள் இருக்கின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்பு இச்சட்டங்கள் 15 நாடுகளில் மட்டுமே இருந்தன.
- பங்கேற்பாளர்களை இந்த வரைபடத்துக்கருகில் (ஸ்லைடு) அழைத்துச்செல்லவும். அத்தோடு ஆசிய நாடுகளிலுள்ள சட்டச்சூழலை குறிப்பெடுக்கவும். ஒரே பாலின பாலுறவானது குற்றமாக்கப்படாத

அத்தோடு ஒரே பாலின திருமணங்கள் மற்றும் கூட்டாண்மைகள் அங்கீகரிக்கப்பட்ட நாடுகளை குறிப்பெடுக்கவும். ஒரே பாலின பாலியல் செயற்பாடு குற்றமாக்கப்படுகின்ற நாடுகளையும் குறிப்பெடுக்கவும். வரைபடத்தின் ஒரு உயர் தெளிவுத்திறன் கொண்ட படத்தை இங்கே பார்வையிட முடியும்/ பதிவிறக்கம் செய்ய முடியும்: https://ilga.org/maps-sexual-orientation-laws

- நீங்கள் பங்கேற்பாளர்களுடன் வரைபடத்தை அவதானிக்கும் பொழுது, எப்படி குற்றவியல் நீக்கம் ஏற்பட்டது மற்றும் தொடர்புடையதாக இருக்கின்ற அண்மைய வழக்குகளை அல்லது சம்பவங்களை பற்றிய தகவல்களை பகிரலாம். எடுத்துக்காட்டாக, 2018 ஆம் ஆண்டில், இந்திய உச்ச நீதிமன்றமானது S.377இன்படி ஒரே பாலின கூட்டாளர்களுக்கு இடையிலான பாலுறவை குற்றமற்றதாக்கியமையை நீங்கள் கூறலாம். நீதிபதிகள் அவர்களுடைய வாதங்களில் தனிமனித சுயாட்சி, பாரபட்சமற்ற/ பாகுபாடற்ற தன்மை, அத்தோடு அந்தரங்கம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தின் மீதே முதன்மையாக கவனம் செலுத்தினர். ஓரினச்சேர்க்கை/ ஒருபாலீர்ப்பானது ஒரு மனநோய் அல்ல என்பதை அமெரிக்க மனநல சங்கம் அங்கீகரித்ததையும் அவர்கள் குறிப்பிட்டனர். ஆசிய நாடுகளிலுள்ள சட்ட நிலைமை பற்றிய விபரங்கள் கீழேயுள்ள 'பயிற்சி வழங்குநருக்கான குறிப்பு' என்கின்ற பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.

- வரைபடம் உருவாக்கப்பட்டதன் பின்னர் பூட்டானின் சட்ட நிலைமை மாறிவிட்டது என்பதை கருத்திற் கொள்ளவும்.

- பயிற்சி வழங்குநருக்கான **குறிப்பு**' என்கின்ற பிரிவு துவிதமல்லாத (non-binary) பாலின அடையாளங்களை அங்கீகரிப்பது பற்றிய கூடுதலான தகவல்களையும் வழங்குகின்றது. 'பாலீர்ப்பு' மற்றும் 'பாலின அடையாளம்' ஆகியவற்றுக்கு இடையில் குழப்பத்தை உருவாக்காத ஒரு வழியில் இந்த தகவல்கள் பகிரப்பட வேண்டும்.




## பயிற்சி வழங்குநருக்கான குறிப்பு

உலகின் மற்றைய பிராந்தியங்களுடன் ஒப்பிடுகையில் ஆசியாவிலுள்ள உரிமைகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. குறைந்தபட்சமாக இருபது ஆசிய நாடுகளில் ஓரினச்சேர்க்கை/ ஒருபாலீர்ப்பு பாலியல் செயற்பாடானது தடைசெய்யப்பட்டிருக்கின்றது.

குறைந்தபட்சமாக எட்டு நாடுகள் LGBTIQ மக்களுக்கான பாதுகாப்பை இயற்றியிருக்கின்ற பொழுது, இஸ்ரேல் மற்றும் தாய்வான் மட்டுமே ஒரே பாலின உறவுமுறைகளை அங்கீகரிப்பது உட்பட பலவிதமான உரிமைகளை வழங்குகின்றன.

ஆப்கானிஸ்தான், புருனே, ஈரான், கட்டார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு ராஜ்ஜியம் மற்றும் யேமன் போன்ற நாடுகளில் ஓரினச்சேர்க்கை/ ஒருபாலீர்ப்பு செயற்பாட்டிற்கு மரண தண்டனை விதிக்கப்படுகின்றது.

### கிழக்கு ஆசியா

பால், மதம், அல்லது சமூக அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவதை தென் கொரியாவின் அரசியலமைப்பானது தடைசெய்கின்றது. இது LGBTIQ மக்களுக்கும் பொருந்தும் என்று அந்நாட்டின் நீதி அமைச்சு கூறியிருக்கிறது. ஆனால், இந்த "பாதுகாப்புக்கள்" அவற்றின் பின்னால் எந்த நடைமுறைப்படுத்தல் சக்தியும் இல்லாத உரிமைகளாகவே செயற்படுகின்றன. ஒரே பாலின திருமணத்திற்கான உரிமை கிடையாது. மக்கள் ஏனைய சிவில்

உரிமைகளை பறிக்கின்ற கடுமையான சூழ்நிலைகளுக்கு இணங்கினால் மட்டுமே அவர்களால் பாலினத்தில் ஒரு மாற்றத்தை கோர முடியும்.

சீனாவின் சமீபத்திய தண்டனைச்சட்டம் ஒரே பாலினத்தவர்களுக்கிடையிலான பாலுறவை வெளிப்படையாக தடைசெய்யவில்லை. ஒரே பாலின பாலுறவு செயற்பாடு 1997 ஆம் ஆண்டு தொடக்கம் சட்டப்பூர்வமாக இருந்து வருகின்றது. எவ்வாறாயினும், LGBTQI மக்களை பாகுபாட்டிலிருந்து பாதுகாக்கின்ற சட்டங்கள் எதுவுமில்லை, அத்தோடு ஒரே பாலின திருமணம் அல்லது கூட்டாண்மையை அங்கீகரிக்கின்ற சட்டங்களும் எதுவுமில்லை. ஒருவரின் பாலினத்தை மாற்றுவதற்கான உரிமை கிடைத்தாலும் கூட, சட்டதிட்டங்கள் நிறைந்ததாகவே காணப்படுகின்றது.

ஹொங் கொங் ஒரே பாலின திருமணத்தை அங்கீகரிக்கவில்லை, ஆனால் தனிப்பட்ட தம்பதிகள் பாரபட்சமான கொள்கைகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யலாம்.

2021 ஆம் ஆண்டில், ஒரு முக்கிய உயர் நீதிமன்ற தீர்ப்பிற்கு பின்பு, திருமணமான ஒரே பாலின கூட்டாளர்கள் ஹொங் கொங்கில் மானியத்துடன் கூடிய வீடுகளை சொந்தமாக வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. பரம்பரைச்சொத்திற்கான சம உரிமையை ஒரே பாலின தம்பதிகளுக்கு அனுமதிக்கின்ற இந்தத்தீர்ப்பானது ஒரு பாலீர்ப்புத் தம்பதியினரான ஹென்றி லி மற்றும் மறைந்த அவருடைய கூட்டாளரான எட்கர் என்ஜி ஆகியோர் 2020 ஆம் ஆண்டின் ஒரு தீர்ப்பிற்கு பின்பு உள்ளூர் நகராட்சிக்கு எதிராகப் பெற்ற இரண்டாவது வெற்றியாக அமைந்தது.

ஜப்பான் ஒரே பாலின திருமணத்தை அங்கீகரிக்கவில்லை. எவ்வாறாயினும், பல உள்ளூர் நகராட்சிகள் ஒரே பாலின தம்பதிகளின் உரிமைகளை "திருமணத்திற்கு சமமானதாக" அங்கீகரிக்கின்றன. சில நிபந்தனைகளின் கீழ் அரச குடும்ப பதிவேட்டில் மாற்றுப்பாலினத்தவர்களால் ஒரு பாலின மாற்றத்தை கோர முடியும்.

**தெற்காசியா**

பங்களாதேஷ் ஒரே பாலின பாலுறவு செயற்பாட்டை குற்றமாக்குகின்றது. தண்டனையில் ஆயுள் தண்டனையும் அடங்கும். இது ஒருபாலீர்ப்பு ஆண்களுக்கு இடையிலான புணர்வுக்கு மட்டுமே பொருந்துகின்றது (பெண்கள் இதில் அடங்கவில்லை). ஒருபாலீர்ப்பு ஆண்களுக்கு இராணுவத்தில் பணியாற்றுவதற்கு வெளிப்படையான ஒரு தடை இருக்கின்றது. 2013 ஆம் ஆண்டில், பங்களாதேஷ் வாக்களிப்பது, பயணம் செய்வது, அடையாளம் காண்பது போன்ற நோக்கங்களுக்காகவும் மற்றும் பிற முக்கிய சிவில் உரிமைகளுக்காகவும் ஒரு "மூன்றாம் பாலாக" இருப்பதற்கு ஹிஜ்ரா மக்களை சட்டப்பூர்வமாக அங்கீகரித்தது.

2019 இல், பூட்டான் தண்டனைச்சட்டத்தின் s.213 இன் "சோடோமி" என்று வரையறுக்கப்பட்ட "இயற்கைக்கு மாறான உடலுறவை" தடைசெய்கின்ற

செயன்முறையை நீக்க தொடங்கியது. 2020 டிசம்பரில் நடந்த ஒரு கூட்டமர்வில், "இயற்கைக்கு மாறான உடலுறவு" தடையை திருத்துவதற்கு பாராளுமன்றம் ஒப்புக்கொண்டது. "வயது வந்தவர்களுக்கிடையிலான ஓரினச்சேர்க்கை/ ஒருபாலீர்ப்பானது இயற்கைக்கு மாறான உடலுறவு என்று கருதப்படாது" என்று தெளிவுபடுத்தப்பட்டது. பூட்டானின் மன்னரான, ட்ருக் கியால்போவின் கையொப்பத்தை தொடர்ந்து சட்டமானது 17 பெப்ரவரி 2021 இல் நடைமுறைக்கு வந்தது. ILGA வரைபடம் 2020 இல் உருவாக்கப்பட்டது என்பதையும், இந்த மாற்றம் வரைபடத்தில் சரியாக அடையாளம் காணப்படவில்லை என்பதையும் **கருத்திற் கொள்ளவும்**.

2018 இல் ஒரே பாலின பாலியல் செயற்பாடு இந்தியாவில் சட்டப்பூர்வமாக்கப்பட்டது. ஒரே பாலின ஈர்ப்புள்ளவர்களது இணைவு, பதிவு செய்யப்படாத கூட்டுறவு ஆக அங்கீகரிக்கப்பட்டது. பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையிலான பாகுபாடு நாடு முழுவதும் தடைசெய்யப்பட்டது. இதன் ஒரு விளைவாக இந்தியா முழுவதுமுள்ள நீதிமன்றங்கள் பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் சமத்துவம் மற்றும் பாரபட்சமற்ற/ பாகுபாடற்ற உரிமையை நிலைநாட்டியிருக்கின்றன. உதாரணமாக, பெப்ரவரி 2021 இல், உத்தர பிரதேசத்தின் அலகாபாத் உயர் நீதிமன்றம் ஒரு குறிப்பிடத்தக்க தீர்ப்பில் எந்தவொரு ஊழியரையும் அவர்களுடைய பாலீர்ப்பு காரணமாக வேலையிலிருந்து நீக்குவது சட்டவிரோதமானது என்று குறிப்பிட்டது. பாலீர்ப்பு என்பது ஒரு தனிப்பட்ட விடயம் என்றும், அரசியலமைப்பு சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அந்தரங்க உரிமையால் அது பாதுகாக்கப்படுகின்றது என்றும் உயர் நீதிமன்றம் மேலும் குறிப்பிட்டது. 2019ஆம் ஆண்டின் மாற்றுப்பாலினத்தவர்கள் (உரிமைகளின் பாதுகாப்பு) சட்டமூலம் 19 ஜூலை 2019ஆம் திகதி சமூக நீதி மற்றும் வலுவூட்டல் அமைச்சரால் இந்திய மக்களவையில் முன்வைக்கப்பட்டது.

2018 இல் இந்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பானது *(நவ்தேஜ் சிங் ஜோஹர் & ஏனையோர். எதிர் இந்திய ஒன்றியம் AIR 2018 SC 4321)* 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட் "இயற்கையின் ஒழுங்குக்கு எதிரான" உடலுறவை ஆயுள் தண்டனைக்குரிய ஒரு குற்றமாகக் கருதும் தண்டனைச்சட்டக் கோவையின் s.377ஐ நீக்கியது. இச் சட்டமானது முன்பு 2009 இல் டெல்லி உயர் நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டிருந்தது, ஆனால் 2013 இல் இது மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது. நீதிபதிகள் அவர்களுடைய வாதங்களில் தனிப்பட்ட சுயாட்சி, பாரபட்சமற்ற/ பாகுபாடற்ற தன்மை மற்றும் அந்தரங்கம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தின் மீது முதன்மையாக கவனம் செலுத்திய பொழுது, அவர்கள் மனநல கோளாறுகளின் பட்டியலிலிருந்து ஓரினச்சேர்க்கையை/ ஒருபாலீர்ப்பை நீக்குவதற்கு அமெரிக்க மனநல சங்கத்தின் (APA) 1973 ஆம் ஆண்டு முடிவை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டினர். 2003 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ஒரே பாலின பாலியல் செயற்பாட்டை குற்றமற்றதாக்கிய அமெரிக்க உச்ச நீதிமன்ற வழக்கில் APA இன்

அமிகஸ் சுருக்கம் உட்பட பல APA ஆவணங்களையும் நீதிபதிகள் மேற்கோள் காட்டினர்.
சிறைதண்டனை, வசைபாடுதல், மற்றும் மரண தண்டனை உள்ளிட்ட சாத்தியமான தண்டனைகளுடன், ஒரே பாலின புணர்வு மற்றும் திருமணத்தை மாலைதீவு தடைசெய்கின்றது. இந்த தடைகள் அரிதாகவே செயற்படுத்தப்படுகின்றன. ஒரு பாலீர்ப்பாளர்களுக்கு இராணுவத்தில் பணியாற்ற அந்நாடு தடை விதித்திருக்கின்றது.

LGBTIQ நபர்கள் சட்டத்தின் கீழ் "இயற்கையான நபர்களாக" கருதப்படுவார்கள் என்று நேபாளத்தின் உச்ச நீதிமன்றம் 2007 இல் தீர்ப்பளித்தது. பாலியல் சிறுபான்மையினருக்கு ஆதரவான உறுதியான நடவடிக்கை பாகுபாடு காட்டாது என்று குறிப்பிடுகின்ற நாட்டின் அரசியலமைப்பானது சமத்துவத்திற்கான உரிமையை பற்றி பிரிவில் குறிப்பாக 'பாலியல் சிறுபான்மையினரை' அங்கீகரிக்கின்றது.

பாகிஸ்தான் ஒரே பாலின பாலுணர்வு செயற்பாட்டை மிக அரிதாகவே செயற்படுத்தப்படுகின்றதான சிறைதண்டனையுடன் குற்றமாக்குகின்றது. ஆனால் பொது இடங்களில் "ஆபாசமான செயல்களை" குற்றமாக்குகின்ற மற்றொரு சட்டம் ஒருபாலீர்ப்பாளர்கள் மற்றும் மாற்றுப்பாலின ஆண் பாலியல் தொழிலாளர்களை அடிக்கடி குறிவைக்கின்றது.

2009 இல் தேசிய அடையாள அட்டைகளில் தனிநபர்கள் "மாற்றுப்பாலின-ஆண்" அல்லது "மாற்றுப்பாலின-பெண்" என்று சுயமாக அடையாளம் காண்பதற்கு அதிகாரிகளுக்கு உச்ச நீதிமன்றம் அழைப்பு விடுத்தது: பாகிஸ்தானிய உச்ச நீதிமன்றத்தின் ஒரு முக்கிய தீர்ப்பான தலைமை நீதிபதி இப்திகார் சவுத்ரியின் தலைமையில் வழங்கபப்பட *காக்கி vs. ராவல்பிண்டி (2009)* தீர்ப்பில் பாகிஸ்தானின் மாற்றுப்பாலின சமூகங்களுக்கான நீடித்த நன்மைகள் மற்றும் சம பாதுகாப்பு வழங்கப்பட்டது. 2018 இல், பாகிஸ்தானிய் அரசாங்கம் மாற்றுப்பாலினத்தவர்கள் (உரிமைகளின் பாதுகாப்பு) சட்டத்தை நிறைவேற்றியது.

**தென்கிழக்கு ஆசியா**
கம்போடியா சுதந்திரத்திலிருந்து ஒரே பாலின பாலியல் செயற்பாட்டை குற்றமாக்கியிருக்கவில்லை. ஒருபாலீர்ப்பாளருக்கிடையிலான திருமணம் வெளிப்படையாக சட்டப்பூர்வமாக இல்லையென்றாலும், 2008 ஆம் ஆண்டு சிவில் சட்டம் தம்பதிகளை விபரிப்பதற்கு "துணைவர்கள்" என்கின்ற வார்த்தையை பயன்படுத்துகின்றது. ஆனால் குறிப்பாக பாதுகாப்பு என்ற பெயரில் பாகுபாடு காட்டுவதற்கு காவல்துறைக்கு பரந்த அதிகாரத்தை வழங்குகின்ற சட்டங்கள் காரணமாக பாகுபாடானது தொடர்கின்றது.

இந்தோனேசியாவில், தேசியளவில் ஒரே பாலின பாலுறவு செயற்பாட்டை குற்றமாகக் கருதுகின்ற சட்டங்கள் எதுவுமில்லை. எவ்வாறாயினும், சில சட்டங்கள்

LGBTQI நபர்களுக்கு எதிராக பாரபட்சம் காட்டுகின்றன. ஒரே பாலின திருமணம் வெளிப்படையாக சட்டவிரோதமானதாகவுள்ளதோடு எதிர்பாலீர்ப்பு மற்றும் ஒருபாலீர்ப்பு உடையவர்களுக்கு ஒப்புதலுக்கான வயதுகள் வெவ்வேறானவைகளாக — முற் சொன்னவர்களுக்கு 16, பின் சொன்னவர்களுக்கு 18 — உள்ளன. ஒளிபரப்பு நியமங்கள் தொலைக்காட்சியில் LGBTQI வெளிப்பாட்டை வரையறுக்கின்றன, அத்தோடு LGBTQI -ஐ மையமாக கொண்ட செயலிகள் மற்றும் இணையத்தளங்களுக்கு முன்மொழியப்பட்ட தடைகள் இருக்கின்றன.

ஜனவரி 2021 இல், பழமைவாத இந்தோனேசியாவின் ஆசெஹ் மாகாணத்தில் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டதற்காக இரண்டு ஆண்கள் பகிரங்கமாக பிரம்படியால் தாக்கப்பட்டனர். ஆசெஹ் என்பது இஸ்லாமிய சட்டத்தை விதிக்கின்ற இந்தோனேசியாவின் ஒரே பிராந்தியமாக இருக்கின்றது. மலேசியாவின் தண்டனைச்சட்டம் குத மற்றும் வாய்வழி புணர்வை குற்றமாக்குவதோடு 20 ஆண்டுகள் வரையான சிறைத்தண்டனையையும் விதிக்கின்றது.

மலேசியாவிலுள்ள சில மாநிலங்கள் இஸ்லாமிய ஷரியா சட்டத்தை இயற்றியிருக்கின்றன அத்தோடு ஒரே பாலின புணர்வை கசையடி மூலம் தண்டிக்கின்றன. ஒருபாலீர்ப்புடையவர்கள் இராணுவத்தில் பணியாற்றுவதை அந்நாடு வெளிப்படையாக தடை செய்கின்றது.
மியன்மாரில் ஒரே பாலின புணர்வுக்கு 10 ஆண்டுகள் வரையான சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். ஒரே பாலின தம்பதிகளின் திருமணம் செய்துகொள்வதற்கான உரிமையை அல்லது பாரபட்சமற்ற/ பாகுபாடற்ற உரிமையை பாதுகாக்கின்ற சட்டங்கள் எதுவுமில்லை.

பிலிப்பைன்ஸில் ஒரு வலுவான கத்தோலிக்க சனத்தொகையினருக்கு ஒரே பாலின தம்பதிகளை பாதுகாக்கின்ற சட்டத்தை தாமதப்படுத்த முடியுமாகவிருந்தது. 2004 இல் அரசாங்கம் ஒரு பாகுபாட்டிற்கு எதிர்ப்பான சட்டமூலத்துக்கு ஒப்புதல் அளித்தது. அமெரிக்காவை தளமாக கொண்ட Pew ஆராய்ச்சி மையம், பிலிப்பைன்ஸ் ஒருபாலீர்ப்பாளர் சமூகத்துடன் மிகவும் நட்பாக இருப்பதாக மதிப்பிட்டுள்ளது: ஜப்பானின் 54%, தென் கொரியாவின் 39% மற்றும் அமெரிக்காவின் 60% ஆகிய சதவீதங்களுடன் ஒப்பிடும் பொழுது, வயதுவந்த பிலிப்பினோக்களில் 73%ஆனோர் ஒருபாலீர்ப்பானது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று ஒப்புக்கொண்டனர்.

சிங்கப்பூர் s.377A இன் கீழ் ஒரே பாலின பாலுணர்வு செயற்பாட்டை 2 ஆண்டுகள் வரையான சிறைத்தண்டனையை கொண்ட ஒரு குற்றமாக விதிக்கின்றது. 2014 இல், சிங்கப்பூர் உச்ச நீதிமன்றம் ஒருபாலீர்ப்பின் "மாற்றமின்மை" என்பதில் "உறுதியான முடிவில்லை" என்று தீர்ப்பளித்தது. ஒருபாலீர்ப்பாளர்கள் இராணுவத்தில் பணியாற்றுவதை சிங்கப்பூர் வெளிப்படையாக தடை செய்கின்றது. எனினும் சிங்கப்பூர் மாற்றுப்பாலினத்தவர்களுக்கான ஒரு தாராள கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கின்றது. தென்கிழக்கு ஆசியாவில் அடையாள

ஆவணங்களில் பாலின மாற்றத்தை அனுமதிக்கின்ற ஒரே நாடாக சிங்கப்பூர் இருக்கின்றது.

சிங்கப்பூரில் s.377A-ஐ சவால் செய்கின்ற இரண்டு வழக்குகள் தற்பொழுது நடந்து வருகின்றன; ஒரு ஒருபாலீர்ப்பாளர் தம்பதியினரான கென்னத் சீ மற்றும் கேரி லிம் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட *டான் எங் ஹொங் எ. சட்டமா அதிபர்* மற்றும் *லிம் மெங் சுவாங் எ. சட்டமா அதிபர் ஆகிய* இரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒப்புக்கொண்டிருக்கின்றது.

வியட்நாமில், 1945 ஆம் ஆண்டு தொடக்கம் ஒரே பாலின பாலுணர்வு செயற்பாடு குற்றமற்றதாக இருந்துவந்தது. ஒருபாலீர்ப்பாளர்கள் இராணுவத்தில் பணியாற்ற முடியும். 2014 இல், வியட்நாம் ஒரே பாலின திருமணத்தை தடைசெய்வதற்கான அல்லது அங்கீகரிப்பதற்கான எந்த ஒழுங்குவிதியும் உள்ளடக்காத ஒரு திருத்தப்பட்ட திருமண சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் அதனை மறைமுகமாக சட்டபூர்வமாக்கியது. இதனால் ஒரே பாலின திருமணங்களுக்கு இனிமேல் அபராதம் விதிக்கப்படாது. எவ்வாறாயினும் மாற்றுப்பாலினத்தவர்கள் என்று வருகின்றபொழுது, வியட்நாம் தாராளமானபோக்கைக் கடைபிடிக்கவில்லை; பாலின மாற்று அறுவை சிகிச்சை செய்வது இன்னமும் சட்டவிரோதமானதாகவே இருக்கின்றது.

புருனேயில், ஓரினச்சேர்க்கை/ ஒருபாலீர்ப்பு சட்டவிரோதமானதாக உள்ளதோடு, இந்த சட்டம் ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்குமே பொருந்துகின்றது. ஆண்களுக்கிடையிலான பாலியல் உறவுகள் மரண தண்டனை அல்லது கசையடி தண்டனைக்குரியது; பெண்களுக்கிடையிலான புணர்வு பிரம்படி அல்லது சிறை தண்டனைக்குரியது. மே 2019 இல், புருனே அரசாங்கம் மரணதண்டனை மீதான அதன் தற்போதைய இடைநீக்கத்தை ஒருபாலீர்ப்பு செயல்களுக்கு கல்லெறிந்து கொல்கின்ற மரண தண்டனையாக இருந்த ஷரியா குற்றவியல் சட்டத்திற்கும் நீட்டித்தது.

தாய்லாந்தில், 1956 இல், ஒரே பாலின கூட்டாளர்களுக்கு இடையிலான புணர்வு குற்றமற்றதாக்கப்பட்டது. ஒருபாலீர்ப்புடையவர்களின் மீது வழக்கு தொடர்வதற்கான சட்டம் அதிக செலவானது மற்றும் தேவையற்றது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. ஏனெனில் அவை இருந்தபொழுதிலும், உண்மையான வழக்காடல்களை எதுவும் இருக்கவில்லை.

# அமர்வு 04: பொதுவான அச்சங்கள் மற்றும் பொதுவான கட்டுக்கதைகள்

*பயிற்சி வழங்குநர் பங்கேற்பாளர்களால் கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு பதிலளிப்பார்.*

## நேரம்

20 நிமிடங்கள்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- SOGIESC இன் பல்வகைத்தன்மை பற்றிய சில பொதுவான கட்டுக்கதைகளையும் தவறான கருத்துக்களையும் சவாலுக்குட்படுத்த முடியும்.

## தேவையான கருவிகள்

- பங்கேற்பாளர்களுக்கான கடதாசிகள் மற்றும் பேனாக்கள்

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

- முந்திய அமர்வை தொடங்கும் முன் (அமர்வு 03: ஆசியாவிலுள்ள ஒரே பாலின பாலுறவு சட்டங்கள்) ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் 2 காகிதத்துண்டுகளை கொடுக்கவும். LGBT ஆக இருப்பதை பற்றி அவர்களுக்கு இருக்கின்ற கேள்விகளை அநாமதேயமாக எழுதச்சொல்லவும். கேள்விகளை சேகரிப்பதற்காக அறையை சுற்றி ஒரு ஜாடியை அனுப்பவும். LGBT ஆக இருப்பதை பற்றிய கட்டுக்கதைகளை மற்றும் தவறான கருத்துக்களை ஆராய்வதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கின்றது என்பதை நினைவில் கொள்ளவும். பங்கேற்பாளர்கள் அவர்களுக்கு இருக்கின்ற ஒரு குழப்பத்தை தெளிவுபடுத்த முற்படலாம். அல்லது அவர்கள் கேள்விப்பட்ட ஒரு கட்டுக்கதையை அவர்கள் பகிர்ந்து கொள்ளலாம். பங்கேற்பாளர்களுக்கு இருக்கக்கூடிய சரியான கேள்விகளை ஊக்குவிக்கவும். இந்த பயிற்சி அநாமதேயமாக இருப்பதோடு முற்றிலும் முன்முடிவு அற்றதாக இருக்கும் என்பதை முன்னிலைப்படுத்தவும்.

- அமர்வு 03இன் பொழுது, சக- பயிற்சி வழங்குநருக்கு கேள்விகளைப் பார்த்து, ஒரு தர்க்கரீதியான வகைப்படுத்தலில் கேள்வியை வரிசைப்படுத்தவும், தேவைப்பட்டால், கேட்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களைக் கண்டறியவும் முடியும்.

## படிமுறைகள்:

- இந்த அமர்வில் பலதரப்பட்ட SOGIESC உடையவர்களை பற்றிய சில பொதுவான தவறான கருத்துக்களை பற்றி கலந்துரையாடுவதற்கும், அத்தோடு முக்கியமாக இந்த தவறான கருத்துக்களுக்கு பதிலளிப்பதற்கும் பங்கேற்பாளர்கள் வாய்ப்பைப் பெறுவார்கள் என்பதை விளக்கவும்.
- ஒவ்வொரு கேள்வியையும் அல்லது கேள்வித் தொகுதியையும் எடுத்து, ஆதாரங்களையும் மற்றும் உண்மைகளையும் பயன்படுத்தி கேள்விகளுக்கு பதிலளிக்க முயற்சிக்கவும். சில சாத்தியமான கேள்விகள்/ கட்டுக்கதைகள் மற்றும் விடைகள்/ பதில்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

## குறிப்புக்கள்

***ஒருபாலீர்ப்பாளராக இருப்பது ஒரு மனநோயாக இருக்கின்றதா?***

• ஓரினச்சேர்க்கை/ ஒருபாலீர்ப்பு என்பது ஒரு மனநோய் அல்ல.

• 1973 இல் அமெரிக்க மனநல மருத்துவர்கள் சங்கம் ஓரினச்சேர்க்கையை/ ஒருபாலீர்ப்பை ஒரு மனநோய் அல்ல என வகைப்படுத்தியது.

• (IDAHO என அறியப்படுகின்ற ஓரினச்சேர்க்கை/ ஒருபாலீர்ப்பு மற்றும் மாற்றுப்பாலின வெறுப்புணர்வுக்கு எதிரான சர்வதேச தினமாக நினைவுகூறப்படுகின்ற) மே 17 ஆம் திகதியானது உலக சுகாதார நிறுவனம் (WHO) ஓரினச்சேர்க்கையை/ ஒருபாலீர்ப்பை ஒரு மனநோய் அல்ல என வகைப்படுத்துவதற்கான ஆதாரங்களை இறுதியாக 1992 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொண்ட நாளாக இருக்கின்றது.

• 2016 ஆம் ஆண்டில் ஓரினச்சேர்க்கை/ ஒருபாலீர்ப்பு மற்றும் மாற்றுப்பாலின வெறுப்புணர்வுக்கு எதிரான சர்வதேச தினத்தின் (IDAHOT) நினைவாக மனித பாலுணர்வின் நோய்மயமாக்கலை நிறுத்துவதற்கான அவசியத்தை பற்றி கலந்துரையாடுகின்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆவணம் வெளியிடப்பட்டது.

• ஆகஸ்ட் 2021 இல், **இலங்கை மனநல மருத்துவர்கள் கல்லூரி** ஓரினச்சேர்க்கை/ ஒருபாலீர்ப்பு என்பது ஒரு மனநோய் அல்ல என்பதை அங்கீகரித்ததோடு ஒரே பாலின பாலுறவு செயற்பாட்டை குற்றமற்றதாக்க வேண்டுமென்று ஒரு அறிக்கையை வெளியிட்டது.

***ஒருபாலீர்ப்பாளராக இருப்பது ஒரு தெரிவா அல்லது ஒரு விருப்பமா?***

• ஒருபாலீர்ப்பு என்பது எதிர்ப்பாலீர்ப்பு போலவே ஒரு தெரிவோ அல்லது தீர்மானமோ கிடையாது. ஒரு ஒருபாலீர்ப்பாளரிடம், "நீங்கள் எப்பொழுது ஒருபாலீர்ப்பாளராக இருக்க முடிவு செய்தீர்கள்?" என்று கேட்பது, ஒரு எதிர்ப்பாலீர்ப்புடைய நபரிடம், "நீங்கள் எப்பொழுது எதிர் பாலினத்தவர்களால் ஈர்க்கப்படுவதற்கு முடிவு செய்தீர்கள்?" என்று கேட்பதை ஒத்ததாக இருக்கின்றது.

• பாலீர்ப்பு (ஒருபாலீர்ப்பு அல்லது எதிர்ப்பாலீர்ப்பு, அதாவது gay அல்லது straight) உயிரியல் மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளின் ஒரு விளைவாக இருப்பதாக அறிவியல் தரவுகள் குறிப்பிடுகின்றன.

***ஒருபாலீர்ப்பு பரிணாமத்தை எதிர்க்கின்றது. அப்படியானால், அது இயற்கைக்கு மாறானதல்லவா?***

• உண்மையில் ஒருபாலீர்ப்பு இயற்கையில் பொதுவானதாகவே இருக்கின்றது. ஜப்பானிய மக்காக் மற்றும் சிவப்பு மா வண்டுகள் போன்ற சில மிருகங்கள் ஒருபாலீர்ப்பு பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுகின்றன.

• வாழ்நாளில் ஒன்றாக இணைகின்ற பெங்குவின் மற்றும் லேசன் அல்பாட்ரோஸ்கள் சில வேளைகளில் ஒரே பாலின கூட்டாளர்களுடன் கூட்டாக இருக்கும். உயிரியல் பூங்காக்களிலுள்ள/ மிருகக்காட்சிச்சாலைகளிலுள்ள ஒருபாலீர்ப்பு பென்குயின் ஜோடிகள் பென்குயின் குஞ்சுகளை தத்தெடுப்பது கூட அறியப்பட்டிருக்கின்றது.

• எதிர்ப்பாலினத்தின் கூட்டாளர்கள் கிடைத்தாலும் கூட வாழ்நாள் முழுவதும் ஒரே பாலின கூட்டாளர்களின் மீது பாலியல் ஈர்ப்பை கொண்டிருக்கும் இரு உயிரினங்களை அவதானிக்க முடிகிறது. அதில் ஒன்று, மனித இனம். மற்றையது செம்மறி ஆடு.

http://www.bbc.com/earth/story/20150206-are-there-any-homosexual-animals
https://www.independent.co.uk/news/world/australasia/gay-penguin-couple-adopt-chick-melbourne-b1762200.html

***கட்டுக்கதை: ஒருபாலீர்ப்பு என்பது ஒரு மேற்கத்தேய கருத்தாக இருக்கின்றது***

• உலகின் இந்த பகுதியில் பாலியல் சிறுபான்மையினரை குற்றமயமாக்குதல் என்பது உண்மையில் குடியேற்றவாத மரபின் ஓர் அங்கமாக இருக்கின்றது. பிரிட்டிஷ் ஆட்சியின் பொழுது, விக்டோரியன் சித்தாந்தமானது பல்வேறு வழிகளில், 'இயற்கைக்கு மாறான உடலுறவை' குற்றமயமாக்குகின்ற ஒரு வழியில் உள்ளூர் சட்டக்கட்டமைப்புகளுக்குள் சேர்க்கப்பட்டது. இந்தியா, பங்களாதேஷ், இலங்கை மற்றும் நேபாளத்திலுள்ள குற்றவியல் சட்டங்கள் குடியேற்றவாதத்துக்கு பின்பு 'இயற்கைக்கு மாறான உடலுறவு' குற்றமயமாக்குதலை உள்ளடக்கின.

***கட்டுக்கதை: பலவிதமான SOGIESC உடையவர்கள் ஒழுங்கற்ற நபர்களாக அல்லது எதிர்பாலீர்ப்பு உடையவர்களை விட அதிக பாலுணர்வு/ பாலியல் உணர்வு கொண்டவர்களாக இருக்கின்றார்கள்***

• இது ஒழுங்கற்றவர்களாக இருக்கின்ற அந்த தனிநபர்களே அதிகமாக புலப்படுவார்கள் என்ற உண்மையால் பரப்பப்பட்ட ஒரு பொதுமைப்படுத்தலாக இருக்கின்றது. மென்மேலும் அதிக ஒருபாலீர்ப்புள்ள ஆண்களும் பெண்களும் "வெளியே வருகின்றபொழுது", ஒழுங்கீனம் என்ற பொதுமைப்படுத்தல் குறைவடைந்து செல்கின்றது. பலதரப்பட்ட SOGIESC உடையவர்கள் மற்றவர்களை போலவே நிலையான, ஒருதார மணம் ஒழுகும் உறுதியான உறவுகளுக்கு தகுதியுடையவர்களாக இருக்கின்றார்கள். ஒரே பாலின தம்பதிகள் அவர்களுடைய குடும்பங்களைக் கொண்டு நடத்துவதற்கு பெரும்பாலும் நகர்ப்புற சமூகங்களிலிருந்து மறைந்திருந்து அவர்கள் குறைவாக புலப்படக்கூடிய புறநகர் பகுதிகளிலோ அல்லது கிராமப்புறத்திலோ வாழ்கின்றனர்.

• இந்த கட்டுக்கதையை சுற்றியுள்ள மற்றொரு சிக்கல் என்னவென்றால், LGBTQI+ ஆக இருப்பது புணர்வு பற்றியது மட்டுமே என்பதாகும். பலதரப்பட்ட SOGIESC உடையவர்கள் பலசரக்குப்பொருட்களை வாங்குதல், சலவை செய்தல், குழந்தைகளை வளர்த்தல், ஒரு தோட்டம் அமைத்தல் மற்றும் ஒவ்வொருநாளும் வேலைக்கு செல்லுதல் ஆகியவை அடங்கலாக, முழு வாழ்க்கையை வாழ்கின்றார்கள். LGBTQI+ ஆக இருப்பது நீங்கள் யாரைக் விரும்புகின்றீர்கள் மற்றும் உங்களை நீங்களே எப்படி அடையாளம் காணுகின்றீர்கள் என்பதை பற்றியதாக இருக்கின்றது.

• பாலீர்ப்பு என்பது பாலுறவு ஈர்ப்பை பற்றியது மட்டுமல்ல. இது உணர்ச்சி ரீதியான மற்றும் காதல் ரீதியான ஈர்ப்புக் கூறுகளையும் கொண்டிருக்கின்றது.

***கட்டுக்கதை: பலதரப்பட்ட SOGIESC உடையவர்களை சில பழக்கவழக்கங்கள், உடைகள் அல்லது உடலியல் குணாதிசயங்கள் மூலம் அடையாளம் காண முடியும்***

• பலவிதமான ***SOGIESC*** உடையவர்கள், எதிர்பாலீர்ப்பு உடையவர்களை போலவே பல வெவ்வேறு விதமான வடிவங்கள், அளவுகள் மற்றும் நிறங்களில் வருவார்கள். சில LGBTQI+ நபர்களை பொதுமைப்படுத்தப்பட்ட பழக்கவழக்கங்கள் மற்றும் குணாதிசயங்களால் அடையாளம் காண முடியும். ஆயினும் பல எதிர்பாலீர்ப்பு உடையவர்களும் இதே பழக்கவழக்கங்களையும் குணாதிசயங்களையும் வெளிப்படுத்துகின்றனர். இன்று பலதரப்பட்ட SOGIESC உடைய சில நபர்கள் தாங்கள் பிரதானமான சமூகத்தில் தேர்ச்சி பெறுவதற்கு அவ்வாறு ஆடை அணிய வேண்டும் என்று

உணர்கின்றார்கள், எனவே சில LGBTQI+ நபர்கள் தங்களுடைய தோற்றத்தின் ஊடாக ஒரு அரசியல் கூற்றை வெளியிடுகின்றார்கள்.

***கட்டுக்கதை: ஒருபாலீர்ப்பு உள்ள ஆசிரியர்கள் வகுப்பறையில் அனுமதிக்கப்படக்கூடாது***

• சிறுவர்கள் மீதான பாலியல் ஈர்ப்பு (paedophilia) மற்றும் ஒருபாலீர்ப்பு (homosexuality) ஆகிய இரண்டும் முற்றிலும் வேறுபட்ட எண்ணக்கருக்கள் ஆக இருக்கின்றன. சிறுவர்கள் மீதான பாலியல் ஈர்ப்பு அல்லது சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது ஒரு குழந்தையின் மீது பாலியல் கட்டுப்பாட்டை செலுத்துகின்ற - அதிகார துஷ்பிரயோகத்தை பற்றியதாகும். ஒருபாலீர்ப்பு என்பது ஒரே பாலின ஈர்ப்பைப் பற்றியது. ஒரு பாலின உறவுமுறையில் புணர்வு சம்மதமுடன் வயது வந்தவர்களுக்கு இடையிலேயே நிகழ்கின்றது.

• சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் அவர்களின் பாலினத்தை பொருட்படுத்தாமல் சிறுவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படுகின்றது. எவ்வாறாயினும், சிறுமிகள் சிறுவர்களை விட இரண்டு மடங்கு அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். குற்றவாளிகள் பாலியல் ஆசையினால் அல்லாமல், அதிகாரத்தினாலும் கட்டுப்படுத்தும் திறனாலும் தூண்டப்படுகின்றார்கள்.

***கட்டுக்கதை: மக்கள் ஒருபாலீர்ப்பிலிருந்து குணமடையலாம்***

• அது நோய் இல்லை. எனவே, எந்த சிகிச்சைகளும் கிடையாது.

• நோய்க்குறியியல் வகைப்பாடுகளின் அடிப்படையில், LGBT மக்கள் தொடர்ந்தும் துஷ்பிரயோகமான, தீங்கு விளைவிக்கின்ற மற்றும் நெறிமுறையற்ற கட்டாய சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கு குறிப்பாக தீங்கு விளைவிக்கக்கூடிய பாலீர்ப்பு அல்லது பாலின அடையாளத்தின் அடிப்படையில் 'மாற்றம்' அல்லது 'பரிகார சிகிச்சைகள்' என்று அழைக்கப்படுபவை இதில் அடங்குகின்றன.

• கட்டாயப்படுத்தப்பட்ட, வற்புறுத்தப்பட்ட மற்றும் விருப்பமில்லாத சிகிச்சைகள் மற்றும் நடைமுறைகள் வாழ்நாள் முழுவதும் கடுமையான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான வலி மற்றும் துன்பத்திற்கு வழிவகுக்கும். அத்தோடு சித்திரவதைக்குட்படுத்தப்படுவதிலிருந்து மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற முறையில் அல்லது இழிவாக

நடத்தப்படுவதிலிருந்து அல்லது தண்டனையிலிருந்து விடுபடுவதற்கான உரிமையை மீறும். மாற்றுப்பாலினத்தவர்கள் மற்றும் ஒரே பாலின உறவுகளை தொடர்ச்சியாக குற்றமயமாக்குதல், மாற்றுப்பாலினத்தவர்களின் பாலின அடையாளத்தை உத்தியோகபூர்வமாக அங்கீகரிப்பதை மறுத்தல் உள்ளிட்ட - நோய்க்குறியியல் வகைப்பாடுகள் LGBT நபர்களுக்கு எதிரான பிற துஷ்பிரயோகங்களை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றன - அத்தோடு இது ஒதுக்கப்படுதலுக்கும் மற்றும் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு மற்றும் வீட்டுவசதி போன்ற சூழல்களில் LGBT நபர்களை விலக்குதலுக்கும் காரணமாக அமைகிறது.

# அமர்வு 05: இலங்கையின் குயர் உரிமைகள் இயக்கம் - ஒரு காலவரிசை

*செயற்பாட்டுடனான ஒரு கலந்துரையாடல்.*

## நேரம்

1 மணித்தியாலம்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- குயர் உரிமைகள் இயக்கம் தொடர்பான இலங்கை வரலாற்றில் இருக்கின்ற முக்கியமான நிகழ்வுகளை அடையாளம் காணமுடியும்.
- LGBT உரிமைகளுக்கான அரசின் துலங்கலிலான தளம்பல்களைக் கண்டறிய முடியும்.

## தேவையான கருவிகள்

அட்டைகள்

## தயாரிப்பு

குறிப்புக்களில் பட்டியலிடப்பட்டுள்ள நிகழ்வுகளின் விளக்கங்களை தனிப்பட்ட தாள்களில் அச்சிடவும். ஒரு தனித்தாளில் ஒரேயொரு நிகழ்வு மட்டுமே அச்சிடப்பட வேண்டும். 26 நிகழ்வுகள் உள்ளன. பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், சில தாள்களை அகற்றவும் அல்லது. பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையுடன் பொருந்தக்கூடிய வகையில் தொடர்ச்சியான நிகழ்வுகளை இரண்டிரண்டாக பட்டியலிடுகின்ற குழுத்தாள்களை வழங்கவும்.

### <u>படிமுறைகள்</u>

- இந்த செயற்பாட்டில், நீங்கள் இலங்கையிலுள்ள குயர் உரிமைகள் இயக்கத்தின் வரலாற்றை பார்ப்பீர்கள் என்பதை விளக்கவும்.

- நிகழ்வுகள் அச்சிடப்பட்ட காகிதங்களை/ தாள்களை பங்கேற்பாளர்களுக்கிடையே விநியோகிக்கவும்.

- பங்கேற்பாளர்களுக்கு நிகழ்வுகளை வாசிக்குமாறு சொல்லவும். அத்துடன் நிகழ்வுகள் காலவரிசைப்படி இருக்குமாறு ஒரு வரிசையில் நிற்கச்

சொல்லவும். இந்த செயற்பாட்டிற்கு 10 நிமிடங்கள் கொடுக்கவும். தேவைப்படுகின்ற இடங்களில் உதவியை வழங்கவும்.

- பங்கேற்பாளர்கள் ஒரு வரிசையில் நின்றவுடன், அவர்களுடைய தாள்களிலுள்ள நிகழ்வுகளை வாசிக்குமாறு பங்கேற்பாளர்களுக்கு சொல்லவும்.

- இதை பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?', 'இது ஏன் நடந்தது என்று நினைக்கின்றீர்கள்?', 'இது மீண்டும் நிகழ்வதற்கான சாத்தியம் இருக்கின்றதா?', மற்றும் 'அதன் பிறகு என்ன நடந்தது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?' போன்ற கேள்விகளை பயன்படுத்தி இந்த நிகழ்வுகளில் கருத்து தெரிவிப்பதற்கு பங்கேற்பாளர்களை தூண்டுவதன் மூலம் இந்த நிகழ்வுகளை சுற்றி ஒரு ஊடாடும் கலந்துரையாடலில் ஈடுபடவும்.

- போக்குகளை கவனிக்கவும். உதாரணமாக, சர்வதேச சமூகத்தின் முன்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு முற்போக்கானது என்பதை நீங்கள் கவனிப்பீர்கள். எவ்வாறாயினும், LGBTIQ மக்களின் உரிமைகளுக்கு கடுமையான தடைகளை ஏற்படுத்துவோராக அரசியல்வாதிகள் மற்றும் ஊடகங்கள் இருந்துவருகின்றார்கள். அத்தோடு சமூகங்களை பற்றிய தவறான கருத்துக்களை நிலைநிறுத்தியிருக்கின்றார்கள். எச்ஐவி தடுப்பு திட்டங்கள்/ நிகழ்வுகள் இயக்கத்திற்கு எவ்வாறு சாதகமாக பங்களித்திருக்கின்றன என்பதை அவதானிக்கவும். LGBTIQ நபர்கள், எவ்வளவு அதிகமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றார்கள் மற்றும் குறிப்பாக சமூக ஊடகங்களில் அவர்களுக்கு எந்தளவு மரியாதையுள்ளது என்பதை கவனிக்கவும்.

## குறிப்புக்கள்

**1995**

ஒரு பயணத்தில் தோழர்கள் (Companions on a Journey) நாட்டின் முதலாவது குயர் சார்ந்த அமைப்பாக அதன் செயற்பாடுகளை தொடங்கியது. இந்த குழு ஒருபாலீர்ப்பாளர்களுடன் பணிபுரிவதில் கவனம் செலுத்தியது. அத்தோடு இறுதியில் ஒருபாலீர்ப்பாளர் உரிமைகளுக்கான ஒரு முன்னணி அமைப்பாக மாறியது. குழுவின் பிரதான நோக்கம் ஒருபாலீர்ப்பை குற்றமற்றதாக்குவதாக இருந்தது. அதன் ஸ்தாபகரான, ஷெர்மன் டி ரோஸ், இலங்கையின் முதலாவது வெளிப்படையான ஒருபாலீர்ப்பாளராக அறியப்படுகின்றார். வெளியே வந்ததன் ஒரு விளைவாக, அவர் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் மற்றும் தாக்குதல்களுக்கும் முகம்கொடுத்தார். எவ்வாறெனினும், COJ ஆனது ஒருபாலீர்ப்பாளர் சமூகத்திற்கு ஒரு பாதுகாப்பான இடமாக மாறியதோடு, குயர் திரைப்படங்களை திரையிடுதல் மற்றும் ஒருபாலீர்ப்பாளர் இலக்கியம் மற்றும் எச்ஐவி/ எய்ட்ஸ் பற்றிய தகவல்களுக்கான அணுகலை வழங்குதல்; மற்றும் நாட்டின் எச்ஐவி தடுப்பு மூலோபாயத்தில் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் இரண்டுடனும் இணைந்து பணியாற்றுவதில் ஒரு முக்கிய பங்கை வகித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டது. 2011 ஆம் ஆண்டில், தவறாக நிதியை நிர்வகித்ததாக குற்றச்சாட்டுக்கள் எழுந்ததையடுத்து COJ ஆனது கலைக்கப்பட்டது.

**1999**

1999 களில், பெண்கள் ஆதரவு குழு (WSJ) COJஇற்குள் ஒரு தன்னாட்சி பெற்ற அமைப்பாக வெளிப்பட்டது. இது ஒருபாலீர்ப்பு, இருபாலீர்ப்புள்ள மற்றும் மாற்றுப்பாலின (LBT) பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் முதலாவதும் மற்றும் ஒரே குழுவுமாக இருந்தது.

1999 இல், WSG ஆனது முதலாவது லெஸ்பியன் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தது. ஆனால் தேசிய பத்திரிகையான, தி ஐலண்ட் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்ற பெண்களை வல்லுறவுக்கு உட்படுத்த வேண்டும் என அழைப்பு விடுக்கும் ஒரு கட்டுரையை வெளியிட்டதையடுத்து அந்த நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டது. பின்னர் இந்த அமைப்பு 2010 இல் கலைக்கப்பட்டது.

**2004**

ஈக்குவல் கிரவுண்ட் – சமத்துவ நிலைப்பாடு (Equal Ground) ரோசன்னா பிளேமர்-கல்தேராவால் உருவாக்கப்பட்டது. அனைத்து பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளங்களையும் கொண்டவர்களின் மனித உரிமைகளுக்காக இந்த அமைப்பு குரல் கொடுக்கிறது.

**2005**

2005 இல் ஆட்சி மாற்றத்துடன், LGBTIQ-சார்ந்த அமைப்புக்கள் அரச கண்காணிப்பின் கீழ் வந்தன. ஊடகங்களால் LGBTIQ குழுக்களை குறிவைத்த ஒருபாலீர்ப்பு வெறுப்புணர்வும் பரப்புரை செய்யப்பட்டது.

**2009**

ஆண்களுடன் புணர்கின்ற ஆண்கள் (MSM), எச்ஐவி மற்றும் பாலியல் ஆரோக்கியம் பற்றிய முதலாவது தேசிய ஆலோசனை கூட்டம் நடந்தது. பாலியல் ரீதியாக பரவுகின்ற நோய்த்தொற்றுகளுக்கு சிகிச்சை பெறுபவர்களுக்கான முதலாவது நடமாடும் மையம் COJ இன் ஊடாக திறக்கப்பட்டது.

**2011**

அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சுக்கு அறிக்கை செய்கின்ற ஒரு குழுவினால் தயாரிக்கப்பட்ட, உரிமைகளுக்கான ஒரு வரைவு சட்டமூலம் பாதுகாக்கப்பட்ட ஒரு குணாதிசயமாக பாலீர்ப்பைவெளிப்படையாக உள்ளடக்கியது. 2011 இல் அமைச்சரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மனித உரிமைகள் செயல் திட்டத்தின்படி, இந்த சட்ட மூலமானது நீதி அமைச்சிடம் மறுபரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. எவ்வாறெனினும், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**2014**

மத தீவிரவாதத்தின் எழுச்சியுடன், சிங்கலே மற்றும் பொதுபல சேனா போன்ற தீவிரவாத அமைப்புக்கள் சகிப்புத்தன்மையற்ற ஒரு சூழலை உருவாக்கின. LGBTIQ மக்களின் சமத்துவத்திற்கான உரிமையை உறுதி செய்வதற்கான முயற்சிகளை அவர்கள் தொடர்ந்து கண்டனம் செய்தனர், மற்றும் LGBTIQ அமைப்புக்களை - குறிப்பாக சமூக ஊடகங்களில் - அச்சுறுத்தவும் தாக்கவும் தலைப்பட்டனர்.

**2014**

ஏப்ரல் மாதம் அப்போதைய பொருளாதார விவகார அமைச்சர், இலங்கை ஒருபாலீர்ப்பு திருமணத்தை சட்டபூர்வமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்ற நிபந்தனையின் பெயரில் வழங்கப்படவிருந்த பிரிட்டிஷ் உதவியை அரசாங்கம் நிராகரித்ததாக ஊடகங்களுக்கு தெரிவித்தார். கடனில் மூழ்கியுள்ள உள்நாட்டுப்போரினால் பாதிக்கப்பட்ட ஒரு நாடு, அதன் சட்ட கட்டமைப்பில் ஆதாரங்களின் அடிப்படையிலான திருத்தம் செய்வதை கலாசார விழுமியங்கள் பற்றிய ஒரு தவறான கருத்தின் அடிப்படையில் மறுத்துவிட்டது.

**2014**

ஒக்டோபர் மாதம் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழு இலங்கையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான அறிக்கையை மறுபரிசீலனை செய்ததை தொடர்ந்து, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பிம்பா ஜயசிங்க திலகரத்ன பின்வருமாறு கூறினார்: பிரிவு 12.2 இன் கீழ் " ***பாலீர்ப்பு***

*மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படைகளில் பாகுபாடு காட்டுகின்ற சட்டங்கள் அரசியலமைப்பிற்கு முரணாக இருக்கின்றன"* மற்றும் *"பிரிவு 12.1 [அரசியலமைப்பின்]* ***பாலீர்ப்பு*** *மற்றும் பாலின அடையாளத்திற்கான சமத்துவத்தை உறுதிப்படுத்துகின்றது". "பிரிவுகள் 365 மற்றும் 365A [இலங்கையின் தண்டனைச்சட்டக் கோவையின்] எந்தவொரு குறிப்பிட்ட குழுவையும் குறிவைத்ததில்லை ஆனால் அவை பொது ஒழுக்கத்தை பாதுகாப்பதற்காகவே இருக்கின்றன".*

**2015**

ஜூன் மாதம், அப்போதைய வெளிவிவகார அமைச்சரான மங்கள சமரவீர ஒருபாலீர்ப்பாளர்களாக உள்ள ஐநா ஊழியர்களது வாழ்க்கைத்துணை நலன்களை திரும்பப்பெறுவதற்கான ரஷ்யாவின் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்த பின்னர், தேசிய சுதந்திர முன்னணியை சேர்ந்த விமல் வீரவங்ஷ அவரைக் கைது செய்யுமாறு கோரினார்: "ஒருபாலீர்ப்பாளர்களுடன் நட்புறவாக இருப்பது இன்று எங்களுடைய வெளிவிவகார கொள்கையாக மாறியிருக்கின்றது. இது இலங்கைக்கு நீண்டகாலத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்... இது எமது கலாசாரத்தை பாதிக்கும். ஆகவே, தண்டனைச்சட்டக்கோவையை மீறியதற்காக அமைச்சரை கைது செய்ய வேண்டும்.".

அதே விடயம் தொடர்பில், மற்றுமொரு எதிர்க்கட்சி தலைவரான பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளரான, உதய கம்மன்பில, சமத்துவம் என்பதன் அர்த்தமானது அனைத்து குழுக்களும் சமமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதல்ல என்று கூறினார்.

**2015**

டிசம்பர் மாதம் பாராளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ டெய்லி நியூஸ் செய்தித்தாளுடனான நேர்காணலில் இவ்வாறு கூறினார்: "நான் ஒருபாலீர்ப்பு இருபாலீர்ப்பு மற்றும் மாற்றுப்பாலின (LGBT) உரிமைகளுக்கு முற்றிலும் எதிரானவன். இது மனிதனின் தேவையல்ல. எங்களுக்கு ஒரு வருங்கால சந்ததி தேவையாயிக்கின்றது. மன அழுத்தத்தின் காரணமாகவே இந்த வகையான உணர்ச்சிகள் வெளிவருகின்றன என அறிவியல் பரிசோதனைகள் தெரியப்படுத்துகின்றன. மக்கள் மன அழுத்தம் நிறைந்த காலகட்டங்களில் அல்லது அத்தகைய சூழல்களில் இருக்கின்ற பொழுது, இயற்கைக்கு மாறான உணர்வுகள் வெளிவருகின்றன. உதாரணமாக, அவர்கள் காடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பொழுது, எங்களால் இந்த நடத்தையை காண முடியாது. எவ்வாறாயினும், அவர்கள் (ஒரு இடத்தில்) அடைக்கப்பட்டால், எங்களால் இந்த நடத்தையை காணக்கூடும். நான் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான திருமணத்தை நம்புகிறேன். ஒரே பாலின திருமணமானது இயற்கைக்கு மாறானதாக இருக்கின்றது. இது மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கு எதிரானது."

**2016**

1996 ஆம் ஆண்டு 21 ஆம் இல. HRCSL சட்டத்தின் 10 வது பிரிவின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு செய்யப்பட வேண்டிய கொள்கை தலையீடுகள் குறித்த தனது ஆணையின்படி பரிந்துரைகளை வழங்குவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு (HRCSL) குறிப்பிட்ட தொனிப்பொருளை கொண்ட பிரச்சனைகளுக்கு 9 உப குழுக்களை நியமித்தது. ஒவ்வொரு கருப்பொருள் தொடர்பான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் உத்தியோகபூர்வ நடைமுறைகளை உப குழுக்கள் மூலம் மீள்பரிசீலனை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மேலும், உப குழுக்கள் மூலமாக அவ்வந்த பிரச்சினைகளுக்கு தேவையான கொள்கை மற்றும் நடைமுறை தலையீடுகள் குறித்து ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

அவர்கள் LGBTIQ நபர்களின் உரிமைகளுக்கான தற்போது செயலற்றதாக இருந்து வருகின்ற ஒரு உப குழுவை நிறுவினர். LGBTIQ நபர்களின் உரிமைகளுக்கான உப குழு, LGBTIQ நபர்களை "குணப்படுத்த" விளம்பரம் மற்றும் மருத்துவ சிகிச்சைகளை வழங்குகின்ற அங்கீகரிக்கப்படாத மருத்துவ மையங்களை விசாரிப்பதற்கு தனியார் மருத்துவ நிறுவனங்களை கண்காணித்து ஒழுங்குபடுத்துவதற்கு அதிகாரமுள்ள தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை கவுன்சிலின் கவனத்தை ஈர்த்தது. பாடசாலை பாடத்திட்டத்தில் விரிவான பாலியல் கல்வியை (CSE) சேர்ப்பது தொடர்பாக, பல்கலைக்கழகங்களில் LGBTIQ நபர்களை கொடுமைப்படுத்துகின்ற சம்பவங்களை கண்காணித்தல், மற்றும் பாலின அங்கீகார சான்றிதழ்களை பெறுவதற்கு கட்டாயமாக ஹோர்மோன் சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை முறைகளுக்கு உட்படுத்துதல் போன்ற பாலின அங்கீகார சான்றிதழ்களுக்கு விண்ணப்பிப்பவர்கள் எதிர்கொள்கின்ற சவால்கள் குறித்தும் உப குழு கலந்துரையாடியது

**2016**

ஜூன் மாதத்தில் இலங்கையின் சுகாதார அமைச்சு மாற்றுப்பாலினத்தவர்களுக்கான பாலின அங்கீகார சான்றிதழை வழங்குவதற்கான நடைமுறையை அமைக்கின்ற ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது.

மாற்றுப்பாலினத்தவர்கள் அவர்களுடைய பிறப்பு சான்றிதழ் மற்றும் பிற அடையாள ஆவணங்களை அவர்களுடைய உண்மையான பாலின அடையாளத்துடன் பொருந்தும் விதத்தில் இப்பொழுது மாற்றிக்கொள்ள முடியும். மாற்றுப்பாலினத்தவர்கள் முகங்கொடுத்த பாகுபாடு மற்றும் வன்முறையையும் சுற்றறிக்கையானது இனங்கண்டுள்ளது.

16 வயதுக்கு மேற்பட்டவர்கள் சான்றிதழுக்காக விண்ணப்பிப்பதை சுற்றறிக்கை அனுமதித்தது. விண்ணப்பதாரர்கள் ஒரு மனநல மருத்துவருடனான ஒரு மதிப்பீட்டிற்கு பின்பே ஒரு பாலின அங்கீகார சான்றிதழை (GRC) பெற வேண்டும்.

GRC ஆனது ஒரு மனநல மருத்துவ ஆலோசகராலும், அதன் பின் சுகாதார அமைச்சகத்தின் கீழுள்ள ஒரு நிறுவனத்தின் தலைவராலும் சான்றளிக்கப்பட வேண்டும்.

2021 ஆம் ஆண்டின் 3 ஆம் காலாண்டு வரை மொத்தமாக வழங்கப்பட்ட GRC களின் எண்ணிக்கை 193 ஆக இருக்கின்றது. எவ்வாறாயினும், சான்றிதழை வழங்குவதற்கான அதிகாரமுள்ள சுகாதார நிலையங்கள் குறைவாக இருப்பதால் சான்றிதழை பெறுவதில் சில சவால்கள் உள்ளன.

**2017**

ஒருபாலீர்ப்பை குற்றமற்றதாக்குவதை பற்றி இலங்கை அரசாங்கம் ஆலோசித்தது. நாட்டில் உள்ளூர் LGBTIQ சார்ந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் செயலூக்கத்துடன் ஈடுபடுவதை தூண்டிய இந்த செயற்றிட்டம் இறுதியில் கைவிடப்பட்டது.

**2017**

ஜனவரி மாதத்தில், மனித உரிமைகள் திட்டத்திலிருந்து ஒரே பாலின பாலுறவு செயற்பாட்டை குற்றமற்றதாக்குகின்ற ஒரு முன்மொழிவை அரசாங்கம் கைவிட்டது; "கலாசார ரீதியாக பொருத்தமற்ற" முன்மொழிவுகளை கைவிடுவதாக ஜனாதிபதி தீர்மானித்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாபா அபேவர்தன தெரிவித்தார்.

**2017**

ஜனவரி மாதத்தில், அப்போதய நீதி அமைச்சர் ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ சலுகையின் நிபந்தனைகள் குறித்து பேசுகையில், "நாட்டில் ஒருபாலீர்ப்பை சட்டப்பூர்வமாக்குமாறு நாங்களும் கேட்டுக்கொள்ளப்பட்டோம். அடிப்படை அரசியலமைப்பின் உறுப்புரைகளில் அதைச் சேர்க்குமாறு ஐரோப்பியர்கள் எங்களிடம் கேட்டுக்கொண்டனர். அவர்களிடம் ஒரு அநாகரீகமான கலாசாரம் இருந்த பொழுதிலும், இலங்கையர்கள் அப்படிப்பட்ட மனநோய் உடையவர்கள் அல்ல என்பதை நாங்கள் அவர்களுக்கு தெளிவாக கூறினோம்." எனக்குறிப்பிட்டார். பிரபல மாற்றுப்பாலின உரிமைகள் ஆர்வலரான, வைத்தியர் சமிந்திர வீரவர்தன " பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் தன்னுடைய சொந்த குடிமக்களுக்கு நீதியை வழங்காமல் இருக்கின்ற ஒரு குறுகிய எண்ணம் படைத்த ஒரு நீதி அமைச்சரே எங்களுக்கு வாய்த்திருக்கிறார் என்பதற்கு இந்த கருத்து ஒரு சான்றாகும்" என்று குறிப்பிட்டார்.

**2017**

ஆகஸ்ட் மாதத்தில், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் குழு (CESCR) அதன் இறுதி அவதானிப்புக்களில், "ஒரே பாலின நடத்தையை குற்றமற்றதாக்குகின்ற ஒரு நோக்கில் தண்டனைச்சட்டத்தை திருத்த வேண்டும்" என்று இலங்கையை வலியுறுத்தியது. "LGBTIQ நபர்களுக்கு எதிரான வன்முறையை எதிர்த்துப் போராடுவதற்கும் அதனைத் தடுப்பதற்கும், அனைத்து மனித

உரிமைகளிலும், குறிப்பாக சுகாதாரம், கல்வி, வேலை மற்றும் வீட்டு உரிமை ஆகியவற்றில் அவர்களுடைய சமமான மகிழ்ந்தனுபவித்தலை உறுதி செய்வதற்கும் அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" எனப் பரிந்துரைத்த CESCR பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தை உள்ளடக்கிய பாகுபாட்டிற்கு எதிரான ஒரு சட்டத்தை இலங்கை அதன் பாதுகாப்பான எல்லைக்குள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டது.

**2017**

நவம்பர் மாதம் ப்இலங்கையின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல், நெரின் புல்லே, நாட்டின் UPR மறுபரிசீலனைக்கு பின்பு, இலங்கையில் தண்டனைச்சட்டத்தை மாற்றுவதாக உறுதியளித்ததுடன்: "LGBTIQ சமூகத்தின் நபர்களுக்கு ஒரு பாரபட்சமான முறையில் சட்டத்தில் எந்த விதியும் பயன்படுத்தப்படாது என்பதை உறுதிப்படுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது" எனக் குறிப்பிட்டார்.

**2017**

இலங்கை தேசிய HIV/STI மூலோபாய திட்டம் 2018 - 2022, ஒரு சுமுகமான சூழலை கட்டியெழுப்பும் நோக்கில் பிரதான மக்கள்தொகை மற்றும் எச்ஐவி உடன் வாழ்கின்ற மக்களுக்கு சாதகமான சூழலை வலுப்படுத்துவதற்கும், பிரதான மக்கள்தொகையை குற்றமயமாக்குகின்ற - குறிப்பாக தண்டனைச்சட்டக்கோவையின் s.365 மற்றும் s.365A, விபச்சார விடுதி சட்டம், மற்றும் அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டம் போன்ற - சட்டங்களை மீளாய்வு செய்ய அல்லது இரத்துச் செய்ய கொள்கை வகுப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கக்கூடிய NAC இன் சட்ட மற்றும் நெறிமுறை உப குழுவை மறுசீரமைப்பதற்கு முன்மொழிந்தது.
ஒருபாலீர்ப்பு உறவுகளை குற்றமாக்குகின்ற தண்டனைச்சட்டக்கோவையின் இரண்டு பிரிவுகள் ஆண்களுடன் மற்றும் மாற்றுப்பாலின பெண்களுடன் புணர்கின்ற ஆண்களுக்கு HIV/STI சேவைகளை அணுகுவதற்கு ஒரு தடையாக இருப்பதை மூலோபாயத்திட்டம் இனங்கண்டுள்ளது. எச்ஐவி ஐ தடுப்பதற்குபிரதான மக்கள் தொகை சேவையை பெறுவதை தடுக்கின்ற சட்டங்களை மறுபரிசீலனை செய்வது மிக அவசியமாக இருக்கின்றது.

**2018**

2018 ஆம் ஆண்டின் முற்பகுதியில், அதன் மூன்றாவது UPR சுழற்சியின் பொழுது, இலங்கை அரசாங்கம் LGBT நபர்களுக்கு எதிரான பாகுபாட்டை தடுப்பதற்கும் மற்றும் எதிர்த்துப்போராடுவதற்கும் இத்தாலி, ஆர்ஜென்டினா மற்றும் போர்த்துக்கல் ஆகியவற்றின் பரிந்துரைகளை ஆதரித்தது. அத்துடன் ஒரே பாலீர்ப்பு நடத்தையை குற்றமற்றதாக்குவதற்கு பல பரிந்துரைகள் செய்யப்பட்டன.

**2018**

நவம்பரில், அரசியலமைப்பு சதித்திட்டத்தின் பொழுது, அப்போதைய இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஓர் உரையில் பிரதமர் ரணில்

விக்கிரமசிங்கவை பாலியல் சிறுபான்மையினரை குறிப்பிடுகின்ற ஒரு இழிவான வார்த்தையான - "வண்ணத்துப்பூச்சி கூட்டம்" என்ற சொற்றொடரை பயன்படுத்தி தாக்கினார். அரசியலமைப்பு நெருக்கடி காலப்பகுதி முழுவதிலும் LGBTIQ அமைப்புக்களின் பிரதிநிதிகள் கொழும்பில் மற்ற சிவில் சமூக அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து ஆட்சிக்கவிழ்ப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

**2019**

2019 ஏப்ரல் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் குழுவிடம் இலங்கை 6ஆவது பருவகால அறிக்கையை சமர்ப்பித்தது. அறிக்கையில், அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான விவாதங்களில் பாலீர்ப்பு அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதை வெளிப்படையாக தடைசெய்வதற்கான பரிந்துரைகள் அடங்குகின்றன என்றும் அத்தோடு அது ஒரு கொள்கை முன்னுரிமையாக இருக்கின்றது என்றும் அரசாங்கம் குறிப்பிட்டது.

"இலங்கை அரசியலமைப்பின் 12 ஆவது உறுப்புரை சமத்துவம் மற்றும் பாகுபாடின்மைக்கான உரிமையை உறுதி செய்கின்றது. 2014 இல், அரசியலமைப்பின் 12 (1) வது பிரிவின் நோக்கமானது விதிவிலக்கு இல்லாமல் நபர்களுக்கு சமத்துவத்தை உறுதி செய்கின்றது என்று குழுவின் முன்பாக இலங்கை தெளிவுபடுத்தியது. மேலதிகமாக, பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாட்டையும் நீக்குவதற்கான குழு (CEDAW) மற்றும் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் குழுவின் முன்பாக இலங்கை அரசியலமைப்பின் 12 (2) வது பிரிவின் கீழ் பாலீர்ப்பு அடிப்படையில் பாகுபாடு காட்டுவது **மறைமுகமாக தடைசெய்யப்பட்டிருக்கின்றது** எனத் தெளிவுபடுத்தியது. இவ்வாறு சட்டத்தின் சமமான பாதுகாப்பை மறுக்கின்ற அல்லது பாலீர்ப்பு அடிப்படையில் பாகுபாடு காட்டுகின்ற செயல்கள் இலங்கை அரசியலமைப்பின் கீழ் தடைசெய்யப்பட்டிருக்கின்றன. NHRAP இன் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் அத்தியாயமானதுபாரபட்சமான அனைத்து தண்டனைச்சட்டங்களையும் மறுபரிசீலனை செய்வதற்கும் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கும் ஒரு கொள்கை உறுதிப்பாட்டை உள்ளடக்கியிருக்கின்றது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

**2021**

மார்ச் 1 ஆம் திகதி @GotabayaR – என்கிற ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ ட்விட்டர் கணக்கில், "இன்று #பூஜ்ஜிய பாகுபாடு தினம். #lka இன் ஜனாதிபதியாக, வயது, பாலினம்,பாலுணர்வு, இனம், உடலியல் தோற்றம் மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றை பொருட்படுத்தாமல் கண்ணியத்துடன் வாழ்வதற்கான ஒவ்வொருவருடைய உரிமையையும் பாதுகாப்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன்" என்று பதிவிடப்பட்டிருந்தது.

பாகுபாடு காட்டப்படாமல் இருப்பதற்கான மக்களின் உரிமையை அங்கீகரிக்கின்ற பூஜ்ஜிய பாகுபாடு தினத்தை அனுஸ்டிக்கின்ற ஜனாதிபதி

ராஜபக்ஷவின் ட்வீட் ஆனது, ஒரு புதிய அரசியலமைப்பின் வரைவு செயன்முறையை ஜனாதிபதி தொடங்கிய ஒரு நேரத்தில் வந்திருக்கின்றது.

**2021**

ஜூன் மாதத்தில், PRIDE மாதத்தை அங்கீகரிக்கும் வகையில், பல இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ட்விட்டர் தளத்தில் தமது உத்தியோகபூர்வ கணக்குகள் ஊடாக அறிக்கைகளை வெளியிடுதல் போன்ற சமூக ஊடக அறிக்கைகள் மூலமாக தமது ஆதரவை வெளிப்படுத்தினர்;

கொழும்பை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை அரசாங்கத்தின் முன்னாள் பொருளாதார சீர்திருத்தம் மற்றும் பொது விநியோக அமைச்சருமான ஹர்ஷ டி சில்வா, "எந்தவொரு நாடும் மக்கள் யாரை நேசிக்கின்றார்கள் போன்ற காரணங்களுக்காக அவர்களுடைய உரிமைகளை மறுக்கக்கூடாது. இதனால்தான் LGBTIQ சமூகத்தின் உரிமைகளுக்கு நாம் ஆதரவளிக்க வேண்டும்; வெறுப்பு, பாகுபாடு மற்றும் அறியாமை ஆகியவற்றை எதிர்த்துப்போராடுவதில் எங்கள் அனைவருக்கும் ஒரு வகிபாகம் இருக்கின்றது" என்று எழுதியிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், “தாங்கள் தாங்களாகவே இருப்பதற்கும் மற்றும் தாங்கள் விரும்பியவர்களை நேசிப்பதற்கும் அனைவருக்கும் உரிமை இருக்கின்றது. இலங்கையிலுள்ள சிறுபான்மையின இனத்தவர்களை போலவே (தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள்), LGBTIQ தனிநபர்களும் எண்ணிக்கையில் மட்டுமே ‘சிறுபான்மையினராக’ இருக்கின்றார்கள். வடக்கு மற்றும் கிழக்கில் களங்கத்தை நீக்குவதிலும் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் நாங்கள் சிறப்பு கவனத்தை செலுத்த வேண்டும்” என்று ட்விட்டரில் பதிவிட்டிருந்தார். LGBTIQ உரிமைகளுக்கான வெளிப்படையான ஆதரவாளராக இருந்துவந்த பாராளுமன்ற உறுப்பினர், கலாநிதி ஹரிணி அமரசூரிய, LGBTIQ சமூகத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நிகழ்நிலை பொதுக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

**2021**

2021 ஆகஸ்ட் மாதத்தில், **இலங்கை மனநல மருத்துவர்களின் கல்லூரி** ஒருபாலீர்ப்பு ஒரு மனநோய் அல்ல என்பதை அங்கீகரித்து, ஒரே பாலின பாலியல் செயற்பாட்டை குற்றமற்றதாக்குவதற்காக ஓர் அறிக்கையை வெளியிட்டது. பொலிஸ் அதிகாரிகளுக்கான ஒரு பயிற்சியின் பொழுதே ஒருபாலீர்ப்பு ஒரு மனநோயாக இருக்கின்றது எனக் குறிப்பிடுகின்ற ஒரு மனநல மருத்துவரின் வீடியோவிற்கு பதிலளிக்கின்ற வகையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. சமூக ஊடகங்களில் பிரபலமடைந்திருந்த மேற்படி வீடியோ LGBTIQ சமூகங்கள், ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களிடையே ஒரு சீற்றத்தை தூண்டியிருந்தது.

**2021**

தற்பொழுது, நாட்டில் பல LGBTIQ அமைப்புக்கள் இருக்கின்றன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இனக்குழுக்கள் சார்ந்த ஆய்வுகளுக்கான சர்வதேச மையம், பெண்கள் மற்றும் ஊடகங்கள் கூட்டமைப்பு மற்றும் கிராஸ்ரூட்டட் டிரஸ்ட் ஆகியவை அடங்கலாக LGBTIQ உரிமைகளை ஆதரிக்கின்ற அமைப்புக்களும் இருக்கின்றன.

LGBTIQ இயக்கமானது அதை உள்ளடக்குகின்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களின் தொகுப்பில் மட்டுமல்ல, அதன் கூட்டு செயற்பாட்டாளர்களது அடையாளத்தின் அடிப்படையிலும் வேறுபட்டதாக இருக்கின்றது. மக்கள்தொகை அமைப்பை பொறுத்தவரையில் இந்த இயக்கம் நாட்டை போலவே பன்முகத்தன்மை கொண்டது. தங்களுடைய மதம், இனம், மொழி மற்றும் தொழில் ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்டிருக்கின்ற இந்த மக்கள் இயக்கம் உண்மையிலேயே சமூகத்தின் குறுக்குவெட்டாக இருக்கிறது.

### பயிற்சி வழங்குநருக்கான குறிப்பு

இலங்கையில் தற்பொழுது பணிபுரிகின்ற LGBTIQ சார்ந்த அமைப்புக்கள்:

- இதயத்திலிருந்து இதயத்திற்கு (Heart to Heart)
- தேசிய மாற்றுபாலின வலையமைப்பு (NTN)
- வெனச மாற்றுபாலின வலையமைப்பு
- யங் அவுட் ஹியர் (YOH)
- சமூக நல மேம்பாட்டு நிதி (CWDF)
- சத்திரா யாழ்ப்பாண சங்கம்
- ஈக்குவல் கிரவுண்ட் (Equal Ground)

# அமர்வு 06: சொற்களின் முக்கியத்துவம்

*ஸ்லைடுகளின் உதவியுடனான கலந்துரையாடல்*

## நேரம்

30 நிமிடங்கள்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- SOGIESCஇன் பன்முகத்தன்மை தொடர்பான முக்கிய சொற்களை சரியாக வரையறுக்க முடியும்.
- தீங்கிழைக்கும், எதிர்மறையான அல்லது பயன்பாட்டில் இல்லாத வார்த்தைகளை அடையாளம் காண முடியும்

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்

- இந்த அமர்வில், சில தொடர்புடைய சொற்களின் அர்த்தங்களை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள் என்பதை விளக்கவும். பாலியல் மற்றும் பாலினம் பற்றிய எங்களுடைய புரிதல் ஆழமடைவதால் SOGIESCஇன் பன்முகத்தன்மையை சுற்றியிருக்கின்ற சொற்கள் இன்னமும் பரிணாம வளர்ச்சியடைந்துகொண்டிருக்கின்றன என்பதை விளக்கவும். ஆகவே, தொடர்புடைய சொற்களைப் பற்றி இன்றுவரையில்/ இற்றைப்படுத்தலுடன் தெரிந்திருத்தல் நல்லது.

- ஸ்லைடுகளை பயன்படுத்தி, ஒவ்வொரு வார்த்தையையும் ஃப்ளாஷ் செய்து, பங்கேற்பாளர்களுக்கு இதனுடைய அர்த்தம் என்னவென்பதை விளக்குவதற்கான ஒரு வாய்ப்பை கொடுக்கவும். அந்த வார்த்தைக்கு வெவ்வேறு அர்த்தங்கள் அல்லது விளக்கங்கள் இருக்குமானால், பங்கேற்பாளர்களிடம் கேட்கவும். அறையில் சில ஒருமித்த கருத்து இருந்தால், விளக்கத்துடன் கூடிய அடுத்த ஸ்லைடுக்கு செல்லவும்.

- அமர்வின் முடிவில் LGBTIQ சமூகத்திற்கு பொருத்தமான பங்கேற்பாளர்கள் நினைக்கக்கூடிய வேறு ஏதேனும் சொற்கள் இருக்கின்றனவா என்று அவர்களிடம் கேட்கவும். உள்ளூர் மொழிகளில் அல்லது 'ஸ்லாங்/

கொச்சைப்பேச்சு' சொற்களில் ஏதேனும் சொற்கள் உள்ளனவா என பங்கேற்பாளர்களிடம் கேட்கவும். எவ்வாறாயினும், சில பங்கேற்பாளர்களுக்கு இது ஒரு கசப்பான அனுபவமாக இருக்கக்கூடும் என்பதை நினைவில் கொள்ளவும், அத்தோடு பயிற்சி வழங்குநர் என்ற வகையில் ஏனைய பங்கேற்பாளர்கள் அசௌகரியமாக இருக்கவில்லை என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். பங்கேற்பாளர்கள் வெளிப்படுத்தக்கூடிய எதிர்மறையான மதிப்பீடுகளை போதுமான அளவில் நிவர்த்திசெய்வதை/ எடுத்துக்காட்டுவதை உறுதிசெய்யவும்.

- கீழே உள்ள குறிப்புக்கள் பிரிவில், ஸ்லைடுகளில் வழங்கப்பட்ட சொற்கள் மற்றும் வரைவிலக்கணங்களை நீங்கள் காணலாம்.

## குறிப்புக்கள்

**மாற்றுப்பாலின நபர்**

நெறிமுறை அல்லது பாரம்பரிய அர்த்தத்தில் பிறப்பிலேயே ஒதுக்கப்பட்ட பாலினத்துடன் பாலின அடையாளமானது ஒத்துப்போகாத ஒரு நபர்.
மாற்றுப்பாலினத்தவர்கள் மாற்றுப்பாலினத்தவர் என்று பயன்படுத்துவதை தவிர்க்கவும்; ஏனென்றால் 'ஒரு மாற்றுப்பாலின நபர்' - 'மாற்றுப்பாலின' என்பது ஒரு பெயர்ச்சொல் அல்ல, அது ஒரு பெயரடைச்சொல்லாக இருக்கின்றது.

**மாற்றுதல்**

ஒரு நபர் தன்னுடைய உண்மையான பாலின அடையாளத்துடன் ஒத்துப்போவதற்காக தன்னுடைய பாலின வெளிப்பாடு மற்றும் பால் குணாதிசயங்களை மாற்றுகின்ற செயன்முறை. ஒருவருடைய பாலின அடையாளத்தை வெளிப்படுத்துவதற்கு ஆடை அணிவது, அடையாள ஆவணங்களை மாற்றுவது, மற்றும் மருத்துவ நடைமுறைகளை மேற்கொள்வது போன்றவை இதில் அடங்கும்.

**மாற்றுப்பாலியல்/ (ட்ரான்ஸ்செக்சுவல்) நபர்**

தன்னுடைய உண்மையான பாலின அடையாளத்துடன் ஒத்துப்போவதற்கு தன்னுடைய உடலை மாற்றுவதற்காக மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை முறைகளை மேற்கொண்டிருக்கின்ற ஒரு நபர். ஹோர்மோன் சிகிச்சை, மார்பக மாற்று/ முலையழற்சி அறுவை சிகிச்சைகள் , குரல் மாற்று அறுவை சிகிச்சை, மற்றும் பாலின மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை போன்றவை ஒரு நபர் தன்னுடைய பாலின அடையாளத்துடன் பொருந்துமாறு தன்னுடைய உடலை மாற்ற முடியுமான வழிகளில் சிலவாக இருக்கின்றன.

**மேல் அறுவை சிகிச்சை (Top Surgery)**

தன்னுடைய பாலின அடையாளத்துடன் ஒத்துப்போகுமாறு தன்னுடைய மார்பு/ மார்பகங்களை மாற்றுவதற்காக ஒரு மாற்று நபர் செய்கின்ற ஒரு அறுவை சிகிச்சை. ஒரு திருநங்கை மார்பக மாற்று அறுவை சிகிச்சைகளை பெறுவார். ஒரு திருநம்பி ஒரு முலையழற்சியை - ஒரு மார்பக அகற்றல் அறுவை சிகிச்சையை பெறுவார்.

**கீழ் அறுவை சிகிச்சை (Bottom Surgery)**

தன்னுடைய பாலினத்துடன் ஒத்துப்போகுமாறு தன்னுடைய பிறப்புறுப்புக்களை மாற்றுவதற்காக ஒரு மாற்று நபர் செய்கின்ற ஒரு அறுவை சிகிச்சை. இது ஒரு 'பாலின மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை' அல்லது 'பாலின உறுதிப்படுத்தல் அறுவை சிகிச்சை' என்றும் அழைக்கப்படுகின்றது.

**எம்எஸ்எம் (MSM)**

எம்எஸ்எம் என்பது ஆண்களுடன் புணரும் ஆண்களை குறிக்கின்றது. இந்த சொல்லானது எச்ஐவி தடுப்பு திட்டங்களில் மக்களை அவர்களுடைய பாலியல் நடத்தையின் அடிப்படையில் வகைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றது, ஏனென்றால் இது எச்ஐவி பரவுகின்ற அபாயத்தை அதிகரிக்கின்ற பாலியல் நடத்தையாக இருக்கின்றது. ஒருபாலீர்ப்புள்ள மற்றும் இருபாலீர்ப்புள்ள ஆண்கள், மற்றும் ஆண் பாலியல் தொழிலாளர்கள் போன்றோர் எம்எஸ்எம் பிரிவிற்குள் வருகின்றார்கள். ஆண்களுடன் புணரும் எதிர்பாலீர்ப்புள்ளவர்களாக அடையாளம் காணப்படுகின்ற ஆண்களும் இருக்கின்றனர் - அத்தோடு அவர்களும் இந்த பிரிவின் கீழ் வருகின்றார்கள் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

**நாச்சி**

நாச்சி என்பது பெண்மையுள்ள ஆண்களை குறிப்பதற்கு இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற ஒரு சொல்லாக இருக்கின்றது. இது பெண்மையுள்ள ஆண்கள் மற்றும் திருநங்கைகளின் ஒரு குழுவிலுள்ள ஒரு 'உள்ளக சொல்லாக' வெளிப்பட்டது. பெண்மையுள்ள ஆண்கள், மாற்றுப்பாலின பெண்கள்/ திருநங்கைகள், மற்றும் ஒருபாலீர்ப்புள்ள ஆண்களை நாச்சி என்று அடையாளப்படுத்தலாம்.

**நபுன்சக**

சிங்கள மொழியிலுள்ள நேரடி மொழிபெயர்ப்பானது ஒரு பாலினமின்மை என்பதாக இருக்கின்றது. எவ்வாறாயினும், நடைமுறையில் 'நபுன்சகா' என்பது ஒரு மூன்றாவது பாலினத்தை குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. சிலருக்கு இந்த சொல் மனதை புண்படுத்துவதாக காண முடியும்.

**திருநம்பி (Transman)**

பிறப்பிலேயே பெண்ணாக ஒதுக்கப்பட்ட, ஆனால் உண்மையான பாலினம் அல்லது பாலின அடையாளமானது ஒரு ஆணுடையதாக இருக்கின்ற ஒரு நபர். ‘எப்(f)2எம்’ அல்லது ‘பெண் ஆணுக்கு’ என்றும் அழைக்கப்படுகின்றது.

**திருநங்கை (Transwomen)**

பிறப்பிலேயே ஆணாக ஒதுக்கப்பட்ட, ஆனால் உண்மையான பாலினம் அல்லது பாலின அடையாளமானது ஒரு பெண்ணுடையதாக இருக்கின்ற ஒரு நபர். 'எம்2எப்(f)' அல்லது 'ஆண் பெண்ணுக்கு' என்றும் அழைக்கப்படுகின்றது.

**சிஸ் பாலின நபர்**

பிறப்பிலேயே ஒதுக்கப்பட்ட அவர்களுடைய பாலுடன் தொடர்புபட்டிருக்கின்ற விழுமியத்துடன் இணங்குகின்ற பாலின அடையாளத்தை கொண்ட ஒரு நபர். உதாரணமாக, பிறப்பிலேயே ஆணாக நியமிக்கப்பட்ட மற்றும் ஒரு ஆணாக அடையாளம் காணப்படுகின்ற ஒரு நபர்.

**இன்டர்செக்ஸ் நபர்/ இடையிலிங்கத்தவர்**
ஆண் உடல் மற்றும் பெண் உடலின் வரையறைகளுடன் சரியாக பொருந்தாத பாலியல் குணாதிசயங்களை/ பண்புகளை கொண்டிருக்கின்ற ஒரு நபர். அவர்களுக்கு ஆண் மற்றும் பெண் பால் பண்புகள் இரண்டுமே இருக்கலாம்.

**சோடோமி (Sodomy)**
அரிதாகவே வரையறுக்கப்படுகின்ற ஆனால் இரண்டு ஆண்களுக்கு இடையிலான குத புணர்வை குறிக்கப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற விவிலிய பின்புலத்தைக் கொண்ட ஒரு சொல். 'சோடோமி' மற்றும் 'பக்கரி' ஆகியவை சட்ட மொழியில் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்ற ஒத்த சொற்களாக இருக்கின்றன. இந்த சொற்கள் ஒரே பாலின புணர்வு பற்றிய எதிர்மறையான அர்த்தங்களை கொண்டிருக்கின்றன மற்றும் அவை பயன்படுத்தப்படாமல் உள்ளன.

**பாலீர்ப்பு**
உணர்ச்சி ரீதியான, காதல் ரீதியான மற்றும் பாலியல் ரீதியான ஈர்ப்பை ஒருவர் எவ்வாறு அனுபவிக்கின்றார் என்பதை பொறுத்து பாலீர்ப்பு தீர்மானிக்கப்படுகின்றது. ஒருபாலீர்ப்பு, எதிர்பாலீர்ப்பு, இருபாலீர்ப்பு, அனைத்துப்பாலீர்ப்பு மற்றும் பாலீர்ப்பற்ற ஆகியவை பொதுவாக அடையாளம் காணப்பட்ட பாலீர்ப்புகளாக இருக்கின்றன.

**டெமிசெக்சுவல் (Demisexual)**
ஒரு டெமிசெக்சுவல் என்பதும் ஒரு பாலீர்ப்பு. டெமிசெக்சுவல் நபர்கள் ஒருவருடன் ஒரு உணர்ச்சி ரீதியான பிணைப்பை கொண்டிருக்கின்ற பொழுது மட்டுமே, அவர்களில் பாலியல் ரீதியாக ஈர்க்கப்படுகின்றார்கள்.
வேறு ஏதாகிலும் பாலீர்ப்பு பற்றி உங்களுக்கு தெரியுமா?

**லெஸ்பியன்**
உணர்ச்சி ரீதியாகவும், காதல் ரீதியாகவும், மற்றும் பாலியல் ரீதியாகவும் மற்ற பெண்களில் ஈர்க்கப்படுகின்ற ஒரு பெண்.

**இருபாலீர்ப்புள்ள நபர்**
உணர்ச்சி ரீதியாக, காதல் ரீதியாக, மற்றும் பாலியல் ரீதியாக இரு பாலினத்தவர்களிடமும் ஈர்க்கப்படுகின்ற ஒரு நபர். உதாரணமாக, ஆண்கள் மற்றும் பெண்கள் இருவர்களிடமும் ஈர்க்கப்படுகின்ற ஒரு ஆண்.

**இருபால் ஆர்வமுள்ள நபர்/ பைகியூரியஸ் நபர் (Bicurious person)**
இது இருபாலீர்ப்பை கேள்வி கேட்கின்ற அல்லது ஆராய்கின்ற ஒரு நபரை குறிக்கின்றது. இரு பாலினத்தவர்களிடமும் இருக்கின்ற ஒருவருடைய உணர்ச்சி ரீதியான, காதல் ரீதியான மற்றும் பாலியல் ரீதியான ஈர்ப்பு பற்றிய ஒரு ஆர்வமும் இதில் அடங்கும்.

**புட்ச் (Butch)**
ஒரு ஆண்பால் பாலின வெளிப்பாட்டை கொண்டிருக்கின்ற ஒரு லெஸ்பியன்/ நங்கை பெண். 'டொம்போய்' அல்லது 'டைக்' என்றும் குறிப்பிடப்படுகின்றது.
ஆண்களாக நடந்துகொள்வதனால் உறவுமுறைகளில் ஆண்பால் மற்றும் பெண்பால் துவித இயக்கவியலை நிலைநிறுத்துவதாக குற்றம் சாட்டப்பட்டு புட்ச் லெஸ்பியன்கள் வரலாறு முழுவதும் ஓரங்கட்டப்பட்டிருக்கின்றனர். எவ்வாறாயினும், பாலின அடையாளங்கள் மற்றும் வெளிப்பாடுகள் அக எண்ணஞ்சார்ந்தவையாக இருக்கின்றன, மற்றும் அனைத்து இணக்கமற்ற அடையாளங்களும் மதிக்கப்பட வேண்டும்.

சில பெண்பால் வெளிப்பாடுகளை/ குணாதிசயங்களை கொண்டிருக்கின்ற ஒரு புட்ச் லெஸ்பியன் ஒரு 'பேபி டைக்' அல்லது 'சொப்(f)ட் புட்ச்' என்று அழைக்கப்படலாம்.

**ட்ராக் (Drag)**
வழமையாக மிகை வெளிப்படுத்துகின்ற பெண்பால் ஆடைகளில் செயற்படுகின்ற அல்லது அணிகின்ற ஆண்களை குறிக்கின்றது. டிராக் என்பது ஒரு கலை வடிவமாக கருதப்படுகின்றது. ஒரு 'டிராக் குயின்' என்பது ஒழுங்காக dragஇல் செயற்படுகின்ற ஒருவராக இருக்கின்றார். ஒரு 'டிராக் விருந்து' என்பது கலந்துகொள்கின்ற சில ஆண்கள் dragஆக இருக்கும் ஒரு நிகழ்வாக இருக்கின்றது.
பெண்களும் drag ஆடை அணியலாம்; செயற்படலாம் – அவர்கள் ஆண்பால் ஆடைகளை அணிவர்.
டிராக் கலாசாரமானது உலகில் நீண்ட வரலாற்றை கொண்டது. 1920 களில் சிறந்த பெண் உருவம் அல்லது உடைக்கு விருதுகள் வழங்கப்பட்ட களியாட்ட விருந்துகள் இருந்துள்ளன.
இலங்கையிலுள்ள யாராவது டிராக் குயீன்கள் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

**வெளிவருதல் (Coming Out)**
வெளிவருவது என்பது ஒரு நபருடைய சொந்த பாலீர்ப்பு அல்லது பாலின அடையாளத்தை பற்றி மற்றவர்களிடம் வெளிப்படையாக அல்லது பகிரங்கமாக பகிர்ந்துகொள்வதாக இருக்கின்றது. பெரும்பாலான மக்களுக்கு, இது ஒரு ஒரு-முறை நிகழ்வல்ல, ஆனால் ஒரு செயன்முறையாக இருக்கின்றது. உதாரணமாக, ஒரு நபர் ஆரம்பத்தில் ஒரு நம்பகமான நண்பர் வட்டத்திற்கு வரலாம்.

**குளோசெட்டட் (Closeted)**
'குளோசெட்டட்' என்பது தங்களுடைய பாலீர்ப்பு அல்லது பாலின அடையாளத்தை பகிரங்கமாகவோ அல்லது வெளிப்படையாகவோ பகிர்ந்து கொள்ளாத LGBTIQ சமூகத்திலுள்ளவர்களை விவரிக்கின்றது. இது 'பூட்டிய அறையில்/ இன் த க்ளோசெட்' என்றும் குறிப்பிடப்படுகின்றது.

**குயர் (Queer)**
பிரத்தியேகமாக எதிர்ப்பாலீர்ப்பு இல்லாத தனிநபர்களை விவரிக்கின்ற ஒரு பொதுவான சொல். குயர் என்ற சொல்லானது (LGBTIQ இல் உள்ள Q), சுயாதீனமான மற்றும் பரஸ்பர பிரத்தியேக வகைகளின் ஒரு தொகுப்பிற்கு மாறாக பாலியல் என்பது ஒரு நிறமாலையாக இருக்கின்றது என்பதை ஒப்புக்கொள்கின்றது. லெஸ்பியன், கேய், மற்றும் இருபாலீர்ப்புள்ளவர்களுக்கு அப்பால், குறித்த லேபிள்களுக்குள் பொருந்தாத தனிநபர்களைக் குறிக்க குயர் என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

குயர் கடந்த காலத்தில் ஒரு இழிவான வார்த்தையாக பயன்படுத்தப்பட்டது. அதிகரித்தளவில், LGBTIQ சமூகத்தினால் இந்த சொல் மீண்டும் மீளப்பெறப்படுகின்றது.

**எம்எக்ஸ். (Mx)**
எம்எக்ஸ். என்பது மிஸ்டர் அத்தோடு மிஸ்ஸிற்கு பதிலாக பயன்படுத்தப்படக்கூடிய ஒரு பாலின-நடுநிலை பிரதிபெயராக இருக்கின்றது. இது துவித பாலினங்களுடன் அடையாளம் காணப்படாதவர்களால் பயன்படுத்தப்படுகின்றது.

**கடந்து செல்லுதல்/ பாசிங் (Passing)**
ஒரு LGBT+ நபரானவர் எப்படி நேராக அல்லது சிஸ்பாலினத்தவராக கருதப்படுகின்றார் அல்லது ஊகிக்கப்படுகிறார் என்பதை விவரிக்கின்றது. சமூகத்தால் சிஸ் பாலினமாக கருதப்படுகின்ற மாற்றுப்பாலினத்தவர்கள் தொடர்பாக இந்த சொல் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. சிலருக்கு கடந்துசெல்வதற்கு ஒரு ஆசை இருக்கலாம், மற்றும் மற்றவர்கள் அதில் அசௌகரியத்தை காணலாம்.

# அமர்வு 07: SOGIESC இன் பன்முகத்தன்மையும் இலங்கை ஊடகங்களும்

*பங்கேற்பாளர்கள் தங்களுடைய அனுபவங்களை பிரதிபலித்து, குழுவுடன் பகிர்ந்து கொள்கின்றார்கள். ஸ்லைடுகளின் உதவியுடனான ஒரு சிறிய விரிவுரை பின்வருமாறு.*

## நேரம்

30 நிமிடங்கள்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- LGBTIQ நபர்கள் தொடர்பாக ஊடகத்தினால் பகிரப்பட்ட தகவல்களை விமர்சன ரீதியாக ஆராய முடியும்.

## தேவையான கருவிகள்

பங்கேற்பாளர்களுக்கான கடதாசிகள் மற்றும் பேனாக்கள்

## தயாரிப்பு

ஸ்லைடுகள்

## படிமுறைகள்

- சமூகத்திலுள்ள LGBTIQ நபர்களை பற்றிய எதிர்மறையான பொருள்கோடல்கள் இருப்பதாக பங்கேற்பாளர்களுக்கு விளக்குவதன் மூலம் இந்த சுருக்கமான கலந்துரையாடலை தொடங்கவும். தவறான கருத்துக்கள் மற்றும் பொதுமைப்படுத்தல்கள் இதில் அடங்குகின்றன். ஒரு தவறான கருத்து என்பது தவறான ஒரு யோசனையாக, அல்லது ஒரு பிழையான புரிதலாக இருக்கின்றது. ஒரு பொதுமைப்படுத்தல் என்பது ஒரு குறிப்பிட்ட வகையான நபர் அல்லது பொருளின் ஒரு பரவலாக இருக்கின்ற ஆனால் நிலையான மற்றும் மிகைப்படுத்தப்பட்ட விம்பமாக அல்லது கருத்தாக இருக்கின்றது. பாலீர்ப்பு பற்றிய ஒரு தவறான கருத்திற்கு ஒரு உதாரணம் என்னவென்றால், எதிர்ப்பாலீர்ப்பை தவிர அனைத்து பாலீர்ப்புகளும் 'இயற்கைக்கு மாறானவை' ஆக இருக்கின்றன. நம்பி ஆண்களை பற்றிய ஒரு பொதுமைப்படுத்தல் என்னவென்றால், அவர்கள் பெண்பால் பாலின வெளிப்பாடுகளை கொண்டிருக்கின்றார்கள் என்பதாகும். இந்த தவறான கருத்துக்கள் மற்றும் பொதுமைப்படுத்தல்களின் விளைவாக LGBTIQ மக்கள்

களங்கத்திற்கு மற்றும் பாகுபாட்டிற்கு ஆளாக்கப்படுகின்றார்கள். தவறான கருத்துக்களால் அவர்கள் கொடுமைப்படுத்துதல், துன்புறுத்தல் மற்றும் வன்முறை ஆகியவற்றுக்கு உட்படுகிறார்கள்.

- இந்த தவறான எண்ணங்கள் மற்றும் பொதுமைப்படுத்தல்களை நிலைநிறுத்துகின்ற தகவல்களின் ஒரு முக்கிய அடிப்படையாக ஊடகம் இருக்கின்றது. SOGIESC இன் பன்முகத்தன்மையை இலங்கை ஊடகங்கள் எவ்வாறு சித்தரிக்கின்றன என்பதை பற்றி நீங்கள் இப்பொழுது ஒரு கலந்துரையாடலை செய்வீர்கள் என விளக்கவும்.

- பங்கேற்பாளர்களை அவர்கள் இலங்கை ஊடகங்களில் பார்த்த மறக்கமுடியாத குயர் கதாபாத்திரத்தையோ அல்லது இலங்கை ஊடகங்களில் இருந்து LGBTIQ நபர்களை பற்றி அவர்கள் படித்த அல்லது கேள்விப்பட்ட சில தகவல்களையோ எழுதச்சொல்லவும். இந்த கேள்வியை பற்றி சிந்திப்பதற்கு பங்கேற்பாளர்களுக்கு 5 நிமிடங்கள் கொடுக்கவும்.

- பங்கேற்பாளர்களை அவர்கள் எழுதியதையும் மற்றும் இந்த படம்/ கதாபாத்திரம்/ தகவல் போன்றவை LGBTIQ நபர்களை பற்றிய அவர்களுடைய புரிதலை எப்படி பாதித்தது என்பதையும் பகிர்ந்து கொள்ளச்சொல்லவும். பங்கேற்பாளர்களின் கருத்துப்படி, இது ஒரு எதிர்மறையான, நேர்மறையான அல்லது நடுநிலையான சித்தரிப்பாக இருக்கின்றதா என்பதை அவர்களிடம் கேட்கவும்.

- பங்கேற்பாளர்கள் அவர்களுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டவுடன், சில வேளைகளில் நாங்கள் எவ்வளவு படித்தவர்களாக இருந்தாலும், ஊடகங்களில் நாங்கள் பார்ப்பது மற்றும் நாங்கள் பெறுகின்ற தகவல்களால் எங்களுக்குள்ளேயே தவறான எண்ணங்கள் மற்றும் பக்கச்சார்புகளை உருவாக்க முடியும் என்பதை நினைவில் கொள்ளவும். ஆகவே, நாங்கள் எடுத்துக்கொள்கின்ற தகவல்களை கேள்வி கேட்பது மற்றும் நம்பகமான ஆதாரங்களை பயன்படுத்தி உண்மைகளை இருமுறை சரிபார்ப்பது போன்றவை முக்கியமாக இருக்கின்றன என்பதை நினைவில் கொள்ளவும்.

- இலங்கை ஊடகங்களில் உருவான சில பிரதிநிதித்துவப் படுத்தல்களை முன்னிலைப்படுத்துகின்ற ஸ்லைடுகளின் மூலம் பங்கேற்பாளர்களை தேர்ந்தெடுக்கவும். ஸ்லைடுகளின் உள்ளடக்கத்தை கீழே உள்ள குறிப்புக்கள் பிரிவில் காணலாம்.

## குறிப்புக்கள்

***தி ஐலண்ட் (The Island)***

1999 - லெஸ்பியன் பெண்களை வல்லுறவுக்கு உட்படுத்துவதை ஊக்குவிக்கின்ற ஒரு கட்டுரையை பி. அலஸ் எழுதினார். குயர் மக்களுக்கு எதிராக குற்றங்களை செய்திருந்த குற்றவாளிகளை விடுவிக்குமாறு கட்டுரையானது வலியுறுத்தியது. செயற்பாட்டாளரான ஷெர்மன் டி ரோஸ் இலங்கை பத்திரிகை சபையில் ஒரு முறைப்பாட்டை செய்தார், ஆனால் சபை புகாரை நிராகரித்து அதற்கு பதிலாக ஷெர்மனுக்கு அபராதம் விதித்தது.

***சண்டே ஒப்சேவர் (Sunday Observer)***

2011- "எச்ஐவி/ எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதாக காட்டிக்கொண்டு" சில LGBT சார்ந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் ஓரினச்சேர்க்கையை ஊக்குவிப்பதாக ஆசிரியர் தலையங்கம் குற்றஞ்சாட்டியது.

***லக்பிம (Lakbima)***

2013 - குழந்தைகளை மூளைச்சலவை செய்து ஒருபாலீர்ப்புள்ளவர்களாக மாற்றுகின்ற வகையில் அனுராதபுரத்தில் எச்ஐவி/ எய்ட்ஸ் தொடர்பான ஒரு சகபாடிகள் கல்வி பயிலரங்கு நடத்தப்பட்டதாக செய்தித்தாள் ஒரு கட்டுரையை வெளியிட்டது.

***கலம்போ டெலிகிராப் (Colombo Telegraph)***

2016 - "'இன்று நாடு ஒருபாலீர்ப்புள்ளவர்களால் ஆளப்படுகின்றது. இது ஒரு மிகவும் தீவிரமான கவலைக்குரியதாக இருக்கின்றது…" என்று தேரர் அரசாங்கத்தை விமர்சித்ததுடன் ஒருபாலீர்ப்பை நபுன்ஸ்காவுடன் (பாலினம் இன்மை) சமப்படுத்தினார்" என பொதுபல சேனாவின் செயலாளர் நாயகம் கலகொட அத்தே ஞானசாரவை மேற்கோள் காட்டியிருந்தது.

## சுருக்கம்

LGBTIQ நபர்களுக்கு தீங்கு விளைவிக்கின்ற தவறான எண்ணங்களையும் பொதுமைப்படுத்தல்களையும் ஊடகங்கள் நிலைநிறுத்துகின்றன. இந்த செயல்கள் குயர் இயக்கத்திற்கு நீண்டகால எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தலாம். பொதுமக்களின் கருத்தின் மீது செல்வாக்கு செலுத்துவதானது பலதரப்பட்ட SOGIESC ஐ மீண்டும் பாகுபடுத்துகின்ற கட்டுப்பாட்டு சட்டங்களை மாற்றுவதை ஒரு சவாலாக ஆக்குகின்றது. ஊடகங்களிலுள்ள எதிர்மறையான உளக்காட்சிகளின் சிக்கலை எதிர்கொள்வதற்கு ஊடகப் பணியாளர்கள் மற்றும் நிறுவனங்களை நாங்கள் உணர்திறன் மிக்கவர்களாக ஆக்குவதோடு LGBTIQ மக்களை பற்றிய எமது சொந்த நேர்ப்பாங்கான விவரணைகளை உருவாக்கலாம். எவ்வாறாயினும், ஊடக வழிகாட்டுதல்கள் மற்றும் ஒருபாலீர்ப்பு வெறுப்புணர்வுடன் கூடிய வெறுப்புப்பரப்புரைக்கு எதிரான சட்டங்கள் முதலான அமைப்புரீதியான வழிமுறைகளும் இருப்பது அவசியம்.

# அமர்வு 08: இலங்கையிலுள்ள பல்வேறுபட்ட SOGIESC உடைய மக்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் வன்முறை

*ஸ்லைடுகளின் உதவியுடனான விரிவுரை.*

## நேரம்

30 நிமிடங்கள்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

- அரசுகளால் பலதரப்பட்ட SOGIESC கொண்ட மக்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பாகுபாட்டின் வடிவங்களை அடையாளம் காண முடியும்.
- பலவிதமான SOGIESC கொண்ட மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையின் வடிவங்களை அடையாளம்காண முடியும்.
- நீதிக்கான அணுகல் அடிப்படையில் பாகுபாட்டுக்கும் வன்முறைக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக்கூற முடியும்.

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்

- இந்த சிறிய விரிவுரையில், இலங்கையிலுள்ள LGBTIQ மக்களால் எதிர்கொள்ளப்படுகின்ற பல்வேறு வகையான பாகுபாடுகளை பற்றி நீங்கள் பகிர்ந்து கொள்வதற்கு முயற்சிப்பீர்கள் என்பதை நினைவில் கொள்ளவும்.

- பாகுபாடு என்பது வெவ்வேறு வகைகளிலான மக்கள், அவர்களிடமுள்ள சில குணாதிசயங்களின் அடிப்படையில் அவர்களை நியாயமற்ற அல்லது பாரபட்சமான முறையில் நடத்துவதாகும் என்று விளக்குவதன் மூலம் தொடங்கவும். உதாரணமாக, 1950 க்கு முந்திய அமெரிக்காவில், வெள்ளையர்களுக்கு இருந்த அதே உரிமைகள் கறுப்பின மக்களுக்கு இருக்கவில்லை என்பது எங்களுக்கு தெரியும். வெள்ளையர்களை போல அதே பாடசாலைகளில் படிப்பதற்கோ, அதே போக்குவரத்தை பயன்படுத்துவதற்கோ அல்லது வெள்ளையர்களை போலவே அதே உணவகங்களுக்கு செல்வதற்கோ அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

- பாகுபாடானது தனி நபர்களாலும் அரசாங்கங்களாலும் காட்டப்படலாம். ஆனால் மக்களுக்கு எதிராக அரசாங்கங்கள் பாகுபாடு காட்டுவதை

தடுப்பதற்காக சட்டங்கள் இருக்கின்றன. இலங்கை அரசியலமைப்பின் 12 வது உறுப்புரை அனைத்து மக்களும் சமமானவர்கள் என்றும் பாகுபாடு இல்லாமல் இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றது. இது ஒரு அடிப்படை உரிமையாக இருக்கின்றது. பால், இனம், மதம், அல்லது இதுபோன்ற ஏதேனும் காரணங்களுக்காக, அரசாங்கம் உங்களுக்கு எதிராக பாகுபாடு காட்டினால், இலங்கை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து ஒரு நிவாரணத்தை உங்களால் பெற முடியும்.

- பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் நபர்கள் பாகுபாடு காட்டப்படுவதை 12ஆவது உறுப்புரை தடுக்கின்றது என்பதை இலங்கையிலுள்ள அரசாங்க பிரதிநிதிகள் ஒப்புக்கொண்டாலும், LGBTIQ மக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுகின்ற பல சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் இலங்கையில் உள்ளன. இப்பொழுது இந்த சட்டங்கள் மற்றும் நடைமுறைகளில் சிலவற்றை நாங்கள் ஆராய்வோம்.

## குறிப்புக்கள்

**இலங்கையில் LGBTIQ மக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுகின்ற சட்டங்கள் மற்றும் நடைமுறைகள்**

**தண்டனைச்சட்டக்கோவை 1883**
**பிரிவு 365: இயற்கைக்கு மாறான குற்றங்கள்**

பிரிவு 365 "இயற்கையின் ஒழுங்குக்கு எதிரான உடலுறவை" குற்றமாக்குகின்றது. சொற்களின் பொருள் தெளிவாக வரையறுக்கப்படவில்லையென்றாலும், ஒரே பாலின கூட்டாளர்களுக்கு இடையிலான உடலுறவை குற்றமாக்குவதாக இந்த சட்டம் பொதுவாக புரிந்து கொள்ளப்படுகின்றது.

**தண்டனைச்சட்டக்கோவை 1883**
**பிரிவு 365A: நபர்களுக்கிடையிலான பாரதூரமான இழிசெயல்கள்**

பிரிவு 365A, "பாரதூரமான இழிசெயல்களை" செய்வதை, செய்ய முயல்வதை தடைசெய்கின்றது. இந்தக் குற்றத்துக்காக இரண்டு ஆண்டுகள் வரையான ஒரு சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது ஒரு அபராதம் விதிக்கப்படலாம். ஆண்களுக்கு இடையிலான மற்றும் பெண்களுக்கு இடையிலான செயல்களுக்கு இந்த விதி பொருந்துவதாக இருக்கின்றது. இலங்கையில், இந்த பிரிவு 1995 இல் பாலின-நடுநிலைப்படுத்தப்பட்டது.
அதற்கு முன்பு இது ஆண்களுக்கு மட்டுமே பிரயோகிக்கப்பட்டது.

**தண்டனைச்சட்டக்கோவை1883**
**பிரிவு 399: ஆள் மாறாட்டம் மூலம் ஏமாற்றுதல்**

தண்டனைச்சட்டத்தின் 399வது பிரிவு "வேறு சிலரை போல் நடிப்பதன் மூலம்" ஏமாற்றுவதை மூன்று ஆண்டுகள் வரையான ஒரு சிறைத்தண்டனை மற்றும் ஒரு சாத்தியமானால் அபராதத்துடன் குற்றமாக்குகின்றது. மாற்றுப்பாலினத்தவர்களை குறிவைப்பதற்காக இந்த விதிமுறை பயன்படுத்தப்படுகின்றது.

**அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டம்**

இந்த சட்டம் அலைந்து திரிவதை மற்றும் முறையற்ற பாலியல் உறவை அல்லது இழிவான செயலை கோருவதை தடை செய்கின்றது.

இந்த சட்டங்கள் அரிதாகவே அமுல்படுத்தப்பட்டாலும், சட்ட அமுலாக்க பணியாளர்களால் LGBTIQ மக்களை துன்புறுத்துவதற்கு, மிரட்டி பணம் பறிப்பதற்கு, மற்றும் துஷ்பிரயோகம் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

*"LGBTIQ சமூகத்தின் உறுப்பினர்களை உண்மையாகக் கைதுசெய்து வழக்குத்தொடராமல், பொலிசார் துன்புறுத்தினர். அத்துடன் கொழும்பிலும் பிற பகுதிகளிலும் தண்டனையின்றி தாக்கப்பட்ட லெஸ்பியன்கள் உட்பட LGBTIQ தனிநபர்களிடமிருந்து பணம் அல்லது பாலியல் உதவிகளை*

*பெற்றுக்கொண்டுள்ளனர்."* என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான மனித உரிமைகள் நடைமுறைகள் தொடர்பான இலங்கை நாடு தொடர்பான அறிக்கை குறிப்பிட்டுள்ளது.
அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டம் மற்றும் தண்டனைச்சட்டக்கோவையின் s.399 ஆகியவை மாற்றுப்பாலின நபர்களையும் புட்ச் லெஸ்பியன்கள், பெண்பாலாக-முன்வைக்கின்ற ஆண்கள் உட்பட - பாலின விதிமுறைகளுக்கு இணங்காத நபர்களை பயமுறுத்துவதற்கு, கேள்வி கேட்பதற்கு, கைது செய்வதற்கு மற்றும் காவலில் வைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன. அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டமானது பாலியல் தொழிலாளர்களை துன்புறுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றது.

திருநங்கைகளே சட்ட அமுலாக்க நிறுவனங்களால் மிக அதிகமாக துஷ்பிரயோகத்திற்கும் துன்புறுத்தலுக்கும் ஆளாகின்றனர். ஏனென்றால், அவர்கள் மாற்றுப்பாலின நபர்கள் என்பது அவர்களுடைய தோற்றத்தில் அடிக்கடி தெரியும். இதற்கு நேர்மாறாக, ஒருபாலீர்ப்பு ஆண்கள்/பெண்கள் திருநம்பி, இருபாலீர்ப்புள்ள ஆண்கள்/ பெண்கள், மற்றும் லெஸ்பியன்களுக்கு சிஸ் பாலினமாக கடந்துபோகலாம். பெண்மையை - தாழ்வான ஒன்றைப்போல பார்க்கின்ற ஆணாதிக்க மனப்பான்மைகள் காரணமாகவும் திருநங்கைகள் சமூக விலக்கலுக்கு முகங்கொடுக்கின்றனர். குடும்பத்தில் நிராகரிப்பு, வரையறுக்கப்பட்ட கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் போன்றவை மேலும் அவர்களை பாதிப்படைய செய்வதோடு பொருளாதார, சமூக மற்றும் நிதிப் பாதுகாப்பை திருநங்கைகளிடமிருந்து பறிக்கின்றன.

திருநங்கைகள் பாலியல் தொழிலாளர்களுடன் நடத்தப்பட்ட 24 ஆழமான நேர்காணல்கள் மற்றும் 3 குவிநோக்கக் குழுக்கள் அடங்கிய ஆண்ட்ரியா நிக்கோலஸின் ஆய்வுக்கட்டுரையான 'நடனம் ஆடு பொன்னயா, நடனம் ஆடு! இலங்கையில் மாற்றுப்பாலின பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான பொலிசாரின் துஷ்பிரயோகங்கள்' (2010) இலங்கையில் திருநங்கைகளுக்கு எதிரான காவல்துறை வன்முறையை எடுத்துக்காட்டுகின்றது. இந்த துஷ்பிரயோகங்களில் வாய்மொழியான, உடல் ரீதியான மற்றும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் பாகுபாடு ஆகியவை அடங்குகின்றன. பதிலளித்தவர்களின் சில கூற்றுக்கள் கீழே மேற்கோள்கள் காட்டப்பட்டிருக்கின்றன:

> *“இப்பொழுது அவர்கள் [பொலிஸ்] உங்களை சாலையில் பார்த்தாலும் . . . "பொன்னயா, பொன்னயா, என்ன செய்கின்றாய்?" என்று சொல்லி கடந்து செல்கின்றார்கள் . . . . இப்படி அப்படி, ஆம், “பொன்னயா ஜீப்பில் ஏறு.” அதனால் [பொலிஸ்] இப்படியும் அப்படியும் சொல்லிவிட்டு [எங்களை] அசிங்கமாக அவமானப்படுத்தி, காரணமே இல்லாமல் காவலில் வைக்கின்றார்கள். அதனால் தான். இப்பொழுது பொலிசாருக்கு நிச்சயமாக எங்களைப் பிடிக்காது. அந்தளவுக்கு அவர்களுக்கு நாங்கள் வேண்டாதவர்களாக இருக்கின்றோம், எங்களுக்கும் அவர்களைப்*

*பிடிக்காது. நாங்கள் அவர்களுக்கு மிகவும் அருவருப்பானவர்களாக இருக்கின்றோம்அதற்கு [நான்] பயப்படுகின்றேன்."*

*"பொலிசாரிடமிருந்தும் எங்களுக்கு ஏராளமான துன்புறுத்தல்கள் ஏற்படுகின்றன. நாங்கள் ஏதாவது வாங்குவதற்காக தெருவுக்கு சென்றாலும், சில வேளைகளில் அவர்கள் எங்களை அழைத்துச்செல்வார்கள் அத்தோடு அடித்துவிட்டு, மறுநாள் காலையில் [சிறையிலிருந்து] எங்களை திருப்பியனுப்புவார்கள், இதுபோன்று நடந்த சந்தர்ப்பங்கள் இருக்கின்றன."*

*"பொலிசாரால் எனக்கு நிறைய அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளன. நான் நீண்ட முடியுடன், மார்பகங்களை வைத்துக்கொண்டு, ஒரு ஆடையை அணிந்துகொண்டிருந்தேன். அன்று நான் ஒரு பெண்ணாக இருந்தேன். . . . காலையில் அவர்கள் ரேடியோவை போட்டுவிட்டு என்னை நடனமாட சொன்னார்கள் . . . . அந்த [பாடல்களுக்கு] நடனமாட சொன்னார்கள், நான் இன்னும் என்னால் முடிந்தவரை நடனமாடினேன். என்னுடைய இவைகளை [மார்பகங்களை] கசக்குவதற்கு/ அழுத்துவதற்கு [பொலிசார்] வந்தார்கள்."*

*"இப்பொழுது நாங்கள் இரவில் செல்கின்றோம் மற்றும் கொல்லோ [ஆண்கள்] எங்களை அழைத்துச்சென்று, எங்களை அடித்து, எங்களுடைய பணம் மற்றும் தங்க நகைகளை எடுத்துக்கொள்கின்றார்கள், நாங்கள் பொலிஸில் புகார் அளித்தோம், ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்கள் எங்களிடம், "ஹா ஹா, வெளியே போ. வெளியே போ!" என்று சொல்லி, எங்களை துரத்துகின்றார்கள்."*

*"இது இப்படித்தான் இருக்கின்றது, என்னுடைய அண்ணனின் வீட்டில் ஏதோ திருடு போயிருக்கின்றது, அதற்காக நான் பொலிஸ் நிலையம் சென்றபொழுது, ஜீப்பில் இருந்த இரண்டு அதிகாரிகள் என்னை அழைத்தார்கள். "நீ தங்கவில்லையென்றால் [உடலுறவு வைத்துக்கொள்ள வில்லையென்றால்] நாங்கள் உன்னைப் பூட்டி வைப்போம்," என்று அவர்கள் கூறினார்கள்."*

ஈக்குவல் கிரவுன்ட் அமைப்பினால் சமர்ப்பிக்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் (2014) 110வது அமர்வுக்கான ஒரு நிழல் அறிக்கையானது LGBTIQ நபர்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் துஷ்பிரயோகத்தின் பல சம்பவங்களை பகிர்ந்துகொள்கின்றது. LGBTIQ நபர்களின் பெரும்பாலான கைதுகள் குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்வதற்கு பதிலாக, லஞ்சம், மிரட்டல், மிரட்டி பணம் பறித்தல், வன்முறை அல்லது கட்டாய பாலியல் விருப்புக்களுக்கு இட்டுச்செல்கின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டது. அறிக்கையில் குறிக்கப்பட்டிருக்கின்ற சட்ட அமுலாக்கத்தால் துன்புறுத்தலின் சில உதாரணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

*2012 இல் கொழும்பிற்கு அருகிலுள்ள ஒரு கடற்கரையில் ஒரு லெஸ்பியன் அவருடைய மோட்டார் சைக்கிளை நோக்கி திரும்பிச்செல்வதை பொலிசார் கண்டறிந்தபொழுது, அவர் கைது செய்யப்பட்டதோடு அலைந்து திரிந்ததாக குற்றம்சாட்டப்பட்டார். அவருடைய ஆண்பால் தோற்றம் மற்றும் அவர் காற்சட்டை அணிந்திருந்தது குறித்து பொலிசார் கருத்து தெரிவித்தனர், அத்தோடு அவர் ஒரு மோட்டார் சைக்கிளை ஓட்டுவதற்கு முடிவு*

*செய்ததற்காக கடுமையாக விசாரிக்கப்பட்டார். பொலிசார் அவரை விடுவிப்பதற்கு முன்பாக அந்த லெஸ்பியன் பெண் சுமார் ஐந்து மணி நேரங்கள் காவலில் வைக்கப்பட்டார்.*

*காலியை சேர்ந்த பட்டதாரி மாணவர் ஒருவர் பாதுகாப்பான உடலுறவு குறித்த அவனுடைய ஆய்வறிக்கைக்காக பல ஆண்களையும் மற்றும் ஒரு திருநங்கையையும் ஒரு நேர்காணல் செய்து கொண்டிருந்த பொழுது, சிவில் உடை அணிந்திருந்த பொலிஸ் அதிகாரிகளால் தாக்கப்பட்டார். அவர் நேர்காணல் செய்துகொண்டிருந்த ஆண்களும் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டனர், அத்தோடு திருநங்கை மூன்று பொலிஸ் அதிகாரிகளால் ஆசனவாயில் ஒரு மரக்குச்சியை செருகப்பட்டு சொடோமைஸ் செய்யப்பட்டார். ஓரினச்சேர்க்கையை ஊக்குவிப்பதாக பொலிசார் அந்த மாணவனை குற்றம் சாட்டினார்கள், அத்தோடு அவரை பொலிசார் சிறை வைத்தனர் .*

*2006 இல், கொழும்பிலுள்ள பொதுக் கழிவறை ஒன்றில் இரண்டு ஒருபாலீர்ப்பு ஆண்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கைது செய்ததற்கான காரணத்தை ஒருபாலீர்ப்பு தனிநபர்களை இழிவுபடுத்துகின்ற சொற்களை பயன்படுத்தி பொலிஸ் அதிகாரிகள் விளக்கியதோடு இருவரும் கழிவறையில் உடலுறவு வைத்துகொண்டதாக குற்றம்சாட்டினர். பின்னர் விடுவிக்கப்படுவதற்காக ஒரு லஞ்சத்தை பொலிசாருக்கு செலுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டதோடு இருவரும் வேறோர் இடத்திற்கு பொலிசாரால் அழைத்துச்செல்லப்பட்டனர்.*

பொலிசாரின் துன்புறுத்தலின் விளைவாக எச்ஐவி தடுப்பு பணியாளர்கள், ஒருபாலீர்ப்பு/ இருபாலீர்ப்புள்ள ஆண்கள் மற்றும் திருநங்கைகள் பாலியல் தொழிலுக்காக கைது செய்யப்படுவார்கள் என்ற பயத்தில் ஆணுறைகளை எடுத்து செல்ல தயங்குகின்றனர் என்று தெரிவித்திருக்கின்றார்கள். தனிப்பட்ட இடங்கள் இல்லாததால், பல ஆண்கள் பொது அல்லது அரை பொதுவான இடங்களை உடலுறவு வைத்துக்கொள்வதற்காக நாடுகின்றனர். பொலிசாரிடம் சிக்கிவிடுவோம் என்கின்ற பயத்தின் காரணமாக அவர்கள் அவசரமான மற்றும் பாதுகாப்பற்ற உடலுறவை வைத்துக்கொள்கின்ற அபாயமுள்ளது.

LGBTIQ மக்களின் மீதான பொலிசாரின் முரட்டுத்தனம் மற்றும் வன்முறைகள் தொடர்பாக அதிக எண்ணிக்கையிலான பதிவான சம்பவங்கள் இருக்கின்ற அதே வேளையில், பெரும்பாலான பாதிக்கப்பட்டவர்கள் பயத்தின் காரணமாக வெளியே வந்து முறைப்பாடு செய்ய விரும்புவதில்லை.

அதே நேரத்தில், LGBTIQ சமூகம் இலங்கையில் உடல் ரீதியான மற்றும் பாலியல் ரீதியான வன்முறைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றது. 2014 ஆம் ஆண்டு மனித உரிமைகள் குழுவின் நிழல் அறிக்கையில், ஈக்குவல் கிரவுன்ட் அமைப்பு பல்வேறு வகையான SOGIESC உடைய மக்களின் மீது நடத்தப்பட்ட பல்வேறு வகையான வன்முறைகளை விவரிக்கின்றது.

*2013 ஜூலை மற்றும் ஒக்டோபர் மாதங்களுக்கு இடைப்பட்ட நான்கு மாத காலப்பகுதியில், **ஈக்குவல் கிரவுன்ட்** அமைப்பின் வெளிக்கள அதிகாரிகள்,*

*அவர்களுடைய பாலின அடையாளத்தின் ஒரு விளைவாக மரண அச்சுறுத்தல்களை பெற்றிருந்த மூன்று திருநம்பிகளை சந்தித்தனர். அத்துடன் பதிலளித்த LGBT நபர்களில் சராசரியாக 37% ஆனோர் உடல் ரீதியான துஷ்பிரயோகம், அச்சுறுத்தல்கள், தாக்குதல், துன்புறுத்தல், வல்லுறவு, ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்களில் பெரும்பாலானோர் கடந்த இரண்டு ஆண்டுகளில் இதுபோன்ற துஷ்பிரயோகத்தை ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அனுபவித்துள்ளனர் என்றும் 2011 ஆய்வின் முடிவுகள் குறிப்பிடுகின்றன. உடல் ரீதியான துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களில், 50% ஆனோர் அவர்களுடைய பாலின அடையாளம் அல்லது வெளிப்பாடு காரணமாக இது நிகழ்ந்ததாக கூறியுள்ளனர், அத்தோடு பதிலளித்தவர்களில் ஏனைய 41% ஆனோர் அவர்களுடைய பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளம் அல்லது வெளிப்பாடு இரண்டின் காரணமாகவே அவர்களுக்கு உடல் ரீதியான துஷ்பிரயோகம் நடந்ததென தெரிவித்துள்ளனர்.*

*வல்லுறவு செய்யப்பட்டதாக, தாக்கப்பட்டதாக, கடத்தப்பட்டதாக அல்லது மரண அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதாக கூறப்பட்ட அறிக்கைகள்* ***ஈக்குவல் கிரவுன்ட்*** *அமைப்புக்கு LGBT தனிநபர்களிடமிருந்து கிடைத்திருக்கின்றன. உதாரணமாக, கடந்த ஆண்டிற்குள், 19 வயது திருநங்கை ஒருவர், ஒரு மாலையில், சைக்கிளில் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்த பொழுது, ஒரு நபர் அவரை தடுத்து, ஒரு காட்டுப்பகுதிக்கு அவரை இழுத்துச்சென்று, அவரை வல்லுறவு செய்ததாக தெரிவித்தார். இருபாலீர்ப்புள்ள ஆண் ஒருவர் 16 வது வயதில் அவருடைய பாடசாலையிலுள்ள கழிவறை ஒன்றினுள் அழைத்து செல்லப்பட்டு, இரண்டு சிரேஷ்ட மாணவர்களால் வல்லுறவு செய்யப்பட்டதாக தெரிவித்தார்.*

*மற்றொரு அறிக்கையில், ஒரு திருநம்பியானவர் அவரும் அவருடைய ஆண் நண்பரும் ஒரு இரும்புககடைக்கு முன்பாக நின்றுகொண்டிருந்த பொழுது தாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். அவருடைய கண்ணில் ஏற்பட்ட ஒரு காயத்தினால் கண்ணில் இரத்தம் வழியும் அளவுக்கு அந்த திருநம்பி அவதியுற்றார். தம்பதியினர் தப்பித்துச்சென்று, முச்சக்கரவண்டியொன்றில் ஏறிய பொழுது, இரண்டு ஆண்கள் அவர்களை அவர்கள் தங்கியிருந்த வீடு வரைக்கும் மோட்டார் சைக்கிள்களில் பின்தொடர்ந்தார்கள். 2008 இல், கிழக்கு இலங்கையைச் சேர்ந்த இரண்டு முஸ்லிம் ஆண் ஒருபாலீர்ப்பாளர்கள் அவர்களுடைய பாலீர்ப்பு காரணமாக, அவர்கள் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டதாகவும், அத்தோடு அவர்களுடைய உயிர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கும் ஒரு ப(f)த்வா முன்வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.*

*மேலதிகமாக, 2008 இல் தென்னிலங்கையைச் சேர்ந்த மற்றுமொரு முஸ்லிம் ஆண் அவருடைய பாலீர்ப்பு காரணமாக தாக்கப்பட்டதோடு அவருடைய வீட்டை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்தப்பட்டார்.*

பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு மூலமான CEDAW குழுவிற்கான ஒரு 2017 ஆம் ஆண்டு நிழல் அறிக்கையானது LGBTIQ மக்களால் எதிர்கொள்ளப்பட்ட வன்முறைச் சம்பவங்களையும் குறிப்பிடுகின்றது.

*நேர்காணல் செய்யப்பட்ட 33 LBT நபர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் உடல் ரீதியான மற்றும் பாலியல் ரீதியான வன்முறையை அனுபவித்ததாகவும், அவர்களில் 12 பேர் அவர்களுடைய வாழ்க்கையில் நடந்து வருகின்ற உடல் ரீதியான வன்முறையை பற்றி பேசினார்கள் என்றும் மகளிர் ஆதரவு குழு ஆய்வு கண்டறிந்துள்ளது. குற்றவாளிகளில் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள், அந்நியர்கள், சகாக்கள், கூட்டாளர்கள், முன்னாள் கூட்டாளர்கள் முதலாளிகள், மேற்பார்வையாளர்கள், சக பணியாளர்கள் மற்றும் அயலவர்கள் போன்றோர் அடங்கினர். ஆய்வுக்காக நேர்காணல் செய்யப்பட்ட ஒரு 39 வயதான லெஸ்பியனான ரோஷ்மி, "எனது கூட்டாளரின் குடும்பத்தினர் வலுக்கட்டாயமாக அவரை குணப்படுத்துவதற்காக மாத்திரைகள் மற்றும் மருந்துகளை கொடுக்க முயன்றனர். அவர்கள் அவரை ஒரு எதிர்பாலீர்ப்புள்ளவராக மாற்றுவதற்கு மிகவும் கடினமாக முயன்றனர்... [இரண்டு தடவைகள்] அவர் மின்சார அதிர்ச்சி சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்" என்று தெரிவித்தார். நேர்காணல் செய்யப்பட்ட மற்றொருவரான தன்னுடைய பெற்றோருடன் வசிக்கின்ற ஒரு 36 வயதான சமிலா என்ற பெண் தனது பாலின இணக்கமின்மை மற்றும் லெஸ்பியனிசத்தை 'குணப்படுத்த' ஒரு மனநல நிபுணரிடம் அவருடைய தாயார் அவரை அழைத்துச்சென்றதாகக் கூறினார்.*

*பாலின நெறிமுறை அமுலாக்கம், சமூகமயமாக்கலின் வரையறைகள், உடல் ரீதியான மற்றும் உணர்ச்சி ரீதியான புறக்கணிப்பு, குடும்ப புறக்கணிப்பு, மற்றும் (எதிர்ப்பாலீர்ப்பு) திருமணம் செய்வதற்கான நிலையான அழுத்தம் அடங்கலாக: இந்த ஆய்வில் பதிலளித்த அனைத்து 33 LBT நபர்களும் சில வகையான உணர்ச்சிரீதியான வன்முறைகளை அனுபவித்திருந்தார்கள். 40களின் முற்பகுதியிலுள்ள ஒரு லெஸ்பியனான மல்லிகா கூறியதாவது: "எனக்கு மிகப்பெரிய பாகுபாடு என் குடும்பத்திலிருந்தே காட்டப்பட்டது என்று நான் நினைக்கின்றேன். உணர்ச்சி ரீதியாகவும், வாய்மொழியாகவும் அவர்கள் எனக்கு [எதிராக] பாரபட்சம் காட்டியிருக்கின்றார்கள் - நான் ஒரு லெஸ்பியன் என்பதை அவர்கள் மறுப்பது மற்றும் நான் ஒரு ஆணுடன் இருப்பதை தவிர வேறு எதையும் சரி என்று ஏற்றுக்கொள்ள மறுப்பது... அவர்கள் சிறந்த முறையில் என்னுடைய பாலுணர்வை/ மறைக்கின்றார்கள் அல்லது அதை ஒப்புக்கொள்வதற்கு மறுக்கின்றார்கள். அதனால்*

*அவர்களிடமிருந்து பிரச்சனைகள் தீவிரமாக வருகின்றன. மேலும் இந்நிலை இன்னமுமே தொடர்கின்றது."*

ஒரே பாலின கூட்டாளர்களுக்கு இடையிலான புணர்வை குற்றமாக்குதல் மற்றும் பொலிசாரால் காட்டப்படுகின்ற பாகுபாடு காரணமாக, வன்முறைக்கு முகம்கொடுக்கின்ற LGBTIQ மக்கள் நீதிக்காக பொலிசாரிடம் செல்வதில்லை. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின்2016 ஆம் ஆண்டு அறிக்கை இந்த கவலையை வெளிச்சம் போட்டு காட்டுகின்றது.

*ஒரு 31 வயதான லெஸ்பியனான நிதுரா 2007 இன் பிற்பகுதியில் அவருடைய பெண் நண்பரின் தந்தையால் பலமுறை துன்புறுத்தப்பட்டதோடு கொலை மிரட்டலும் விடுக்கப்பட்டார், ஆனால் பொலிசாரிடம் செல்லவில்லை. "அந்த சட்டங்கள் இல்லையென்றால், நான் ஏதாவது சொல்லியிருப்பேன்," என்று தெரிவித்த அவர் "இந்த நாட்டில் நான் ஒரு குற்றவாளியாக கருதப்படுகிறேன். சட்டங்கள் சமமற்றதாக மற்றும் அநியாயமாக இருக்கின்ற பொழுது எதையாவது சொல்லி நேரத்தை வீணடிப்பதில் என்ன பயன் இருக்கின்றது?" என்று மேலும் கூறினார்.*

## மேலும் படிக்க

ஜொசுவா ஆர்டேடா கொன்ஸாலிஸ், இலங்கையின் கொழும்பிலுள்ள LGBTIQ இயக்கத்தின் அரசியல் பற்றிய ஒரு பின் காலனித்துவப் பகுப்பாய்வு, 2019. இங்கே கிடைக்கும்:
https://lup.lub.lu.se/luur/download?func=downloadFile&recordOId=89757940&file75999

மனித உரிமைகள் குழுவின் (2014) 110வது அமர்வுக்கான சம அடிப்படை, நிழல் அறிக்கை https://www.ecoi.net/en/file/local/1179388/1930_1389716045_int-ccpr-ico-lka-15986-e.pdfdf

இலங்கையில் லெஸ்பியன் மற்றும் இருபாலீர்ப்புள்ள பெண்களுக்கு எதிரான சம அடிப்படை, மனித உரிமை மீறல்கள்: பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை நீக்குவதன் குழுவிற்கான ஒரு நிழல் அறிக்கை (CEDAW) (2016). இங்கே கிடைக்கும்: https://tbinternet.ohchr.org/Treaties/CEDAW/Shared%20Documents/LKA/INT_CEDAW_NGO_LKA_24294_E.pdf

மனித உரிமைகள் கண்காணிப்பு, இலங்கையில் பாலின அடையாளம் மற்றும் பாலீர்ப்பு அடிப்படைகளில் பாகுபாடு "ஐந்து விரல்களும் ஒரே மாதிரியானவை அல்ல" (2016). இங்கே கிடைக்கும்:
https://www.hrw.org/sites/default/files/report_pdf/srilanka0816web.pdf

பெண்கள் மற்றும் ஊடகக்கூட்டமைப்பு, இலங்கையில் லெஸ்பியன்கள், இருபாலீர்ப்புள்ள பெண்கள் மற்றும் மாற்றுப்பாலின நபர்களின் மீதான பாகுபாடு:

பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான குழுவின் (CEDAW) (2017) 66ஆவது அமர்வுக்கு வழங்கப்பட்ட நிழல் அறிக்கை. இங்கே கிடைக்கும்: https://tbinternet.ohchr.org/Treaties/CEDAW/Shared%20Documents/LKA/INT_CEDAW_NGO_LKA_26252_E.pdf

கலைடோஸ்கோப் மனித உரிமைகள் அறக்கட்டளை & சம அடிப்படை, இலங்கையின் LBTI நபர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பான பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை நீக்குவதன் ஐ.நா குழுவுக்கு இணையான அறிக்கை (2017). இங்கே கிடைக்கும்: https://www.ecoi.net/en/file/local/1393616/1930_1487246228_int-cedaw-ngo-lka-26326-e.pdf

# அமர்வு 09: பலதரப்பட்ட SOGIESC உடைய மக்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச மட்டத்திலான முன்னேற்றங்கள்

*15 நிமிடங்கள் கேள்வி & பதிலை தொடர்ந்து ஸ்லைடுகளின் உதவியுடனான விரிவுரை*

## நேரம்

45 நிமிடங்கள்

## இலக்கு குழு

அனைத்து குழுக்களும்
ஒரு குழுவில் 30 பங்கேற்பாளர்கள்

## குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களால்:

• பலதரப்பட்ட SOGIESC உடைய மக்களின் உரிமைகள் தொடர்பான உலகிலுள்ள குறிப்பிடத்தக்க சாதனைகளை பட்டியலிட முடியும்.
• LGBTIQ மக்களின் மனித உரிமைகள் தொடர்பான முக்கிய சர்வதேச மனித உரிமைகள் கருவிகள் மற்றும் வழிமுறைகளை அடையாளம் காணமுடியும்.

## தயாரிப்பு

- ஸ்லைடுகள்

## படிமுறைகள்

• இந்த கடைசி அமர்வில், பலதரப்பட்ட SOGIESC உடைய மக்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச முன்னேற்றங்களை நீங்கள் பார்ப்பீர்கள் என்பதை விளக்கவும்.
• ஸ்லைடுகளின் உதவியுடனான விரிவுரையை 20-30 நிமிடங்களுக்கு நடத்தவும். ஸ்லைடுகளுடன் விரிவுரைக்கு உதவும் குறிப்புக்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.
• இது நாளின் கடைசி அமர்வு என்பதை கருத்தில் கொண்டு, இந்த அமர்வு அல்லது முந்திய அமர்வுகளில் கேள்விகள் மற்றும் பதில்களின் முடிவில் குறைந்தது 15 நிமிடங்களை ஒதுக்கவும். கேள்விகள் எதுவுமில்லை என்றால், பங்கேற்பாளர்கள் இன்று கற்றுக்கொண்ட மிகவும் சுவாரசியமான அல்லது நினைவுள்ள விடயத்தை பகிர்ந்துகொள்ளும்படி கேட்கலாம்.

## குறிப்புக்கள்

ஆசியாவில் பெரும்பாலான நாடுகளில், பலதரப்பட்ட SOGIESC உடைய மக்களின் உரிமைகள் தொடர்பான ஒரு அமைதியற்ற சட்ட மற்றும் சமூக-அரசியல் சூழல் இருக்கின்றது. LGBTIQ மக்கள் களங்கம், பாகுபாடு, மற்றும் வன்முறைக்கு முகம்கொடுக்கின்றார்கள். பலதரப்பட்ட SOGIESC பற்றிய கட்டுக்கதைகள் மற்றும் தவறான கருத்துக்கள் பரவலாக இருக்கின்றன. ஆனால் உலகம் மெல்ல மாறிக்கொண்டிருக்கின்றது. மேலும் பல நாடுகளும் மற்றும் சர்வதேச அமைப்புக்களும் LGBTIQ மக்களின் உரிமைகளை அங்கீகரித்துக்கொண்டு வருகின்றன. பின்வரும் குறிப்புக்கள் பலதரப்பட்ட SOGIESC உடைய மக்களின் உரிமைகள் பற்றிய குறிப்பிடத்தக்க உலகளாவிய சாதனைகள் சிலவற்றை பற்றி கலந்துரையாடுகின்றன. சில சாதனைகள் மனநல சவால்களிலிருந்து மாறுபட்ட பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தை வேறுபடுத்துவது தொடர்பானதாகும்.

*1973 ஆம் ஆண்டில், அமெரிக்க மனநல சங்கம் (APA) ஓரினச்சேர்க்கையை/ ஒருபாலீர்ப்பைமனநோயாக வகைப்படுத்தியமையை நீக்கியது. அதனுடைய நோயறிதல் மற்றும் புள்ளியியல் கையேட்டின் (DSM) இரண்டாவது பதிப்பில் "ஒருபாலீர்ப்பை" அந்த வகைப்படுத்தலிலிருந்து நீக்குவதன் மூலம் இது சரிசெய்யப்பட்டது.*

*1992 இல் உலக சுகாதார நிறுவனம் (WHO)* **ஒருபாலீர்ப்பை ஒரு மனநோயாக வகைப்படுத்திய***மையை நீக்கியது.*

*மிக அண்மையில், 2019 ஆம் ஆண்டில், WHO ஆனது மாற்றுப்பாலின நபராக இருப்பதை அந்த வகைப்படுத்தலிலிருந்து நீக்கியது. நோய்களின் சர்வதேச வகைப்பாட்டின் (ICD-11) 11வது திருத்தத்தில், பாலின முரண்பாடு என்பது ஒரு நபருடைய அனுபவம் வாய்ந்த பாலினத்திற்கும் நியமிக்கப்பட்ட பாலினத்திற்கும் இடையிலான ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் நிலையான முரண்பாடு என்று வரையறுக்கப்படுகின்றது. முந்திய பதிப்பில் (ICD-10), உள மற்றும் நடத்தை கோளாறுகள் என்கின்ற தலைப்பில், இது 'பாலின அடையாள கோளாறு' என்று கருதப்பட்டது.*

இதற்கிடையில் சர்வதேச மனித உரிமைகள் கட்டமைப்பிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது.

மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் (1948) அதன் முன்னுரையில் 'உலகில் சுதந்திரம், நீதி மற்றும் அமைதிக்கான அடித்தளமாக', 'மனித குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களின் உள்ளார்ந்த கண்ணியம் மற்றும் சமமான மற்றும் பிரிக்க முடியாத உரிமைகளை அங்கீகரிப்பதை' சேர்த்துள்ளது.
1976 இல் நடைமுறைக்கு வந்த சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (ICCPR), சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்கான உரிமை, தனியுரிமைக்கான உரிமை, சுதந்திரத்திற்கான உரிமை மற்றும் சட்டத்தின் முன் சமமாக இருப்பதற்கான உரிமை உட்பட அனைத்து மக்களின் மனித உரிமைகளையும் அங்கீகரித்தது. சமவாயத்துக்கு கைச்சாத்திட்டிருந்த அரசுகள் சமவாயத்தை எவ்வாறு மதிக்கின்றன என்பதை கண்காணிப்பதற்கு மனித

உரிமைகள் குழுவானது நிறுவப்பட்டது. 1992 இல், மனித உரிமைகள் குழு *டூனென் vs. அவுஸ்திரேலியா* வழக்கை கேட்டது. தாஸ்மேனியாவின் (அவுஸ்திரேலியாவின் ஒரு மாநிலம்) அரசு ஒருபாலீர்ப்பினை குற்றமயமாக்கியது ICCPR ஐ மீறுவதாக குழு கூறியது. இந்த முடிவிற்கு பிறகு, அவுஸ்திரேலிய அரசாங்கம் தாஸ்மேனியாவில் ஒருபாலீர்ப்பை குற்றமற்றதாக மாற்றுவதற்கு ஒரு சட்டத்தை இயற்றியது.

1976 இல் நடைமுறைக்கு வந்த பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளுக்கான சர்வதேச சமவாயமானது (ICESCR), வேலை செய்வதற்கான உரிமை, ஒரு போதுமான வாழ்க்கை தரத்திற்கான உரிமை, சுகாதாரத்தை மிகவும் உயர்ந்த தரத்திலான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான அனுபவிக்கும் உரிமை, கல்விக்கான உரிமை, மற்றும் கலாசார உரிமைகள், ஏனைய மனித உரிமைகள் போன்றவற்றில் பங்குபெறும் உரிமை ஆகியவற்றை அங்கீகரித்தது. சமவாயத்துக்கு கைச்சாத்திட்டிருந்த அரசுகள் சமவாயத்தை எவ்வாறு மதிக்கின்றன என்பதை கண்காணிப்பதற்கு பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் மீதான குழு நிறுவப்பட்டது.

2019 இல், ஒரே பாலின புணர்வை குற்றமற்றதாக்குவது மற்றும் LGBTIQ மக்களின் உரிமைகளை அங்கீகரிப்பது குறித்த பரிந்துரைகளை கேமரூன், எஸ்டோனியா, கஸகஸ்தான் மற்றும் மொரீஷியஸ் அரசாங்கங்களுக்கு குழு வழங்கியது. சிறுவர் உரிமைகள் குழு (CRC); சித்திரவதைக்கு எதிரான குழு (CAT); மற்றும் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளை நீக்குவதற்கான குழு (CEDAW) ஆகியவை அவைகள் முறையே கண்காணிக்க வேண்டிய சமவாயத்தின் நடைமுறையில் மற்றும் விளக்கத்தில் பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் தடைசெய்யப்பட்ட காரணங்களையும்/ அடிப்படைகளையும் வெளிப்படையாக உள்ளடக்கியிருக்கின்றன.
2013 ஆம் ஆண்டில், 'பாலீர்ப்பு', 'பாலின அடையாளம்' மற்றும் 'பாலின வெளிப்பாடு' ஆகிய கருத்துக்கள் முதன்முறையாக ஒரு சட்டப்பூர்வமாக பிணைக்கப்பட்ட கருவியில் - அனைத்து வகைகளிலான பாகுபாடு மற்றும் சகிப்பின்மைக்கு எதிரான அமெரிக்க பிராந்திய நாடுகளின் சமவாயத்தில் ஒன்றாக இணைக்கப்பட்டன.

2011 இல், மனித உரிமைகள் பேரவையில்முதலாவது SOGI தீர்மானம் எடுக்கப்பட்டது. மனித உரிமைகள் பேரவையில் 2014 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இரண்டு தொடர்ச்சியான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 2016 தீர்மானத்தில் பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் வன்முறை மற்றும் பாகுபாடுகளுக்கு எதிரான பாதுகாப்பு விடயங்களில் ஒரு சுயாதீனமான நிபுணருக்கான ஆணை நிறுவப்பட்டது.

### யோக்கியகர்த்தா கொள்கைகள்

2006 ஆம் ஆண்டில், ஒரு பிரத்தியேகமான சர்வதேச கட்டமைப்பு மற்றும் நன்கு ஆவணப்படுத்தப்பட்ட துஷ்பிரயோகங்களின் வடிவங்களின் பின்னணியில், பல சிறந்த மனித உரிமைகள் நிபுணர்கள் இந்தோனேசியாவின் யோக்கியகர்த்தாவில் சந்தித்தனர். இந்த நிபுணர்கள் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் விளக்கத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட 29 கொள்கைகளை ஒரு ஆவணமாக ஒருங்கிணைத்தனர், இது பலதரப்பட்ட பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளங்களை கொண்ட மக்களுக்கு பொருந்துகின்றது. இந்த ஆவணம் யோக்கியகர்த்தா கொள்கைகள் என்று அறியப்படுகின்றது.

2017 இல் கொள்கைகளில் 'வைபி+10' எனப்படுகின்ற கூடுதல் கொள்கைகள் சேர்க்கப்பட்டன. இந்தக் கொள்கைகள் பாலீர்ப்பு, பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு அல்லது பால் குணாதிசயங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் குற்றமயமாக்கல் மற்றும் அனுமத்தலிலிருந்து சுதந்திரம் பெறுவதற்கான உரிமையை அங்கீகரிக்கின்றது. யோக்கியகர்த்தா கொள்கைகள் அரசுகளை ஓர்ஒப்பந்தத்தை போல சட்டப்பூர்வமாக கட்டுப்படுவதில்லை. இதன் காரணமாக, இது ஒரு மென்மையான சட்டக்கருவி என்று அழைக்கப்படுகின்றது. ஆனால் அவை LGBTIQ மக்களுக்கான சமத்துவத்தை அடைவதற்கு அங்கீகரிக்கப்பட வேண்டிய மற்றும்

| | |
|---|---|
| PRINCIPLE 1 | The Right to the Universal Enjoyment of Human Rights |
| PRINCIPLE 2 | The Rights to Equality and Non-Discrimination |
| PRINCIPLE 3 | The Right to Recognition before the Law |
| PRINCIPLE 4 | The Right to Life |
| PRINCIPLE 5 | The Right to Security of the Person |
| PRINCIPLE 6 | The Right to Privacy |
| PRINCIPLE 7 | The Right to Freedom from Arbitrary Deprivation of Liberty |
| PRINCIPLE 8 | The Right to a Fair Trial |
| PRINCIPLE 9 | The Right to Treatment with Humanity while in Detention |
| PRINCIPLE 10 | The Right to Freedom from Torture and Cruel, Inhuman or Degrading Treatment or Punishment |
| PRINCIPLE 11 | The Right to Protection from all Forms of Exploitation, Sale and Trafficking of Human Beings |
| PRINCIPLE 12 | The Right to Work |
| PRINCIPLE 13 | The Right to Social Security and to Other Social Protection Measures |
| PRINCIPLE 14 | The Right to an Adequate Standard of Living |
| PRINCIPLE 15 | The Right to Adequate Housing |
| PRINCIPLE 16 | The Right to Education |
| PRINCIPLE 17 | The Right to the Highest Attainable Standard of Health |
| PRINCIPLE 18 | Protection from Medical Abuses |
| PRINCIPLE 19 | The Right to Freedom of Opinion and Expression |
| PRINCIPLE 20 | The Right to Freedom of Peaceful Assembly and Association |
| PRINCIPLE 21 | The Right to Freedom of Thought, Conscience and Religion |
| PRINCIPLE 22 | The Right to Freedom of Movement |
| PRINCIPLE 23 | The Right to Seek Asylum |
| PRINCIPLE 24 | The Right to Found a Family |
| PRINCIPLE 25 | The Right to Participate in Public Life |
| PRINCIPLE 26 | The Right to Participate in Cultural Life |
| PRINCIPLE 27 | The Right to Promote Human Rights |
| PRINCIPLE 28 | The Right to Effective Remedies and Redress |
| PRINCIPLE 29 | Accountability |
| PRINCIPLE 30 | The Right to State Protection |
| PRINCIPLE 31 | The Right to Legal Recognition |
| PRINCIPLE 32 | The Right to Bodily and Mental Integrity |
| PRINCIPLE 33 | The Right to Freedom from Criminalisation and Sanction on the Basis of Sexual Orientation, Gender Identity, Gender Expression or Sex Characteristics |
| PRINCIPLE 34 | The Right to Protection from Poverty |
| PRINCIPLE 35 | The Right to Sanitation |
| PRINCIPLE 36 | The Right to the Enjoyment of Human Rights in Relation to Information and Communication Technologies |
| PRINCIPLE 37 | The Right to Truth |
| PRINCIPLE 38 | The Right to Practise, Protect, Preserve and Revive Cultural Diversity |

பாதுகாக்கப்பட வேண்டிய மனித உரிமைகள் பற்றிய ஒரு விரிவான விளக்கத்தை வழங்குகின்றன.

யோக்கியகர்த்தா கொள்கைகள் சர்வதேச மற்றும் பிராந்திய மட்டங்களில், குறிப்பாக ஆசியாவில் தேசிய நீதிமன்றங்களில், குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் மற்றும் நேபாளத்தில் முக்கிய தீர்ப்புகள் (நாஸ் அமைப்பு எ. டெல்லியின் NTC அரசாங்கம், மற்றும் பாண்ட் எ. நேபாளம்) யோக்கியகர்த்தா கொள்கைகளின் இருக்ககூடியவற்றை முன்னிலைப்படுத்தின. 'பாலின அடையாளம்' என்கின்ற சொல்லை சர்வதேச சட்டத்தில் மற்றும் மனித உரிமைகளின் மொழியில் ஒருங்கிணைப்பதை உறுதிப்படுத்தியமை மிகப்பெரிய வெற்றியாகும்.

மற்றைய ஒத்த மென்மையான சட்டக்கருவிகளில் பின்வருவன அடங்குகின்றன:

**1996 மொன்றியல் பிரகடனம்**

ஒருபாலீர்ப்பு ஆண்/பெண், இருபாலீர்ப்புள்ளவர் மற்றும் மாற்றுப்பாலின நபர் மனித உரிமைகள் பற்றிய மொன்றியல் பிரகடனமானது 2006 இல் மொன்றியலில் LGBT மனித உரிமைகளுக்கான சர்வதேச மாநாட்டால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு ஆவணமாகும். உலகளாவிய உத்தரவாதத்தை கொண்டிருப்பதற்கு பிரகடனமானது பல உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை முன்மொழிகின்றது.

**2013 மால்டா அறிக்கை**

மால்டாவில் நடைபெற்ற மூன்றாவது சர்வதேச இடையிலிங்கத்தவர் மன்றத்தின் பொழுது அனைத்து கண்டங்களிலிருந்தும் 30 இடையிலிங்கத்தவர் அமைப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தியது. 34 மனித உரிமை பாதுகாவலர்களால் இந்த அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏனைய கோரிக்கைகளுக்கு மத்தியில் இடையிலிங்கத்தவர்கள் தொடர்பான கட்டாய அறுவை சிகிச்சை முறைகள், சிசுக்கொலை மற்றும் இடையிலிங்கத்தவர்களை கொல்வது, மற்றும் இடையிலிங்கத்தவர்களின் கட்டாய கருத்தடை போன்றவற்றை இல்லாதொழிக்க வேண்டும் என இந்த அறிக்கை கோருகின்றது.

BRIDGE to Equality (சமத்துவத்தை தேடுதல்) என்பது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினூடாக இலங்கையில் உள்ள LGBTQ மக்களுக்கான மனித உரிமைகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமாகும். LGBTQ சமூகத்திற்கான நீதி விளைவுகளை மேம்படுத்த நீதித்துறை செயற்பாட்டாளர்கள் (நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் பிற சட்ட வல்லுநர்கள்), ஆர்வலர்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களை செயல்படுத்துவதனூடாக் தற்போதைய சட்டக் கட்டமைப்பால் சுமத்தப்படும் சவால்களை சமாளிப்பதுடன், LGBTQ மக்களின் மனித உரிமைகளின் ஒட்டுமொத்த மேம்பாடு மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துகிறது.

BRIDGE to Equality (சமத்துவத்தை தேடுதல்) எனும் இந்த செயற்திட்டமானது DAST, தேசிய திருநர் வலையமைப்பு (NTN) மற்றும் யங் அவுட் ஹியர் (YOH) ஆகிய அமைப்புகளின் கூட்டாக 2021 முதல் சர்வதேச சட்டவல்லுனரகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.


facebook.com/BridgetoEquality
instagram.com/bridgetoequality2021
twitter.com/B2ECampaign
bridgetoequalitycampaign@protonmail.com